பக்கங்கள்: பன்னிரண்டு+VI=18

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை14 செவ்வாய்க்கிழமை (27.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:062

# நேற்று மட்டும் 100 க்கும் அதிகமான அப்பாவி மக்கள் பலி! பாதுகாப்பு வலயம் மீது பல மணி நேரம் தொடர் ஷெல் வீச்சு!!

கொழும்பு, ஜன. 27

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டுப் பகுதியில் தொடர்ந்து வீழ்ந்து வெடித்த ஆட்லறி ஷெல்களால் நேற்று மட்டும் ஆகக்குறைந்தது நூறு அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடித்துப் பலியானார்கள் என்று தகவல்கள் தெரிவித்தன.**

அரசாங்கம் சில நாள்களுக்கு முன்னர் மக்கள் பாதுகாப்பு வலயமாக அறிவித்த உடையார்கட்டில் - மிகக் குறுகிய நிலப் பரப்பில் - லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த வேளை ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இணையத் தளங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

ஐந்து மணி நேரம் தொடர்ந்து நீடித்த ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் காயமுற்றோரைக் கவனிக்கக் கூட ஆள்கள் இருக்கவில்லை. பலரும் பதுங்கு குழிகளுக்குள் பீதியுடன் ஒதுங்கிக்கொண்டனர்.

பிந்திக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஷெல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் 300க்கும் அதிகமான மக்கள் கொலையுண்டிருக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் அறிவித்த மக்கள் பாதுகாப்பு வலயமான புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் சந்தி மற்றும் விசுவமடு - உடையார் கட்டு ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் நேற்று நடத்திய கண்மூடித்தனமான அகோர பீரங்கித் தாக்குதலில் ஆகக் குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டதுடன் 200 க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகளில் சிதறிக்கிடக்கும் பொதுமக்களின் சடலங்கள்

கொழும்பு, ஜன.27

முல்லைத்தீவில் உடையார் கட்டுப் பகுதி வீதிகளில் பொதுமக்களின் பல சடலங்கள் சிதறிக்கிடக்கின்றன என்றும் அச்சடலங்களை மீட்கமுடியாத நிலையில் மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர் என்றும் கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் மரண எண்ணிக்கை இரண்டு நாள்களாக மிகவும் அதிகரிப்பு

### ஐ.நா. இணைப்பாளர் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 27

கடந்த இரண்டு நாள்களாக முல்லைத்தீவில் நிலைமை படுமோசமாகி உள்ளது. ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இப்போது பெரும் நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளது.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர இணைப்பாளர் நீல் புஹுனே நேற்று ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

போர் நடைபெறும் இடம் மிகச் சுருங்கிவிட்டது. அந்தக் குறுகிய நிலப்பரப்பில் பல லட்சக்கணக்கான மக்கள் கூடி விட்டனர். இதுவரைகாலமும் பொதுமக்களின் மரணங்களைத் தவிர்ப்பதில் நாட்டங்காட்டிய இரு தரப்பாரும் இப்போது சண்டையில் தீவிரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் ஆயுதங்களைக் கைவிடத் தயார் என்று இந்தியத் தலைவர்களுக்கு அறிவிப்பின் யுத்த நிறுத்தம் குறித்து அரசு சிந்திக்கும்

## ஜனாபதி மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி27

**விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு தாங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணையத் தயார் என்று இந்திய அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத் தால், அரசாங்கம் அவர்களுடன் யுத்த நிறுத்தம் செய்வது குறித்துச் சிந்திக்கும்.**

**இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ. இணையத்தளம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.**

(12 ஆம் பக்கம் பார்க்க)



## ஊடக அமைப்புகள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.27

'ரிவிர' ஆசிரியர் உபாலி தென்னக்கோன் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்கு தலைக்கண்டித்தும்-ஊடகஅடக்குமுறைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் கல்வி இணைப்பிதழ் உள்ளே**

## புலிகளின் வானொலி உரிமத்தை ரத்துச் செய்ய அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 27

விடுதலைப் புலிகளுக்கு அனுமதிக்கப்பட்ட வானொலி சேவை உரிமப் பத்திரத்தை ரத்துச் செய்ய அரசு தீர்மானித்திருப்பதாக அரசின் சார்பில் சிரேஷ்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பின்நோக்கி நகர்வதும் பின்பு இழந்த இடங்களைப் பிடிப்பதும் விடுதலைப் போராட்டத்தில் வழமை என்கிறார் நடேசன்

கொழும்பு, ஜன.27

''விடுதலைப் போராட்டங்களில் பின்நோக்கி நகர்வதும், பின்பு முன்னோக்கி இழந்த இடங்களைப் பிடித்து சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்துவதும் எல்லாவிடுதலைப் போராட்டங்களிலும் நிகழ்ந்திருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.''

-இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் நேற்றிரவு பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

எமது மக்கள் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அரச படைகளின் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு, பொருளாதாரத் தடை, மருந்துத்தடை என்பன வற்றால் பாரிய மனித அவலங்களுக்கு மக்கள் முகம் கொடுக்கின்றனர்.

திட்டமிட்டு மக்களை அழிக்கும் நோக்கில் அரசு செயல்பட்டுவருகின்றது. விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் காடுகளில் இரு தரப்பும் கடும் சமர்!

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவின் காட்டுப் பகுதிகளில் நேற்று திங்கட்கிழமை இராணுவத்திருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு நகரப் பகுதியில் தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலைகளைப் படையினர் பலப்படுத்திவரும் அதே வேளை, விசுவமடு காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளுடன் கடும் மோதல் இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஆட்லறி, மோட்டார்கள் உட்பட சகல ஆயுதங்களையும் பயன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## வன்னிப் பேரவலத்தை நிறுத்தக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

வன்னியில் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மனிதப் பேரவலத்தை நிறுத்தி இரு தரப்பினரும் சமாதான நடவடிக்கையில் ஈடுபடக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட வகுப்புப் பகிஷ்கரிப்பு மற்றும் நிர்வாக முடக்கல் காரணமாகப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் செயலிழந்தன.

பெரும்பாலான மாணவர்கள் நேற்றுப் பல்கலைக்கழகத்துக்குச் சமுகமளிக்கவில்லை. வருகை தந்த ஒரு சில மாணவர்களும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களிலும் பெரும்பாலானோர் பணிகளில் ஈடுபடவில்லை. இதனால் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்த வகுப்புப் பகிஷ்கரிப்பு மற்றும் நிர்வாக முடக்கல் போராட்டம் தொடரும் எனவும் சொல்லப்படுகிறது. (அ-50)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க மக்களின் கருத்துகளுக்கு முதலிடம் என்கிறார் அமைச்சர்

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் போது பொதுமக்களின் கருத்துகளுக்கே முதலிடம் வழங்கப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியின் குறைபாடுகள், தேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று ஆராயப்பட்டது. அப்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.குடாநாட்டில் வாழ்ந்து வருகின்ற பொதுமக்களின் தேவைகளை அவர்களின் மூலமே அறிந்து அவர்களது கருத்துக்களுக்கு முதலிடம் கொடுத்து அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதே தமது எதிர்பார்ப்பாகும் என்றும் பொதுமக்களின் நேரடி பங்களிப்புகள் இல்லாத அபிவிருத்தித் திட்டங்களால் உரிய பயனேதும் கிட்டப்போவதில்லை. எனவே பொதுமக்கள் முன்வந்து தங்களது பகுதிகளில் நிலவுகின்ற குறைபாடுகளையும் தேவைகளையும் சமூக நோக்குடன் முன்வைக்க வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டதாக சந்திப்புத் தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 | | 29 |
| ★ |  | ★ |
| 08 | | 12 |
| ★ | | ★ |
| 1930 | | 2008 |

### அமரர் வேலாயுதபிள்ளை உருத்திரலிங்கம்

(சின்னச்செல்வம்)

எம்மையெல்லாம் அன்புடனும் பாசத்துடனும்
அரவணைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த
அன்புத் தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (28.01.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோயிலடி,
கோண்டாவில். (82215) - *குடும்பத்தினர்.*

## பஸ்தரிப்பிடம் திறப்பு விழா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு சமீபமாக அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பு நிலையத்தின் திறப்புவிழா நாளை புதன்கிழமை காலை இடம்பெறும்.

பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருள் திரு. ஜேசுரட்ணம் அடிகள் இந்த பஸ்தரிப்பு நிலையத்தை திறந்து வைக்கவிருக்கிறார். (1-130)


PC SOLUTIONS

UNBELIEVABLE OFFER

| Processor | |
|---|---|
| 2.2 Dual core intel | 8800/= |
| 1.8 Dual core celeron | 5100/= |
| **Hard disk** | |
| 500GB Samsung | 9150/= |
| 160GB Samsung | 5300/= |
| **DVD + RW** | |
| Sony - Light Scribe | 4300/= |
| Samsung | 3500/= |
| **Monitor** | |
| 15.6"Samsung (LCD) | 14650/= |
| 17" Viewsonic(LCD) | 18500/= |
| **Mother Board** | |
| Foxconn G31MX | 5600/= |
| Asus P5GC | 6250/= |
| **Memory** | |
| 1GB DDR 11Kingston | 1750/= |
| 2GB DDR 11Kingston | 3000/= |
| **Pendrive** | |
| 2GB TDK | 900/= |
| 4GB TDK | 1100/= |
| **Casing** | |
| ATX Tower | 4000/= |
| **Printer** | |
| HP P1005 Laserjet | 11600/= |
| **Woofer** | |
| 2.1 SonicGear | 4100/= |
| **Speaker** | |
| X5 Tech | 600/= |

கணனி சம்பந்தமான அனைத்து சேவைகளும் தரமாகவும் மிகக் குறைந்த கட்டணத்துடனும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

PC SOLUTIONS
Computer Sales and Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA


## வெளியிணைப்பு இயந்திரப் பாவனை ஒன்றைவிட்ட ஒரு நாளே

கடந்த வாரம் தொடக்கம் ஒன்றைவிட்ட ஒரு நாளிலேயே குடாக்கடலில் மீன் பிடிக்கச் செல்ல வெளியிணைப்பு இயந்திரங்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை பாய் வள்ளங்களில் மீன்பிடிக்க தினமும் அனுமதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளியிணைப்பு இயந்திரங்களை அனுமதிக்கும் தினங்களில் 5 லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே கொண்டு செல்ல படையினர் அனுமதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் தொலைவுக்கு அதாவது பாலைதீவு போன்ற இடங்களுக்கு சென்று தொழில் செய்துவர 5 லீற்றர் மண்ணெண்ணெய் போதாது ஒரு வழிக்கு எரிபொருளை பாவிக்கும் கடற்றொழிலாளர்கள் பாயை ஒரு வழிக்குப் பாவித்து குடாக்கடலில் தூர இடங்களுக்குச் சென்று மீன்பிடித்து மீள்வதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-160)

## கொடிகாமத்தில் இருந்து முதல் சேவை 5.45க்கு

கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துச் சபையின் முதல் சேவை காலை 5.45க்கு புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது காலை 6.00 மணிக்கு ஆரம்பித்த சேவையை 15 நிமிடங்கள் முன்னகர்த்தி ஆரம்பிக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் கொடிகாமத்தில் இருந்து முதல் மினிபஸ் சேவையினை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் காலை 5.30 மணிக்கு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் ஆறுமுகம்



வசந்தபுரம், இளவாலையை நிரந்தர முகவரியாகவும் பழைய ராஸ்போமரடி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் ஆறுமுகம் நேற்று (26.01.2009) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் வரதராணி, கெங்காதரன் (ஜேர்மனி), வாகினி (சுவிஸ்), பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வில்வராசா, கோபி (ஜேர்மனி), கமலதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(82214) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியர், தென்மராட்சி வலயம்)



கரம்பகம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பாலாவி தெற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியர், ஆரம்பக்கல்வி, தென்மராட்சி வலயம்) நேற்று (26.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செ.சுந்தரலிங்கம் (கானர்நகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் அருணாசலம், சரவணமுத்து, கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருவாதவூரர் (ஓய்வுபெற்ற காசாளர், தெ.கி.ப.நோ.கூ.சங்கம்), அமரர் மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, மகேஸ்வரி மற்றும் அருணாசலம் (ஓய்வுபெற்ற அதிபர்), அன்னலட்சுமி, ஜெயரஞ்சிதம் (கொழும்பு), இராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாலாவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பாலாவி தெற்கு,* செ.சுந்தரலிங்கம் (கணவர்),
*கொடிகாமம்.* (82213) சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 | | 28 |
| ★ |  | ★ |
| 05 | | 12 |
| ★ | | ★ |
| 1960 | | 2008 |

### சேனாதிராஜா தயாளன்


(இலங்கை மின்சார சபை ஊழியர்)

ஆல் போல் விழுதுவிட்டு ஆண்டுகள் பல வாழ்வீர் என
ஆவலுடன் காத்திருந்தோம் ஆசையுடன் பார்த்திருந்தோம்
உறவுகளை பாரினிலே தவிக்கவிட்டு பாதிவயதுதனில்
பரம[illegible] சேர்ந்தீரே

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பண்டாரி வேலுப்பிள்ளை



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி வேலுப்பிள்ளை 25.01.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, பரமநாதன், செல்லர்பொன்னு, லட்சுமி மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குகராஜா மற்றும் பவளரதி (ஜேர்மனி), ரஞ்சிதமலர், குகனேஸ்வரன் (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம், கௌதினி (கொழும்பு), ஜீவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரசாந், நிசாந் (ஜேர்மனி), டிலக்சன், துவாரகி, சுரேக்கா, சுபேக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் முருகேசு, ஆறுமுகம், வேலுப்பிள்ளை, சதாசிவம், செல்லம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,* தகவல்:
*நீர்வேலி.* (82206) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒரு நாள் காலக்கெடுவும் மூன்று வார இழுத்தடிப்பும்!

'சுகம் வரும். ஆள் தப்பாது' - என்ற பேச்சு மொழி நம் மத்தியில் அடிக்கடி பாவனையில்உண்டு.

ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எடுக்கும் குயுக்தித் தன நடவடிக்கைகளும் அறிவிப்புகளும் இத்தகைய பேச்சு மொழியைத்தான் நமக்கு நினைவூட்டுகின்றன.

இவ்விவகாரத்தைத் தமிழக முதல்வர் கையாளும் மெத்தனப் போக்கை நோக்கும்போது, பிரச்சினைக்குத் தீர்வு என்ற 'சுகம்' கிட்டும், ஆனால் ஈழத் தமிழ் மக்கள் தான் இங்கு 'தப்பவே மாட்டார்கள்' என்பது நமக்கு உறுதியாகின்றது.

ஈழத் தமிழரைக் காப்பாற்றுவதற்காக இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசுக்கு ஒரேயொரு நாள் காலக்கெடு விதித்துத் துடிப்புடன் கலைஞர் கருணாநிதி அறிவித்த போது நாமெல்லாம் மகிழ்ந்துதான் போனோம்.

'நன்றே செய்; அதை இன்றே செய்!' என்பது போல இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாயின் அதை ஒருநாளில் செய்து முடி என்று மத்திய அரசுக்கு கலைஞர் 'வெட்டு ஒன்று; துண்டு இரண்டாக' காலக்கெடு விதித்தபோது உலகத் தமிழரெல்லாம் புளங்காகிதமடைந்துதான் போனார்கள்.

ஆனால் -

அந்தக் காலக்கெடுவுக்குள் அதைச் செய்ய மத்திய அரசு தவறினால் தி.மு.க. பொதுக்குழு கூடி அடுத்த கட்டம் குறித்து ஆராயும் என்று அவர் 'இழுத்த' போது தான் வழமைபோல இவ்விவகாரத்தில் அவரின் பித்தலாட்டப் போக்கு மாறவேயில்லை என்பது வெளிப்படையாயிற்று.

மத்திய அரசுக்கு இறுதிக் காலக்கெடு விதிப்பது போல ஒரு நாள் கால அவகாசம் வழங்கிய முதல்வர் கருணாநிதி, அதை மத்திய அரசு நிறைவேற்றாவிட்டால் பதில் நடவடிக்கை என்ன வென்பதைத் தீர்மானிப்பதற்கான காலக்கெடுவை மட்டும் மூன்று வாரங்கள் தள்ளிப் போட்டு - பெப்ரவரி 15 ஆம் திகதியளவில் - தீர்மானிப்பாராம்! யாரின் காதில் பூச்சுற்ற முயல்கிறார் தமிழக முதல்வர்.....?

இலங்கையில் ஈழத் தமிழினம் வாழ்வா, சாவா என்ற உயிர்ப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றது. ஒரு மிகக் குறுகிய பிரதேசத்துக்குள் சிக்கித் தவிக்கும் மூன்று முதல் நான்கு லட்சம் அப்பாவித் தமிழர்கள் மீது குரூர யுத்த அரக்கன் தன் கொலை வெறிப் பார்வையைத் திருப்பியிருக்கின்றான். தினசரி டசின் கணக்கானோர் உடல் பிய்ந்து உயிரிழக்கும் பேரவலம். பல டசின் கணக்கானோர் அவயவங்கள் சிதறி, குற்றுயிரும் குலையுயிருமாகத் துடிக்கும் பரிதாபம். கணத்துக்கு கணம் கோரக் கொடூரம் குரூரமாக அரங்கேறும் பெருந்துயர் நிலைமை.

வன்னியில் ஒருபுறம் உணவு மற்றும் மருந்து, சுகாதார வசதிகள், உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக்கூட வசதியின்றி சிக்கியிருக்கும் மக்கள் மீது யுத்த அனர்த்தம் ஏவி விடப்பட்டிருக்கையில், அந்த மக்கள் அடுத்த நாள் வரை - அடுத்த வாரம் வரை - உயிரோடு தாக்குப் பிடிப்பார்களா என்ற பெரும் சந்தேகம் எழுந்துள்ளது. இந்நிலையில் யுத்தத்தை நிறுத்த உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய மத்திய அரசுக்கு ஒருநாள் காலக்கெடுவைக் கொடுத்த கலைஞர் கருணாநிதி, அதை மத்திய அரசு செய்யத் தவறும்போது அது குறித்து எடுக்கப்பட வேண்டிய பதில் நடவடிக்கை குறித்துத் தீர்மானிப்பதை மட்டும் மூன்று வாரம் தள்ளிப்போட்டு நீண்ட கால அவகாசம் வழங்குகின்றார் எனக் கயிறு விடுகின்றார்.

கலைஞர் கருணாநிதி மூத்த அரசியல்வாதி. சாணக்கியமும் இராஜதந்திரமும் மிக்க தலைவர். உலகத் தமிழினத்தின் தலைவராகத் தம்மை அடையாளப்படுத்த முனைபவர். அப்படிப்பட்டவர் வாழ்வா, சாவா என்ற உயிர்ப் போராட்டத்தில் சிக்கி மடிந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழினத்தின் விடயத்தில் தமது அரசியல் சித்து விளையாட்டையும், சாணக்கிய இராஜதந்திர அரசியலையும் காட்ட முயல்வது வெட்கக் கேடானது; பேரபத்தம் நிறைந்தது.

இந்த வகையில் பார்த்தால் -

ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்களைப் போலத் தம்மைக் காட்டிக்கொண்டு அதில் அரசியல் குளிர் காயும் தென்னிந்திய அரசியல் தலைவர்களை விடத், தாங்கள் ஈழத் தமிழர்களின் போராட்ட சக்திகளுக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டும், கூறிக்கொண்டும் தென்னிந்தியாவில் அரசியல் நடத்தும் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா போன்றோர் எத்தனையோ மடங்கு தேவலை......!

ஈழத் தமிழர் விடயத்தை ஒட்டி கடந்த ஆறு மாதங்களாகத் தமிழக முதல்வர் கலைஞரும் அவரது கட்சியும், அவரது தமிழக மாநில அரசும் மேற்கொண்டுவரும் போராட்டப் பிரகடனங்கள் வெத்து வேட்டுப் புஸ்வாணங்கள்தாம் - அர்த்தமற்ற அரசியல் பித்தலாட்டங்கள்தாம் - என்பது அவற்றை ஆழமாக சீர்தூக்கிப் பார்த்தால் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இவையெல்லாம் வெறும் பொம்மலாட்ட நடிப்புகளின்றி வேறில்லை.....!

## யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு 3 லட்சத்து 21 ஆயிரம் நோயாளர்களுக்குச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டில் மட்டும் 3 லட்சத்து 21 ஆயிரத்து 497 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 82 ஆயிரத்து 195 நோயாளர்கள் வைத்தியசாலை விடுதிகளில் இருந்தும் 2 லட்சத்து 39 ஆயிரத்து 302 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டில் அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

காய்ச்சல், தடிமன் போன்றன உட்படத் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களே வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை - கடந்த ஆண்டில் வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் ஆயிரத்து 16 பேர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமடைந்துள்ளதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (50-224)

### ஒன்றுகூடலும் பிரிவுபசார விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.27

வலி.கிழக்குப் பிரதேசசபையின் வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (203-300)

### கடந்த ஆண்டில் மட்டும் 6 ஆயிரம் குழந்தைகள் பிறந்தன

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் கடந்த ஆண்டில் மட்டும் 6 ஆயிரத்து 751 குழந்தைகள் பிறந்துள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் ஆயிரத்து 731 குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் பிறந்துள்ளன. அத்துடன் எதுவித பாதிப்பும் இல்லாமல் 5 ஆயிரத்து 20 குழந்தைகள் பிறந்துள்ளன . (50-224)

## கல்முனை - மண்டைதீவு கடற்பகுதிக்கு அப்பால் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குக

### குருநகர் பகுதி மீனவர்கள் கோரிக்கை

குருநகர், ஜன.27

குடாக்கடலில் குருநகர் இறங்குதுறைக்கு கிழக்குப்புறம் அமைந்துள்ள கடற்பரப்பில் மீனவர்கள் வெளியிணைப்பு இயந்திரம் பயன்படுத்தி மீன்பிடிக்கப் படையினர் அனுமதி வழங்கியுள்ள போதிலும் கல்முனை முதல் மண்டைதீவு வரையிலான கடற்பகுதிக்கு அப்பால் செல்ல அனுமதி வழங்கப்படாமையால் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

தற்போது வரையறுக்கப்பட்டுள்ள கடல் எல்லை மிகவும் குறுகியதாக உள்ளதாலும் குருநகரில் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அதிக அளவு படகுகளும், இயந்திரங்களும், கடற்றொழில் உபகரணங்களும் உள்ளதாலும் குறித்த எல்லைக்கு அப்பால் சென்று மீன்பிடிக்க படையினர் அனுமதி வழங்க வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடாக்கடலில் பகல் நேரம் மீன்பிடி தற்போது நடைபெற்று வருகின்றது. குடாக்கடல் பகுதி படையினரின் பூரண கண்காணிப்பில் இருப்பதால் எதுவித தடையுமின்றி தம்மை தொழில் செய்யப் படையினர் அனுமதிக்கவேண்டும்' என அவர்கள் கோரியுள்ளனர். இனிவரும் நாள்கள் மீன்பிடிப்பதற்கு சிறந்த நாள்களாக உள்ளமையால் இந்த நேரத்திலாவது தம்மைச் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (50-51)

## மிருசுவில் நலன்புரி நிலையத்தில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.27

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மாணவர்களின் நிலைப்பாட்டை நேற்று அங்கு சென்ற கல்விசார் குழுவினர் ஆராய்ந்தனர்.

அங்கு தங்கியுள்ள 48 மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பது குறித்து இந்தக் கல்விசார் குழுவினர் விரிவாக ஆராய்ந்தனர் எனக் கூறப்பட்டது. ,

நலன்புரி முகாமில் தங்கியுள்ள ஆசிரியர்களின் உதவியுடனேயே இவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நலன்புரி முகாமில் தங்கியுள்ள 48 மாணவர்களுக்கும் நேற்று சீருடைத் துணிகள் வழங்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. (224-207)

### கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நாளை புதன்கிழமை 'ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்' என்ற பொருளில் பாடசாலை அதிபர்களுக்கு நடத்தப்படவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

*(முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்)*

## கோதுமை மா, சீனி சங்கங்கள் ஊடாக விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.27

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள சீனி, கோதுமை மா ஆகியன ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

சீனியின் விற்பனை விலை ஒரு கிலோ 77 ரூபாவாகவும் கோதுமை மாவின் விற்பனை விலை ஒரு கிலோ 72 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இந்தப் பொருள்களுக்கான வழங்கற்கட்டளைகள் இன்று முதல் செயலகத்தில் வழங்கப்படும் என்று அரச அதிபர் சகல ப,நோ.கூ. சங்கங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை-

உலக உணவுத்திட்ட நலிந்த பிரிவினருக்கு ஜனவரி மாதத்திற்கான உணவுப் பொருள் விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகள் யாழ். செயலகத்தால் ப.நோ. கூ.சங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ப.நோ.கூ.சங்கங்கள் இன்று செவ்வாய்க்கிழமை செயலகத்தில் வழங்கல் கட்டளைகளைப் பெற்று 31 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்குமாறு யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (1)

### புதிய நலன்புரி முகாம் நவாலியில் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

தென்மராட்சி நாவலடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய நலன்புரி முகாம் அமைக்கப்பட்டு அங்கு 30 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த முகாம் அமைக்கப்பட்டது. (203-131)

### நாளை

| | |
|---|---|
| தை 15 | 28.01.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | துதியை |
| | பி.ப.04.34வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | பி.ப.12.49வரை |
| சுபநேரம்: | 05.06 - 06.36 |
| ராகுகாலம்: | 12.36 - 02.06 |

## 14 பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு அடுத்த மாதம் முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் 14 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றிய க.கர்ணன் (சாவகச்சேரி நகரம்) கா.சிவநேசராசா (கைதடி) ஆகியோர் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள புத்தூர், கோப்பாய் ஆகிய பிரிவுகளுக்கும் ந.கஜேந்திரன் (சரசாலை), மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மூளாய் பிரிவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் யா.நக்கீரன் சாவகச்சேரி நகரப் பிரிவுக்கும் து.கண்ணதாசன் சரசாலைப் பிரிவுக்கும் பொ.கோபாலேந்திரன் நாவற்குளி பிரிவுக்கும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் இ.ஈஸ்வரன் கைதடி பிரிவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொ.கோபாலேந்திரன் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.நகரில் முதலாவதும் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

# Annai Nagaa Food City

அசத்தலான OFFERS

நத்தார், புத்தாண்டு, தைப்பொங்கல் ஆகிய தினங்களை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தால் நடத்தப்பட்ட அதிஷ்டச் சீட்டிழுப்பில் பங்குபற்றி அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

- சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்
- பால்மா வகைகள் (கீல்ஸ் சொசேஜஸ் -Sausages)
- பழவகைகள், பழரசங்கள், கேக் மற்றும் கேக் உள்ளீடுகள்.
- பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்கிலேற் வகைகள்.
- அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள், சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- சீஸ், பட்டர், மாஜரின்,
- குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

⇨ முதலாம் பரிசு ரூபா 15,000.00
திரு.R.இராதாகிருஷ்ணன், தலையாழி, கோக்குவில்.
⇨ இரண்டாம் பரிசு ரூபா 10,000.00
அருட்திரு.A.J.அருள்ராஜா, 15,கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி.
⇨ மூன்றாம் பரிசு ரூபா 5,000.00
திருமதி S.உமையாள்,57,பலாலி வீதி, கந்தர்மடம்.

ஒவ்வொன்றும் ரூபா 1,000.00 பெறுமதியான 10 ஆறுதல் பரிசில்கள்
★ திரு சு.சூரியகுமார், 79, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
★ S.தர்சினி, மயிலுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
★ திரு. B.N.இராசநாயகம், உப தபால் கந்தோர் வீதி, கொக்குவில் மேற்கு.
★ திரு.எஸ்.கண்ணதாசன், பறளாய் வீதி, சுழிபுரம்.
★ திரு.அ. அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி.
★ திரு.செல்வம், 443, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
★ திரு.கே.நந்தகுமார், 79, செட்டித் தெரு, நல்லூர்.
★ திரு.கே.விஜிந்தன், நவாலி வடக்கு, மானிப்பாய்.
★ திரு.A.மனோகரன், 95, மணியகாரன் வீதி, கொக்குவில்.
★ திரு.மு.வைத்திமோகன், 273,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்ட சாலிகள் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்குரிய GIFT VOUCHER இனைப் பெற்று வேண்டிய பொருள்களை எமது ஸ்தாபனத்திலேயே பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

ஏராளம்... ஏராளம்...
- விலைக்கழிவுகள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- ஒன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் இன்னொன்றை இலவசமாகப் பெறுங்கள்

தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.



175, K.K.S. Road, Jaffna. T.P - 021222 5515, 021 222 7875


## மேலும் ஒரு தொகுதி பொருள்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மேலும் ஒரு தொகுதி பொருள்கள் நேற்றுமுன்தினம் மாலை விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

மாசிக்கருவாடு, பிஸ்கட் வகைகள், அப்பிள், தோடம்பழம், கோழி இறைச்சி வகைகள் போன்றவை எடுத்துவரப்பட்டதாகச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இதில் மாசிக்கருவாடு நூறு கிராம் 150 ரூபாவாக விற்கப் படுகின்றது.

இந்த பொருள்களைச் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனவு நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட் டது. (203-224)


## மரண அறிவித்தல்

### திருமதி கமலேந்திரம் நாகபூரணி



மட்டுவில் நாடு, பூநகரியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேந்திரம் நாகபூரணி 25.01.2009 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அவர் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை - இரத்தினபூபதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற கமலேந்திரத்தின் அன்பு மனைவியும் சிவகுமார், உதயகுமார், கமலராணி, ஜெயக்குமார், வசந்தகுமார், கமலரஞ்சினி, கல்யாணி (ஆசிரியர், நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை), கலைவாணி, கலாவதி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், யாழ்.மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தாயும் வினோதினி, பரமபதி (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), தவராஜசிங்கம் ஏஞ்சல், சந்திரவதனி, விஜயகோபால், செல்வச்சந்திரன், சுதர்சன் (ஆசிரியர், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் அர்ச்சனா, தட்சஜா, அர்ச்சஜா, யாழவன், ஆதவன், தபித்தா, எல்கானா, அஜிந், அருஷா, கஜன், கரிஷ், சச்விகா, தருண், சலோமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் பத்மலோஜினியின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய் பி.ப.2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(கமலம் ஸ்ரோர்ஸ்)
தொ.பே. 077 6660229

தகவல்:
க.உதயகுமார் (மகன்).

(82202)


## திறன் விருத்திச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச்செயலமர்வு இன்று காலை 9மணிக்குக் கொடிகாமம் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் திருமதி சி.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் "மறுசீரமைப்பும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்பள்ளிகளுக்கான பங்களிப்பும்" என்னும் தலைப்பிலும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.தவநாயகம் "முன்பள்ளிச் சிறார்களின் உள நடத்தை" என்னும் தலைப்பிலும், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் "சிறார்களின் சொல் விருத்தியினை ஊக்குவித்தல்" என்னும் தலைப்பிலும், சனசமூக உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன் "முன்பள்ளிகளுக்கான சிறந்த நிர்வாகச் செயற்பாடுகள்" என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்தவுள்ளனர். (201-131)

## தார் ஊற்றி வீதி புனரமைப்பு

நீர்வேலி,ஜன.27

நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு செல்லும் பிரதான வீதி தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த இந்த வீதியால் மாணவர்கள் சிரமப்பட்டுப் பாடசாலைக்குச் சென்று வந்தனர்.

இதேவேளை - பூதர் மடத்தில் இருந்து வெங்காய சங்கத்திற்குச் செல்லும் பிரதான வீதியையும் தார் ஊற்றிப் புனரமைக்குமாறு இப்பகுதி மக்கள் வலி.கிழக்குப் பிரதேசசபையிடம் கோரியுள்ளனர்.

இந்த வீதிக்குத் தார் ஊற்றிப் புனரமைக்காவிட்டால் கற்கள் கிளம்பி வீதி சேதமடையலாம் என்று கூறப்படுகின்றது. (203-224)

## தொண்டர் ஆசிரியர்களை ஒன்றுகூடுமாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் களை நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

[illegible] சந்திக்கவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-201)

## நாச்சியம்மையார் தின போட்டிகள்

யாழ்.சைவபரிபாலன சபை அடுத்த மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை மேற்படி சபையின் நாவலர் ஆச்சிரம மண் டபத்தில் நடத்தவுள்ளது.

இதனையொட்டி பாடசாலை மட்டத் திலான பண்ணிசைப் போட்டி, திருக் குறள் மனனப்போட்டி ஆகியவற்றை எதிர்வரும் 4ஆம்திகதி புதன்கிழமை மேற்படி சபை யாழ்.இந்துக் கல்லூரி மண் டபத்தில் நடத்தவுள்ளது. (201)


## காணி விற்பனை

யாழ்.மாநகர எல்லைக்குள் யாழ்.பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக் கமாக 4 பரப்புக் காணி கிணற்று வசதியு டன் கூடியது உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 077 9522521
சிறி : 077 5924843
077 6111419

(82208)



## மரண அறிவித்தல்

### பொன்னையா கிருஸ்ணமூர்த்தி

(சங்கானை ப.நோ.கூ.சங்க முன்னாள் செயலாளர்)



சங்கானை, பிளாக் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கிருஸ்ணமூர்த்தி நேற்று (26.01.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் அருந்ததி தேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, மகேஸ்வரி மற்றும் தங்கரத்தினம், சுசீலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும் நிறஞ்சன் (ஆசிரியர் - மன்னார்), நிறஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமரத்தினம் (தறுமி - நேசம் அழகுநகைமாடம் - சங்கானை), சுமதி (மன்னார் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனும் அருண், கரிசாந், திவ்வியா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் வீதி,
சங்கானை.

தகவல்:
கி.நிறஞ்சன் (மகன்).

(82203)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்' நூல் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
வைத்திய கலாநிதி எஸ்.ஜமுனாநந்தா, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், கலாநிதி க.குணராசா ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை பேராசிரியர் க.குகபாலன் பெற்றுக்கொள்வதை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

## யாழ்.ப.நோ.கூ.சங்க நடமாடும் சேவை இந்த வாரம் அரச நிறுவனங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் கூட்டுறவுச் சேவை நிலையம் இந்த வாரத்தில் அரச நிறுவனங்களில் இடம்பெறும் என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை சேவை ஆரம்பமானது. யாழ்.கல்வித் திணைக்களம், சுகாதார திணைக்களம், யாழ்.மாநகரசபை போன்றவற்றிலும் சேவை இடம்பெற்றது.

நாளை புதன்கிழமை யாழ்.செயலகம் யாழ்.பிரதேச செயலகம் ஆகியவற்றிலும் 30ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலை, பனை அபிவிருத்திச்சபை, மாவட்ட கூட்டுறவு சபை போன்றவற்றிலும் இந்த கூட்டுறவு நடமாடும் சேவை இடம்பெறும்.

இந்தக் கூட்டுறவு நடமாடும் சேவை மூலம் அரச ஊழியர்கள், சீனி, மா, அரிசி, றவ்வை உட்பட அனைத்துப் பொருள்களையும் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சங்கத் தலைவர் தெரிவித்தார். (203-224)

## வடமராட்சிப் பகுதி வயல் நிலங்களுக்கு பவுசர்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது

வடமராட்சி, ஜன.27

உரிய நேரகாலத்தில் மழை பெய்யாமையினால் வடமராட்சிப் பகுதியிலுள்ள நெல் வயல்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு வருகிறது.

கிணறுகள் இல்லாத வயல்களுக்கு பவுசர்கள் மூலம் தண்ணீர் எடுத்து வரப்பட்டு வயல்களுக்குள் பாய்ச்சப்பட்டு வருகின்றது.

வல்லை வெளியில் உள்ள நெற்பயிர்களுக்கு இவ்வாறே தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது.

விவசாயிகள் தண்ணீர் பவுசர்களைத் தத்தம் பகுதி பிரதேச சபைகளில் வாடகைக்குப் பெற்றே தண்ணீரைப் பாய்ச்சி வருகின்றனர். (203-236)

## வறிய விவசாயிகளின் பிள்ளைகள் 116 பேருக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் கமநலத் திணைக்களம் உதவுதொகை

மானிப்பாய், ஜன.27

யாழ்.மாவட்டத்தில் வறிய விவசாயிகளின் 116 பிள்ளைகளுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 116 பிள்ளை களுக்கும் 23 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் மேற்கொண்டுள்ளார்.

விவசாயிகளின் வறிய பிள்ளைகளின் மேம்பாட்டிற்காக 43 லட்சம் ரூபா நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது.

இந்நிதியில் இருந்து கிடைக்கும் வட்டி மூலம் வருடாந்தம் பாதிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவி வழங்கப்படவுள்ளது.

இதே வேளை - மேற்படி வறிய மாணவர்களிற்கான நிதி சேகரிப்பில் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனமே கூடுதல் நிதியை வழங்கியுள்ளதாகக் கமநல திணைக்களம் அறிவித்துள்ளது. (203-95)

## நவாலி விவசாய சம்மேளனம் இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது

மானிப்பாய், ஜன.27

நவாலி விவசாயிகள் சம்மேளனம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை இரு சம்மேளனங்களாகப் பிரிக்கப்படவுள்ளது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத் தலைவர் வே.சிற்றம்பலம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

நவாலி விவசாயிகள் சம்மேளனம் ஜே/134 நவாலி வடக்கு, ஜே/135 நவாலி கிழக்கு, ஜே/136 நவாலி தெற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பெரிய பிரதேசமாகும்.

இதனால் விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட முடியாததால் அவர்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே நவாலி விவசாயிகள் சம்மேளனம், நவாலி வடக்கு சம்மேளனம் என ஒரு பிரிவாகவும், நவாலி தெற்கு - கிழக்கு சம்மேளனம் என இன்னொரு பிரிவாகவும் [illegible] இரு சம்மேளனங்களாகப் [illegible]க்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் சண்டிலிப்பாய் பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஸ்ணன் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். (203-95)

## வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

சுழிபுரம், ஜன.27

வலி.மேற்குப் பிரதேச சபையின் வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பிரதேச சபைச் செயலர் சு.புத்திரசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'சோஆ' நிறுவனத்திட்ட முகாமையாளர் யூடி வால்ரனும் சிறப்பு விருந்தினராக செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபனும் கலந்து கொள்வர். (203-28)



## மண்டைதீவு பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவை இனங்கள்

மானிப்பாய், ஜன.27

வெளிநாட்டு வர்ணப் பறவைகள் யாழ்.மாவட்டத்திலுள்ள மண்டைதீவு பறவைகள் சரணாலயத்திற்கு படையெடுத்து வருகின்றன.

தீவகப் பகுதியிலுள்ள மண்டைதீவுப் பிரதேசம் பறவைகள் வாழ்வதற்கேற்ற சூழலைக் கொண்ட இயற்கையான [illegible] லயப் பகுதி ஆகும்.

இங்கு பல்வேறு வகையான [illegible] கள் கால சூழ்நி[illegible] பறவை [illegible]லைக்கேற்ப வந்துள்ளன.

இவை வேலணை, மண்டைதீவு, துறையூர் பகுதி கடற்கரை[illegible]களில் நிற்பதைக் காணக் [illegible]தாகவுள்ளது.

கடந்தவருடம் மேற்படி பறவைகள் மீனவர்களால் பிடிக்கப்பட்டு ஒன்று ஆயிரம் முதல் ஆயிரத்து 500 ரூபாவரையில் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது இப்பறவைகளை இறைச்சிக்காக பிடிப்பதற்கு பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை யாழ்.ப[illegible] முன்னாள் [illegible]கலைக்கழக [illegible]ணவேந்தர் பேராசிரியர் [illegible]பா.பாலசுந்தரம்பிள்ளை மண்டைதீவு பறவைகள் சரணாலயத்தினைப் புனரமைத்து பாதுகாக்குமாறு யாழ்.உள்ளூராட்சி திணைக்களத்தினையும், சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சரையும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-95)

## 2008 கடைசிக் காலாண்டில் ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் 24,322 மெ.தொன் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன

### யாழ்.செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

மானிப்பாய், ஜன.27

2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் அதிகூடிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் யாழ்.குடாநாட்டு மக்களுக்குத் தருவிக்கப்பட்டுள்ளன.

யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் இதற்கான புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளார்.

இதில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் 1650 மெற்றிக்தொன்னும், சிமெந்து 4950 மெற்றிக்தொன்னும், உலக உணவு 1500 மெற்றிக்தொன்னும் தனியார் துறையினரால் 9225 மெற்றிக்தொன்னுமாக பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

பாடசாலைப் புத்தகம், எரிபொருள், பெற்றோல் உட்பட 535 மெற்றிக்தொன்னும், மண்எண்ணெய் 806 மெற்றிக்தொன்னும் டீசல் 5624 மெற்றிக்தொன்னும் எடுத்துவரப்பட்டன. மொத்தம் 24 ஆயிரத்து 322 மெற்றிக்தொன் பொருள்கள் யாழ்.மாவட்டத்திற்கு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட பொருள்கள் ஆகும்.

2008 ஒகஸ்டில் 19904 மெ.தொன்னும், 2008 செப்ரெம்பரில் 21714 மெ.தொன்னும், 2008 ஒக்ரோபரில் ஆகக்கூடியதான 24322 மெ.தொன் பொருள்கள் தருவிக்கப்பட்டு முறையாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - உலக உணவுத் திட்டம், பாடசாலை புத்தகங்கள், எரிபொருள்கள் என்பன குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவையே இங்கு தருவிக்கப்படுகிறதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-95)

## அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுத் திகதிகள்

அச்சுவேலி, ஜன.27

2009 ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்கள், இராணுவ முப்படையினர், ஆசிரியர்கள் ஆகியோருக்கான சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும் திகதிகள் திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்பளக் கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பாக திறைசேரியின் பணிப்பாளர் நாயகம் (செயற்பாட்டு பிரிவு) ஆர்.டி.சில்வாவினால் வெளியிடப்பட்டுள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படும் தினங்கள்**

ஜனவரி -23, வெள்ளிக்கிழமை, பெப்ரவரி -25, புதன்கிழமை, மார்ச் -25, புதன்கிழமை, ஏப்ரல் -08, புதன்கிழமை, மே -25, திங்கட்கிழமை, யூன் -25, வியாழக்கிழமை, யூலை -24, வெள்ளிக்கிழமை, ஒகஸ்ட்-25, செவ்வாய்க்கிழமை, செப்ரெம்பர் -25, வெள்ளிக் கிழமை, ஒக்ரோபர் -23, வெள்ளிக்கிழமை, நவம்பர் - 25, புதன்கிழமை, டிசம்பர் -22, செவ்வாய்க் கிழமை.

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கொடுப்பனவு**

ஜனவரி -09, வெள்ளிக்கிழமை, பெப்ரவரி -06, வெள்ளிக்கிழமை, மார்ச் -06, வெள்ளிக்கிழமை, ஏப்ரல்-, மே -07, வியாழக்கிழமை, யூன்- 09, செவ்வாய்க் கிழமை, யூலை -10, வெள்ளிக்கிழமை, ஒகஸ்ட் -07, வெள்ளிக்கிழமை, செப்ரெம்பர் -08, செவ்வாய்க்கிழமை, ஒக்ரோபர் -09, வெள்ளிக்கிழமை, நவம்பர் -10, செவ்வாய்க்கிழமை, டிசெம்பர் -08, செவ்வாய்க்கிழமை.

**ஆசிரியர்களுக்கான சம்பளம்**

ஜனவரி -20, செவ்வாய்க்கிழமை, பெப்ரவரி -20, வெள்ளிக்கிழமை, மார்ச்-20, வெள்ளிக்கிழமை, ஏப்ரல் -08, புதன் கிழமை, மே-20, புதன்கிழமை, யூன் -19, வெள்ளிக்கிழமை, யூலை-20, திங்கட் கிழமை, ஒகஸ்ட்-20, வியாழக்கிழமை, செப்ரெம்பர் -18, வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் -20, செவ்வாய்க்கிழமை, நவம்பர் -20, வெள்ளிக்கிழமை, டிசெம்பர் -18, வெள்ளிக்கிழமை.

**ஓய்வூதியக் கொடுப்பனவு**

ஜனவரி-13, வியாழக்கிழமை, பெப்ரவரி -12, வியாழக்கிழமை, மார்ச்-12, வியாழக்கிழமை, ஏப்ரல்-13, புதன் கிழமை, மே-13, புதன்கிழமை, யூன் -11, வியாழக்கிழமை, யூலை-09, வியாழக் கிழமை, ஒகஸ்ட் -12, புதன்கிழமை, செப்ரெம்பர்-10, வியாழக்கிழமை, ஒக்ரோபர்-07, புதன்கிழமை, நவம்பர் -11, புதன் கிழமை, டிசெம்பர்-10, வியாழக்கிழமை. (202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மருத்துவமுகாம்

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த சனிக்கிழமை மூளாய் ஐக்கிய சங்க வைத்திய சாலைக் கூட்டுறவுச் சங்கத்தினர் இலவச மருத்துவ முகாமை நடத்தினர்.

நூற்றுத் தொண்ணூறு நோயாளர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இலவசமாக மருந்து வகைகள் பல வகையான நோய்களுக்கு வழங்கப்பட்டன. கிராமம் கிராமமாகச் இச்சேவையை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தினர் வாரம்தோறும் செய்து வருகின்றனர். (203-28)

## 47ம் நாள் நினைவு அஞ்சலி



அன்னை மடியில் 22 . 05 . 2002

ஆண்டவன் மடியில் 12 . 12 . 2009

அமரர்
**சிறிஸ்கந்தராசா பிரசாந்** (குட்டியன்)
(யா /மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலய மாணவன்)
(27.01.2009)

எங்களின் கண்மணியாய் நீ இருக்க
உனது விழியின் பார்வையாய் நாமிருக்க
காலன் எல்லோர் பார்வையிலும்
மண் தூவியதேனோ?
உதிரம் சிந்தி அழுகின்றோம்
ஒப்பில்லா இறைவனிடம்...

உன் பிரிவால் துயருறும் : அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, மாமன்மார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார்.

உன் ஆத்மா சாந்திடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அந்தோனியார் வீதி,
மாதகல்.

தகவல் : தாய் – மாலா
மாமா – செல்வன்

# கியூடெக்-கரித்தாசின் நிவாரணப் பணி

இணுவில், ஜன.27

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம், நிஷா புயல் மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடு புடைவை அடங்கிய நிவாரணப் பொதிகளை வழங்கியுள்ளது.

கிராம சேவையாளர் பிரிவுகளினூடாக தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு மேற்படி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்படி நிறுவனத்தினர் இந்த உதவிப் பணியை மேற்கொண்டனர். (203-45)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.27

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. (203-300)

# போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.27

அரச முகாமை உதவியாளர் சேவையின் அதி உயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் அடுத்த மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை கால வரையறை இன்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட தினங்களில் கொழும்பு நகரில் ஏற்படக் கூடிய போக்குவரத்து நெருக்கடி காரணமாக போட்டிப் பரீட்சை காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிப் பரீட்சை கொழும்பு, மாத்தறை, பதுளை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகர்களில் அமைக்கப்பட்ட 50 பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. மீண்டும் இப்பரீட்சை நடைபெறும் தினமும் அனுமதி அட்டையும் சகல பரீட்சார்த்திகளுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (203-201)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்

தோற்றம் 19.08.1935

மறைவு 28.12.2008

அமரர் சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி.
(சி/556908)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## வீடு, காணி விற்பனைக்கு

அராலி மத்தி, அராலி வீதியில், நாகம்மாள் கோயிலுக்கு, அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் 5 பரப்புக் காணி, பாதி கட்டி முடிக்கப்பட்ட வீட்டுடன் 7 பரப்புக் காணி, நெல்வயல்கள், மேட்டு நிலம் என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வஸ்தார் செல்லையா,
கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை.
தொ.பே.: 021 222 8523
(82147)

## விண்ணப்பிக்கவும்

எமது நிறுவனத்திற்கு லிகிதர்/ தட்டெழுத்தாளர் பகுதிநேர, முழுநேர கடமைக்குத் தேவை.

விண்ணப்பங்களை 03.02.2009இற்கு முன்னர் நேரில் அல்லது தபால்மூலம் சமர்ப்பிக்கவும்.

இயக்குநர்,
நியூபிஸைற் கல்வி நிலையம்,
மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
(82149)

## இடவசதி தரப்படும்

உயர்கல்வி, பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு யாழ்.பிரதான வீதியில் தளபாடங்களுடன் இடவசதி தரப்படும்.

தொடர்புகளுக்கு:
222 2426, 222 3385.
(82150)

## வான் சாரதி தேவை

மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆள்கள் விரும்பத்தக்கது. இன்று 27.01.2009 10 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு: றொலெக்ஸ் பேக்கரி
இல. 118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

திருமதி **புஸ்பராணி சிவராஜரட்ணம்** (நச்சா அக்கா)



இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி சிவராஜரட்ணம் (24.01.2009) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் முருகையா சிவராஜரட்ணத்தின் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் (கிளாக்கர்) - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகையா - இளையதங்கம் தம்பதியரின் மருமகளும் Dr. மோகன் (லண்டன்), சுரேஸ் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சௌமினி, ரகுவதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விசுவநாத முதலியார் (H.N.B ஆலோசகர்), முருகதாசன் (நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை), காலஞ்சென்ற உமாராணி சிறிதரன் (கணக்காளர், நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபிகா, றிஷி, விசால் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருஞான ரட்ணம, காலஞ்சென்ற தேவதாசன், பிறேமதாசன் (செலான் வங்கி - யாழ்ப்பாணம்), சத்தியதரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''சிவவாசம்''
இளவாலை வடக்கு,
இளவாலை.
(சி/556899)

தகவல்:
மு.சிவராஜரட்ணம்
(கணவர்)

## ஓராண்டு நினைவலைகள்



அமரர் சந்தையா கனகரத்தினம் (K.K. ஐயா)

தோற்றம் 18 ★ 10 ★ 1934

மறைவு 20 ★ 01 ★ 2007

எமது குடும்ப குலவிளக்கே! நீங்கள் சிந்திய வியர்வைகள்
நமக்காகப் பட்ட துன்பங்கள் எம்மால் என்றும் மறக்க முடியவில்லை
சுகமான உங்கள் நினைவுகளை சுமந்தவாறு என்றும் நாங்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம்

82/7, கண்டிவீதி,
சுண்டிக்குளி.
(சி/556863)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்



அமரர் உயர்திரு
**சரவணமுத்து தில்லையம்பலம்** (முன்னாள் தபாலதிபர்)

மண்ணில் 25.05.1916
விண்ணில் 08.02.2008

திதி: 27.01.2009

ஆண்டொன்று சென்றதன்றோ அப்பா உமைப்பிரிந்து
நீண்ட நெடுந்துயரில் நித்தலுமே வாடுகின்றோம்;
தூண்டு சுடரனையீர், சுபிட்சமுடன் நாம் துலங்க
வேண்டும் பணிபுரிந்து வித்தகராய் ஆக்கி வைத்தீர்!
ஆண்டீர் எமையெல்லாம் அன்பாலும் பண்பாலும்,
எண்டுமைப்போல் யாரும் இப்புவியில் இல்லை ஐயா,
ஆண்டவனாம் தில்லை யம்பலமாய் வந்துதித்தீர்!
மீண்டும் பிறந்துவந்தெம் வேதனையைத் தீர்ரோ?

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள் - சிவானந்தன்
சரவணமுத்து, ம... 
மீசாலை மேற்கு, மீசாலை.

## மரண அறிவித்தல்

திருமதி **விசாலாட்சி பேரம்பலம்**



காங்கேசன்துறை, பருத்தித்துறை வீதியை பிறப்பிடமாகவும், மானிப்பாய் பெற்றோல் நிலைய அருகாமையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி பேரம்பலம் 23.01.2009 காலமானார்.

அன்னார் பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், தவராஜசிங்கம்(புகையிரத இயந்திரவியலாளர்), பத்மாவதி, காலஞ்சென்ற பரிமளாதேவி மற்றும் ஜெயதேவி(ஜேர்மனி), யமுனாதேவி (சுவிஸ்), ஜெயராசசிங்கம்(லண்டன்), சியாமளாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி தெட்சணாமூர்த்தி(L.C.L), சிறிதரன் (சுந்தர்சன் மானிப்பாய்), தெய்வேந்திரன் (ஜேர்மனி), துரைரட்ணம்(சுவிஸ்), சந்திரரஜனி (லண்டன்), கணேசநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் அபிராமி, லாவண்யா, ரஜனி, திலீப்(சுவிஸ்), சுஜிதா, திலக், சித்தியா, ரவிக்குமார் (லண்டன்), சங்கர், சர்மிளன், நிரோஜன்(ஜேர்மனி), அனுஜன் (ஜேர்மனி), தனுஜன்(ஜேர்மனி), யாழினி(சுவிஸ்), விதுசன்(சுவிஸ்), நிதர்சன் (ஜேர்மனி) யதுர்சன்(லண்டன்), நிரான்(லண்டன்), மதுசன், தனுசன், யதுசன், சுகன்ஜா, கேனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய்.
(பெற்றோல் நிலையம் அருகில்).

தகவல்:
கணவர்-பேரம்பலம்
மகன்-தவராஜசிங்கம்(தவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் பிள்ளைகளை சேர்ப்பதுடன் பெற்றோரின் கடமை முடிந்துவிடுவதில்லை

## கால்கோள் விழாவில் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

சித்தன்கேணி, ஜன.27

பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதுடன் மட்டும் பெற்றோரின் கடமைமுடிவதில்லை. அவர்கள் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தைப் பெற்று வாழ்க்கையில் முன்னேறப் பெற்றோர்களே கூடிய பங்காற்ற வேண்டும்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் உரையாற்றும் போது கல்லூரி அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

முதலாம் தர வகுப்பாசிரியர் சபீசா குலேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அதிபர் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

2005ஆம் ஆண்டு முதல் பாடசாலையில் முதல் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களை சந்தோசப்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா இன்று சகல பாடசாலைகளிலும் நடைபெறுகின்றது. உள்ளத்தில் கள்ளமற்ற இந்த இளம் பாலகர்கள் காலத்தால் அழியாத கல்விச் செல்வத்தைப் பெறப் பெற்றோர்கள் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலையில் செலவிடும் நேரத்தை விட பெற்றோர்களுடனேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர்.

எனவே, அவர்களது முன்னேற்றத்தில் பெற்றோர்தான் பங்கெடுக்க வேண்டும்.

பலவிதமான கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகள் சுபீட்சமாகவும் வாழ்க்கையில் முன்னேறக் கூடிய கவனம் எடுத்து பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும்- என்றார்.

(203-112)

## மீளக்குடியமர்வோர் அமைப்பு: தென்மராட்சி தெற்கில் உதயம்

தென்மராட்சி தெற்கு மீறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி- நாவற்குழியின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளில் இருந்து 1999ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோரை ஒன்றிணைத்து தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கம் எனும் பெயரிலான அமைப்பு ஒன்று கடந்த சனிக்கிழமை கைதடி ப.நோ.கூ.சங்க பொது மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஜே/298, ஜே/299, ஜே/297 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கான பதிவுகளைக் கிராம சேவகர்களூடாக இந்தச் சங்கத்தினர் மேற்கொண்டனர். பதிவு செய்யாதோரை இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கம் கேட்டுள்ளது. (1-203-288)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு மூலதன நன்கொடை வந்து சேர்ந்தது

நல்லூர், ஜன.27

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 2008 ஆம் ஆண்டுக்குரிய மூலதன நன்கொடை தற்சமயம் யாழ்.மாநகர சபைக்கு வந்துள்ளது.

2007ஆம் ஆண்டு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கு அமைவாக இம்முறையும் இது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோண்சன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்.மாநகரசபையின் மகப்பேற்று பராமரிப்பு நிலையத்திற்கு 6 ஆயிரம் ரூபாவும் மலசல கூட பராமரிப்பு நன்கொடையின் கீழ் சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் வசதி குறைந்த, வருமானம் குறைந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பொது மலசல கூட பராமரிப்பு தொடர்பான செயற்றிட் டத்தைக் கருத்தில் கொண்டு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-111)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் எந்திரவியல் பட்டப்படிப்பினை தொடரும் மற்றும் தொடர இருக்கும் மாணவர்களுக்கான ஆங்கில தகைமைகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தினை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

## உயர்தரப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு ஊடகக் கல்வி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.27

ஜி.சீ.ஈ.உயர்தரப்பாடசாலை அதிபர்களுக்கு "ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் மேற்படி நிலையப் பணிப்பாளர் பேராசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் வீ.செல்வராஜா, தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தீவகக் கல்விப் பணிப்பாளர் பி.வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தொடக்கவுரையை யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி சோ.கிருஸ்ணராஜா நிகழ்த்துவார். கருத்துரைகள் வரிசையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் என்.சண்முகலிங்கன் "ஊடக அறிவும் பாடசாலை மாணவர்களும்" என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

"பாடசாலை மட்டத்தில் அறிமுகமாகும் ஊடகக் கல்வி" என்னும் தலைப்பில் ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன், ஊடகக் கல்வியில் பாடசாலை அதிபர்களின் வகிபங்கு" என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

மேற்படி கருத்தரங்கில் யாழ்.கல்வி வலயத்தில் 24 பாடசாலைகளும், வலிகாமம் கல்வி வலயத்தில் 19 பாடசாலைகளும் , வடமராட்சி கல்விவலயத்தில் 14 பாடசாலைகளும், தீவகக் கல்வி வலயத்தில் 10 பாடசாலைகளும், தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 10 பாடசாலைகளும் கலந்து கொள்ளவுள்ளன.

(203-201)

## ஆலயக் குளத்தில் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.27

ஆலயக் குளத்தில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவன் தாமரைக் கொடியில் சிக்கி மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த இரத்தினம் சஜீபன் (வயது 16) என்னும் மாணவனே மரணமானவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதோச விரதத்திற்காக சாவகச்சேரி சிவன் கோயிலுக்குச் சென்ற இந்த மாணவன் ஆலயக் குளத்தில் குளிக்கச் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றது. கடந்த சனிக்கிழமை காலை சடலம் கரையொதுங்கியது.

இந்த மாணவன் சனிக்கிழமை நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் கணித பாடத்திற்குத் தோற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். (1-207-131)

## முன்பள்ளிகளுக்கு ஜசாக் நிறுவனம் உதவி

கோப்பாய், ஜன.27

வலி கிழக்குப் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட வசதி குறைந்த இனம்காணப்பட்ட 22முன்பள்ளிகளுக்குக் கற்றல் செயற்பாட்டுக்குரிய தளபாடங்களை ஜசாக் நிறுவனம் வழங்க முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (202-72)

## வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில்...



இலங்கை வங்கியின் காரைநகர் கிளையில் இடம்பெற்ற புத்தாண்டு வைபவத்தில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் உரையாற்றுவதையும் கிளைமுகாமையாளர் இ.சிவகுமாரன் மற்றும் சமயக் குருமார் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



செலிங்கோ ஆயுள் பகுதியின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான கம்பர் மலையைச் சேர்ந்த சந்திரன் வசந்தன் என்பவருடைய மரணத்திற்கு பின்னரான பிரதீப இழப்பீட்டுத் தொகையாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை அவரின் சகோதரியான எஸ்.செவ்வந்தியிடம் நெல்லியடிக் கிளை முகாமையாளர் ரி.நிரோஜன் வழங்குவதையும் அருகில் விற்பனை நிறைவேற்றுநர் எஸ்.ராஜ்குமார், ரி.சோபனா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வடவலயத்தில் 2006/2007 ஆண்டுக்கான காப்புறுதிப் பத்திரங்களை அதிகப்படியாக விற்பனை செய்தமைக்காக சுழிபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவபாதரத்தினத்துக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.



இலங்கை வங்கியின் ஸ்மார்ட் இன்வெஸ்ரர் கணக்கு அறிமுக வைபவம் யாழ்.இரண்டாம் மேற்றரக் கிளையில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் வாடிக்கையாளரான பி.அரசரத்தினத்துக்குச் சான்றிதழை வழங்கிக் கணக்கை ஆரம்பித்து வைக்கிறார்.



மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை நடத்திய 2008ஆம் ஆண்டுக்கான ஜயஸ்ரீ மாதாந்தச் சீட்டிழுப்பில் சிங்கர் மெசினைப் பரிசாகப் பெற்ற அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த [illegible] திருவிளங்கம், முகாமையாளர் ந.துரைராசாவிடமிருந்து பரிசைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## கனகசபாபதி மிதுலன் (யாழ்.மத்திய கல்லூரி)
மாவட்ட நிலை - 1, பெறுபேறு: 3ஏ, வர்த்தகப் பிரிவு



என்னுடைய ஆரம்பக் கல்வியினைச் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையிலும் பின் 3 மாதம் சாவ.இந்துக் கல்லூரியிலும் கற்றேன். இடப்பெயர்வின் காரணமாகச் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்திலும் அதன்பின் தரம் 7ல் இருந்து உயர்தரம் வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்றேன்.

என்னால் சாதாரண தரத்தில் கணித பாடத்தினை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியாமையால் உயிரியல், கணித பாடங்களைத் தவிர்த்தபோது அயலவர் கூறிய ஆலோசனையின்படி வர்த்தகத் துறையினைத் தெரிவுசெய்தேன்.

என்னால் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. இதனால் அன்று ஏற்பட்ட மனத்தாக்கமும், சிறிய அனுபவமும் எனது மனதில் உயர்தரக் கல்விக் காலங்களில் நன்றாக படிக்க வேண்டும் என்ற உணர்வினை ஏற்படுத்தியது.

பரீட்சைக்குரிய நாள்களினை எண்ணியபடியே படித்தமையால் பரீட்சை நெருங்க நெருங்க என்னால் படிக்கமுடியாமால் போனது. ஆனாலும் என்னுடைய ஆசிரியர்கள் என்னைத் தைரியப்படுத்தினார்கள். ஒவ்வொரு தவணைப் பரீட்சைக்குமுரிய பாடங்களைக் படித்து முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கலண்டரில் பாடங்களைக் குறித்து அதற்கேற்றபடி படித்து தவணைப் பரீட்சைகளை நன்றாக எழுதினேன். இதனால் என்னுடைய இலக்கினை நோக்கி இலகுவாகச் செல்ல முடிந்தது.

என்னுடைய ஆசிரியர்கள் வெளிமாவட்ட வினாத்தாள்களினை எடுத்து எமக்கு பரீட்சையாக வைத்தமையால் போதியளவான பயிற்சியினைப் பெறமுடிந்தது. கணக்கியல் பாடத்தினை வீட்டில் நேரம் கணித்துப் பயிற்சிகளைத் தொடர்ச்சியாக செய்தமையால் பரீட்சை மண்டபத்தில் நேரப்பிரச்சினையை முற்றுமுழுதாகத் தவிர்க்க முடிந்தது. வீதியால் செல்லும்போதும் கூட வீதங்களையும், பாடக்குறிப்புகளையும் மனப்பாடம் செய்தபடியே செல்வேன்.

அதிகளவான வினாக்களினை எதிர்பார்த்தபடியே சென்றேன். ஆனால் எதிர்பார்த்தபடி அதிக வினாக்கள் வரவில்லை.

தேசிய மட்டத்தில் முன்னிலை பெறவேண்டும் என்றே படித்தேன். இதனால் விளையாட்டு, பொழுதுபோக்கு, நித்திரை என்பவற்றைக் குறைத்தபடியே பரீட்சையினை நோக்கி நகர்ந்தேன். பரீட்சைக் காலத்தில் ஏற்பட்ட மனத்தாக்கமும் என்னுடைய அழகற்ற கையெழுத்துமே என்னுடைய பின்னடைவுக்குக் காரணம் எனத் தற்போது கவலைப்படுகின்றேன்.

இறைவன் எனக்கு நல்ல ஆசிரியர்களினையும் நல்ல நண்பர்களினையும் தந்தான். என்னுடைய கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களும் என்னுடன் நன்றாக நெருங்கிப் பழகி ஏன் படிக்கவேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்று அறிவுரை கூறி ஊக்கப்படுத்தினார்கள். எனவே இலகுவாக அவர்களின் ஆசீர்வாதங்களை என்னால் பெற்று நன்றாகப் பரீட்சை எழுத முடிந்தது. இது அவர்களுடைய வழிகாட்டலுக்குக் கிடைத்த வெற்றி.

## சிவசுப்பிரமணியம் கோபிகா
பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



எனது வீட்டுக் கஷ்ரத்தின் மத்தியிலும், பொருண்மிய நெருக்கடியிலும் படிக்கவைத்த எனது தந்தையாரும் தாயாரும், அத்தோடு எனது கற்றல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக கல்லூரி ஆசிரியர்களும், அதிபரும் எனது சக மாணவ, மாணவிகளும், அயலவர்களும் ஊக்குவித்தமையே எனது பெறுபேற்றுக்கு மூலகாரணம் ஆகும்.

வினாத்தாளினைப் பார்த்து விடையளித்துக் கொண்டிருக்கும்போது நேரம் அதிகம் எடுத்தது. ஆனால் கடினமான கேள்விகளைத் தவிர்த்து இலகுவான கேள்விகளுக்கு முதலில் விடையளித்தேன். பின் கடினமான கேள்விகளுக்கு நிதானமாகச் சிந்தித்து விடை எழுதினேன். இதன் மூலம் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது.

தொடர்ச்சியான மீட்டல் பயிற்சிகளையும் கடினமாக மனப்பாடம் செய்யும் முயற்சியையும், அதிகமாகக் கிரகிக்கும் திறனையும் என்னுள் வளர்த்துக்கொண்டேன்.

படிப்பதற்குத் தேவையான மின்சார வசதி, மேசை என்பன இல்லாதபோதும் அதனைக் கருத்திற்கொள்ளாது குப்பிவிளக்கிலேயே எனக்குத் தேவையான சகல பாடங்களையும் படித்துப் பரீட்சையை வெற்றிகரமாக எழுதியதால் சிறப்பான பெறுபேற்றைப் பெறமுடிந்தது.

பரீட்சையில் வந்த வினாக்கள் பெரும்பாலும் நான் எதிர்பார்த்தவையே. எனினும் நான் பூரணமாகவே படித்துச் சென்றதனால் இலகுவாக இருந்தது. ஏனெனில் வீடு வந்து வினாத்தாளையும் எழுதிய விடையையும் சிந்தித்துச் சரிபார்க்கும்போது எனக்குப் பூரண திருப்தியாக இருந்தது. அத்தோடு 3 பாடங்களிலும் ஏ வரும் என்ற நம்பிக்கை பெறுபேறு வரும்வரை இருந்தது.

எனது நீண்டகால கற்பனை ஆசிரியத்துறை. பல்துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்ற மனிதர்களாக மாற்றுவதில் ஆசிரியர்கள் உள்ளனர். எனவே ஆசிரியராக வந்து பல மனிதர்களையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்துவதே ஆசிரியத் தொழில். அதனையே நான் விரும்புகிறேன்.

## சோகேஸ்வரன் கஜந்தன்
பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



நான் எனது ஆரம்பக்கல்வியை கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்திலும், இ.மகிலா ஆசிரியரிடமும் கற்று, தொடர்ந்து யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சென்றேன். அங்கு சிறப்பாகக் கல்வி கற்றபோதும் தொடர்ந்து கற்க விடாது யுத்தம் தடுத்துவிட்டது. மேலும் எனக்கு க.பொ.த சாதாரண தரப் பெறுபேறு மிகவும் குறைவாகும். இதற்கு எனது விளையாட்டுத்தனமே காரணம்.

ஆனால் நான் க.பொ.த உயர்தரத்தில் 3ஏ சித்தி பெற்றேன். இதற்காகப் பெரிதும் பாடுபட்டேன். அத்துடன் நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்குப் பலர் ஒத்துழைத்தார்கள். அந்தவகையில் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் [அயுரன், பிரசன்னா, டனுராஜன், நகேந்திரன், ரேவாஞ்சனி] போன்றோர் பெரும் துணை புரிந்தனர். அத்துடன் என்னை வழிநடத்தியவரும், என்னைக் கற்பித்தவருமாகிய வரலாற்று ஆசிரியர் V.V.விஜயரூபன் எனது இந்த பெறுபேற்றுக்கு மிகவும் காரணமாக அமைந்தார்.

பாடசாலை முதல் தனியார் கல்வி நிறுவனங்கள் வரை பாடங்களுக்கு ஒழுங்காகச் சென்று ஆசிரியர்கள் கூறுவனவற்றைக் கவனமாகக் கேட்டு அவர்கள் தரும் குறிப்புகளை மனப்பாடம் செய்வேன். நான் எந்தநேரமும் கல்வியிலேயே கண்ணாக இருந்து கற்றதனால்தான் 3ஏ பெறுபேற்றைப் பெற்றேன்.

எதிர்காலத்தில் நான் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையை தெரிவுசெய்து அத்துறையைச் சிறப்பாகக் கற்று ஆசிரியராக வர விரும்புகிறேன். இவ்வாறு வந்து எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எனது குருவாகிய V.V.விஜயரூபனின் துணையுடன் உதவி புரிய நினைக்கிறேன்.

எனது பிரதேசமாகிய கெருடாவில் பிரதேசம் 2000ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் அடிப்படை வசதிகள் அற்றுப் போய்விட்டது. அத்துடன் மின்சார வசதியும் இல்லை. எனவே இவ்அடிப்படை வசதிகளையும், மின்சார வசதியையும் உரியவர்கள் ஏற்படுத்தித் தந்தால் எமது பிரதேச மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிக்கமுடியுமென நான் நம்புகின்றேன்.

## நித்தியானந்தன் கேசாந்
பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



தமது கவலைகளையும் கஷ்ரங்களையும் தாங்கள் தாங்கிக் கொண்டு எனக்காகப் பாடுபட்டுழைத்த எனது அம்மாவையும் அப்பாவையும் அவர்களோடு, தமது சொந்தப் பிள்ளைகளாகவே எம்மை எண்ணிப் படிப்பித்த ஆசிரியர்களையும் அவர்களுடன் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலைச் சமூகத்திற்கும் நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

பரீட்சைக் காலங்களில் தூக்கம் அதிகளவு வரும். அவ்வேளைகளில் நான் எண்ணுவது "நான் என்னை மட்டும் ஏமாற்றவில்லை. எனக்காகக் கஷ்ரப்படுகின்ற அம்மாவையும் அப்பாவையும் ஏமாற்றுகின்றேன்" என்று. அதன் பின்பு புதியதொரு நம்பிக்கையும் ஆர்வமும் வரும்.

அதிகாலைப் படிப்பாயினும் சரி, இரவுப் படிப்பாயினும் சரி இரண்டிற்கும் எனக்குப் பெரிதாக வித்தியாசம் தெரியாது. பெரும்பாலும் இரவு நேரங்களிலும் பகலில் 1, 1½ மணித்தியாலங்களும் எனது படிப்புக்காக ஒதுக்குவேன். இரவு கற்க முடியாது போனால் அதனைப் பகல் நேரங்களில் ஈடுசெய்வேன். வானொலி கேட்டுக்கொண்டு படிப்பது எனது பழக்கம். சந்தோஷமும் கூட.

பரீட்சையில் பெரும்பாலும் எதிர்பார்த்த வினாக்களும் வந்தன. சில எதிர்பாராத வினாக்களும் வந்தன. பாடப்பரப்பை ஓரளவு முற்றுமுழுதாக ஏலவே கற்றிருந்ததனால் வினாக்கள் பெரிதும் ஏமாற்றங்களாக அமையவில்லை. சிறந்த பெறுபேறு வரும் என்ற நம்பிக்கை பாதி. வரவேண்டும் என்கின்ற ஆதங்கம் பாதி. இரண்டும் மாறிமாறி என்னைக் கொஞ்சம் சஞ்சலப்படுத்திவிட்டன.

நான் மாவட்ட நிலையில் 7ஆவது இடத்தில் வந்தபோதும் மாவட்டத்தின் முதன்மை நிலையில் எனது கல்லூரியை நிலைநிறுத்த முடியாமற் போய்விட்டதே என்ற ஒரு பெரிய கவலை என்னிடம் உள்ளது. ஆனாலும் இப்போதைய பெறுபேற்றின் மூலம் பாடசாலைக்கும் எனது ஊருக்கும் குறிப்பாக எனது தாய், தந்தைக்கும் பெருமை தேடித் தந்துள்ளேன் என்பதில் சற்றுத் திருப்தி. சட்டத்துறையில் தொடர்ந்தும் என்னால் முடிந்தளவு வரை உயரிய சாதனைகளை எனது பெற்றோருக்காகவும் பாடசாலைக்காகவும் படைப்பேன்.

## சரவணபவானந்தன் மதியழகி
பெறுபேறு: 3ஏ (யாழ்.வட்டு இந்துக் கல்லூரி)



உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவிலே தமிழ், நாடகமும் அரங்கியலும், அரசியல் ஆகிய மூன்று பாடங்களிலும் "ஏ" தரச்சித்தி பெற்றதையிட்டு மகிழ்வடைகிறேன். சிறுவயதிலிருந்தே பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற பேரார்வம் என்னிடம் காணப்பட்டது.

நான் கல்வியில் ஆர்வம் காட்டுவதற்கு எனது பெற்றோர் மட்டுமன்றி எனது இரு சகோதரர்களும் காரணமாகக் விளங்கினர். எனது சகோதரர்கள் கல்வியில் அடைந்த உயர்ச்சி எனக்கு முன்மாதிரியாகக் காணப்பட்டது.

மேலும் கல்வியில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு வழிகாட்டிகளாகவும், உறுதுணையாகவும் இருந்தவர்கள் எனக்குக் கற்பித்த ஆசான்கள். எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நான் கற்ற தனியார் கலவி நிலைய ஆசிரியர்களும் எனது கல்விக்கான பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

பாடசாலை, தனியார் கல்வி நிலையம் என்பவற்றுக்கு ஒழுங்காகச் சென்று அங்கு கற்பிக்கப்படும் பாடங்களைக் கவனமாகக் கேட்டு வீட்டிலே மனப்பாடம் செய்வேன். ஆசிரியர்கள் கற்பித்தவற்றை விட மேலதிகமாகப் பொது நூலகம் சென்று எனது பாடங்கள் சம்மந்தமான புத்தகங்களை வாசித்துத் தகவல்களைப் பெற்றுக்கொள்வேன். எந்தப் பாடத்தையும் விருப்புடன் அனுபவித்துப் படிக்க வேண்டும் என்று எனக்குக் கற்பித்த ஆசிரியர் கூறுவார். அதன்படி படித்ததாலேயே சிறந்த பெறுபேற்றை அடைய முடிந்தது.

பல்கலைக்கழகம் சென்று கல்வியை முடித்து சிறந்த தொழில் வாய்ப்பைப் பெறவேண்டும். அதன் மூலம் சமூகத்துக்குச் சேவையாற்றி எனது குடும்பத்தினருக்கும் எனது பாடசாலைக்கும் எனக்கு வழிகாட்டிகளாக அமைந்த ஆசான்களுக்கும் பெருமை சேர்க்கவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.

சந்திப்பும், படங்களும்: ஓளண்யன், கவிநேசன், ம.பா.மகாலிங்கசிவம் 7

## வேலாயுதபிள்ளை இமயவல்லி
பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும்போது பெரும்பாலும் நேரப்பற்றாக்குறை முக்கியமான பிரச்சினையாக இருக்கும். ஒவ்வொரு வினாவிற்கும் எவ்வளவு நேரத்தை செலவிடுவது என்பதை முன்னரேயே தீர்மானித்துக்கொண்டதுடன், வினாக்களை விளக்கமாக வாசித்து விடையளித்தேன்.

வீட்டிலிருந்து நீண்டதூரம் பயணம் செய்து கற்றலை மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் வீட்டிலிருந்து படித்த நேரம் மிகவும் குறைவானதே. வகுப்பில் கற்பித்தவற்றை உடனுக்குடனேயே முழுமையாக உள்வாங்கிக் கொண்டதுடன், பாடம் சம்பந்தமான தெளிவையும் பெற்றுக்கொண்டதால் சிறப்பான பெறுபேற்றை பெற முடிந்தது.

எமது ஆசிரியரின் வழிகாட்டலின் படி, தெரிவு செய்து படிப்பதை விடுத்து எவ்வகையான வினாக்களையும் எதிர்கொள்ளும் வகையில் எம்மைத் தயார் செய்திருந்தோம். அதனால் பரீட்சை நேரத்தில் எந்தவிதமான குழப்பங்களுக்கும் ஆளாகாமல் சிறப்பாகப் பரீட்சை எழுத முடிந்தது. சிறப்பான பெறுபேறு கிடைக்கும் என முன்கூட்டியே எதிர்பார்த்தேன்.

பல்கலைக்கழகத்தில் சிறப்பாக கல்வி கற்றுச் சிறந்த விரிவுரையாளராக வரவேண்டும் என்றே விரும்புகின்றேன். கல்வியியல் துறையில் எனது பணியை மேற்கொண்டு எமது பிரதேச மாணவர்களின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

சிறு சிறு சவால்களை பெரிதாகக் கருதாது அவற்றிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தால் நிச்சயம் சிறப்பாக பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளமுடியும். அர்ப்பணிப்புடன் கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் கற்றலில் உதவிய நண்பிகள், உறவினர்கள் மாத்திரமன்றி மேலும் பலர் எனது கல்விக்கு உறுதுணையாக இருந்து சிறப்பான பெறுபேறு பெற உதவினார்கள்.

## ரவீந்திரகுமார் ரஜீபன்
பெறுபேறு: 3ஏ (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)



எனது சொந்த இடம் மாவிட்டபுரம் என்பது அம்மா சொல்லித்தான் எனக்குத் தெரியும். பல கிராமங்களில் வசித்து வந்த நான் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலே எனது ஆரம்பக் கல்வி யியைக் கற்றேன்.

அரசியல், தமிழ், நாடகமும் அரங்கியலும் பாடங்களைத் தெரிவு செய்தேன். 3ஏ பெறுபேறு என்பது எனது எதிர்பார்ப்பு. எங்கள் வீட்டில் அண்ணா, அக்கா யாருமே படிக்கவில்லை. ஆதலால் நானாவது படிக்கவேண்டும் என்ற விடாப்பிடியான உறுதிப்பாடு என் மனதில் ஆழப்பதிந்தது.

அத்தோடு அப்பா [illegible] வேலை செய்கிறார். அவர் அடிக்கடி என் படிப்பைப் பற்றி விசாரிப்பார். கவனமாகப் படிக்கவேண்டும் என்று அறிவுரைகளையும் கூறுவார்.

என்னுடைய இத்தகைய பெறுபேற்றுக்கு எனது கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்தநடராஜா ஆகியோர் முக்கிய காரணமாக விளங்குகிறார்கள்.

அத்துடன் தமிழ் ஆசிரியர் குகபரன், நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் திருமதி ஹேமலதா ஆகியோர் என்னைச் சிறந்த முறையில் வழிப்படுத்தி நெறிப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு உதயன் ஊடாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் காலையில்தான் அதிகம் படிப்பேன். அதுதான் எனது கற்றலுக்குச் சாதகமான நேரமாக நான் கருதுவதுண்டு.

நண்பர்களுடன் சேர்ந்து படிப்பது அதிகம். அதனால் ஒருவருக்கொருவர் இடையில் ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தீர்த்துப் படித்துக்கொள்ளலாம்.

கல்லூரியில் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்தேன். அப்போது எமது உதைபந்தாட்ட அணி மாவட்ட மட்ட அளவில் வெற்றி வாகை சூடியது. நான் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகிக்கும்போதெல்லாம் எல்லோரும் பெரும்பாலும் பெற்றோர் தடை[illegible]யாக இருந்தனர். ஏனெனில் அது எனது கல்வியைப் பாதிக்கும் என்று கருதினார்கள்.

என்னைப் பொறுத்தவரை மன ஒருநிலைப்பாடு, இடைவிடாத பயிற்சி, முயற்சி இவை இருந்தால் சாதிக்கலாம் என்று கருதுகின்றேன்.

எதிர்காலத்தில் ஆசிரியப் பணிக்கு என்னைத் தயார்ப்படுத்துவேன்.

## மோகனதாஸ் கோமதி
பெறுபேறு: 3ஏ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



பரீட்சை தொடர்பாக மனதில் பயம் ஏற்பட்டது. எனினும் ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய நான் கல்வி கற்றேன். எனது மனதிலே சாதிக்க வேண்டும் என்று நினைப்பு இருந்தது. கூடுமானவரை எனது முயற்சியினால் நிறைய இடங்களைத் தேடிக் கற்றேன். படித்த மூன்று பாடங்களையும் சம அளவாகக் கற்றேன். படிப்பதற்காகக் கூடுதலான நேரத்தை ஒதுக்கினேன்.

நான் வினாக்களை எதிர்பார்த்துப் படிக்கவில்லை. எனினும் நான் கூடுதலாகக் கவனமெடுத்துப் படித்த பாடப்பரப்பினுள் இருந்து வினாக்கள் வந்தன. எனக்குப் பல்கலைக்கழகம் போகக் கூடிய பெறுபேறு கிடைக்கும் என எதிர்பார்த்தேன். 3ஏ கிடைக்கும் என பரீட்சை எழுதிய பிறகு நம்பிக்கை இருந்தது.

நான் நாடகமும் அரங்கியலும் எனும் துறையில் ஈடுபட ஆசைப்படுகின்றேன். எதிர்காலத்தில் இத்துறை சார்ந்த ஆசிரியராக வர விரும்புகிறேன். நான் 3ஏ எடுக்க உதவிய ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர், சகோதரர்கள் என்றும் எனது நன்றிக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய பரிசில் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பலானை கண்ணகை அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ப.சண்முகராஜக் குருக்கள், நிகொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர். சிவரூபன், பாடசாலை அதிபர் திருமதி சா.வாகீசன் ஆகியோர்கள் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். பாடசாலை வளவில் அமைந்துள்ள நாவலர் சிலைக்கு நிகொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் மாலை அணிவித்து வழிபடுவதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி மதிப்பளிப்பதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (72)

## மெய்வன்மைப் போட்டிகள்

மந்திகை, ஜன.27

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மெய்வன்மைப் போட்டியில் வடமராட்சி வலயக் கல்வி நிர்வாக கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார். (203-218)

## சல்வீனியா கொடிகள் மாநகரசபையால் அழிப்பு

நல்லூர், ஜன.27

நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குளங்களில் வளர்ந்திருக்கும் சல்வீனியா கொடிகளை அகற்றும் நடவடிக்கை யாழ்.மாநகரசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நகரப்பகுதியில் உள்ள ஆரியகுளம், தாமரைக்குளம், நாச்சிமார் கோயில் குளம் ஆகியவற்றில் சல்வீனியாக் கொடிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன, தற்சமயம் அவற்றை அழிக்கும் பணிகள் இடம் பெறுவதாகவும் மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (202-111)

## திடீரெனத் தீப்பற்றி எரிந்தது தென்னை மரம்

யாழ்ப்பாணம், ஜன.27

வீதியோரம் நின்ற பாரிய தென்னை மரம் திடீரென தீப்பற்றி சுவாலை விட்டு எரிந்தது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.

திடீரென தென்மைர ஓலைகள் தீப்பற்றி எரிந்ததால் அப்பகுதியில் வந்த பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடியதாக தெரிவிக்கப்பட்டது.

தீப்பிடித்து அனைத்து ஓலைகளும் எரிந்து சாம்பலாகியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரத்தின் அருகேயிருந்த உயர் அழுத்த மின்கம்பியில் காய்ந்த ஓலை உரசுப்பட்டமையால் தீப்பற்றியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## வலி.கிழக்குப் பிரதேசசபையால் வீட்டுத்தோட்டச் செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

கோப்பாய், ஜன.27

வலி.கிழக்குப் பிரதேச சபையில் வீட்டுத்தோட்டச் செய்கை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உரப்பைகளில் பசளைமண் இடப்பட்டுத் தலைமைப் பணிமனை வளாகப் பகுதியின் பல இடங்களிலும் பயிர்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இத்தோட்டச் செய்கையில் பணிமனைப் பணியாளர்கள் ஓய்வு நேரங்களில் ஈடுபட்டு வருவதாகவும் இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்குச் [illegible]க்கப்பட்டு வருவதாகவும் தெரிவி[illegible]ட்டுள்ளது.

இதேவே[illegible]யில்- தலைமைப் பணிமனையிலும், கோப்பாய் உப அலுவலகத்திலும் 30இற்கும் மேற்பட்ட மூலிகைக் கன்றுகளும் பராமரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (203-72)

## சண்டிலிப்பாய் பொதுச் சந்தையை இடம் மாற்றம் செய்ய நடவடிக்கை

ஆனைக்கோட்டை, ஜன.27

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னால் உள்ள முழு நேரச் சந்தையை இடம்மாற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள இச்சந்தையானது மிகவும் குறுகிய இடத்திலும், சன நெரிசல் அதிகமுள்ள பிரதேசத்திலும் அமைந்துள்ளது.

அடிக்கடி போக்குவரத்து நெரிசலும் சிலவேளைகளில் விபத்துக்களும் ஏற்படக் கூடியநிலை இங்கு காணப்படுகின்றது.

பொதுமக்கள் பலரும் இந்த விடயம் தொடர்பாகச் சுட்டிக்காட்டியதையடுத்து சந்தையை இடம்மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்தையை பிறிதொரு இடத்தில் அமைப்பதற்குப் பொருத்தமான காணி இல்லாததால்தான் சிரமத்தை எதிர்கொள்வதாகவும், பொதுமக்கள் இதையுணர்ந்து மேற்படி சந்தையை அமைப்பதற்கு வேண்டிய வசதியுள்ள காணி இருப்பின், அதை வழங்க முன்வருமாறும் கேட்கப்பட்டுள்ளது. தற்போதைய பெறுமதியில் குத்தகைக்கு விடவோ அல்லது விற்கவோ விரும்பின் தம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேசசபைச் செயலர் கோரியுள்ளார். (203-20)

## மூத்தோருக்கான தேவாரப் பண்ணிசை வகுப்புகள்

அகில இலங்கைத் திருமறை மன்றம் நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள் மடாலயத்தில் ஒவ்வொரு ஞாயிறு, புதன்கிழமைகளில் மூத்தோருக்கான தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளது.

மேற்படி பயிற்சி வகுப்புகளை வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தான ஓதுவார் மூர்த்திகள், துறைசை ஆதீனத் திருமுறைத் தோன்றல் தேவார இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் ஆகியோர் நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் ஆலயங்களில் தேவாரம் ஓதும் ஓதுவார் மூர்த்திகள் பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்குமுறை, ஆலய மகோற்சவகால நவசந்தி பண்கள் ஓதும் பயிற்சி, பன்னிரு திருமுறைகள் பண்ணோடு பாடும் பயிற்சி ஆகியன இடம் பெற்று வருகின்றன. வகுப்புகளில் ஆண், பெண் இருபாலாரும் பங்குபெற முடியும் என அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (201)

## தென்மராட்சி மாணவருக்கு ஆங்கிலப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஜன.27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மாணவர்களுக்கான இலவச ஆங்கிலப் பயிற்சியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்ற மாணவர்களும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களும் சித்தி பெற்ற மாணவர்களும் இவ்வகுப்புகளில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் தகைமையுள்ள மாணவர்கள் சாவகச்சேரி நவீன சந்தை ''விமலாஸ்'' வர்த்தக நிலையத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் அறிவித்துள்ளார். (203-207)

## சாவற்கட்டுப் பிரதேசத்தில் சிறுவர் மையக் கருத்தரங்கு

ஆனைக்கோட்டை,ஜன.27

சிறுவர் உரிமையைக் கட்டியெழுப்பும் முகமாக சிறுவர் உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு சாவற்கட்டுப் பிரதேசத்தில் நடத்தப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி அனுசரணையுடனும் ''சொண்ட'' நிறுவனத்தின் ஆதரவிலும் கருத்தரங்கு இடம்பெற்றது.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய சிறுவர்கள், வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்கள், ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் ஆகியோரை இனங்கண்டு அவர்களை நல்வழிப்படுத்துவதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-20)

## சமய சந்நிதிகளில்

சித்தங்கேணி,ஜன.27

மருதனார்மட அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேக தின அருள் விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறவுள்ளது. (201-112)

* * *

குருநகர்,ஜன.27

குருநகர் புனித புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் மறுநாள் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறும். (201-51)

* * *


நல்லூர்,ஜன.27

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவதிரி பீட விநாயகர் தண்டாயுதபாணி தேவஸ்தான கும்பாபிஷேக மணவாளக் கோல சகஸ்ரா சங்காபிஷேக விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு நித்திய பூசையும் 8 மணிக்கு 1008 சங்காபிஷேக கிரியைகளும் நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும் நடைபெற்று, அதைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (201-111)

* * *

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மணவாளக் கோல அஷ்டோத்திர சங்காபிஷேக விழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (201)



கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாண முகாமைத்துவக் கழகம் நடத்திய 'கொந்தளிப்பான சூழ்நிலையில் தேவைப்படும் தலைமைத்துவம்' என்னும் தலைப்பிலான செயலமர்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

கொமர்ஷல் வங்கியின் ஏற்றுமதிப் பிரிவின் தலைவர் லயன் எஸ்.இராகவன், கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் லயன் எஸ்.இரவீந்திரா ஆகியோர் [illegible] படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தமிழீழத்தை அங்கீகரிக்குமாறு மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்

## சகல கட்சிகளுக்கும் ராமதாஸ் வலியுறுத்து

குத்தாலம், ஜன.27



ஈழத் தமிழர்களுக்கு தனித் தமிழீழம் என்ற நிலைப்பாட்டை அங்கீகாரம் செய்யவேண்டும் என மத்திய அரசை தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் நிர்ப்பந்தம் செய்ய வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

மயிலாடுதுறையில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

சென்னையில் நடந்த ஒரு விழாவில் தமிழக முதல்வர் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற முடியாமல் இருக்கிறதே என்று பேசினார்.

மத்திய அரசை நீங்கள் நிர்ப்பந்தம் செய்து போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பெப்ரவரி 15ஆம் திகதி தி.மு.க. பொதுக்குழுவைக் கூட்டி முடிவெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளீர்கள். இடைப்பட்ட 3 வாரத்தில் இலங்கையில் தமிழர்கள் என்னென்ன இன்னல்களுக்கு ஆளாகப் போகிறார்களோ? ஏன் இந்த தாமதம். கலைஞர் உடனடியாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். நமது வேண்டுகோள் வேறு விதமாக இருக்க வேண்டும்.

மத்திய அரசிடம் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்கு பதிலாக ஈழத்தமிழர்களுக்கு தனி ஈழம் என்ற நிலைப்பாட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

இது தி.மு.கவிற்கு புதிதல்ல. தனி ஈழம் தான் இலங்கை இனச்சிக்கலுக்குத் தீர்வு என்று ஏற்கனவே தி.மு.க. அறிவித்து பல மாநாடுகள், பேரணிகளை நடத்தியிருக்கிறது. அந்த பழைய நிலைப்பாட்டையே தி.மு.க. மீண்டும் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற தீர்வு கிடைக்கும்.

இத்தகைய முடிவைத்தான் தி.மு.க. பொதுக்குழுவிலும் மேற்கொள்ள வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் அந்த நாட்டின் அரசியல் சட்டத்திற்குட்பட்ட தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதெல்லாம் சாத்தியமே இல்லை. ஏனென்றால் இலங்கை அரசியல் சட்டத்தில் மாநிலங்களை கொண்ட கூட்டாட்சி என்பது இடம் பெறவில்லை. 1948ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை சிங்களவர்களில் ஒருவர் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

தமிழர்களுக்கு சிறிதளவாவது அதிகாரம் வழங்கலாம் என்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்ட போதெல்லாம், அடுத்து வந்த ஆட்சியாளர்களால் தூக்கி எறியப்பட்டுள்ளது. எனவே, ஒன்றுப்பட்ட இலங்கையில் அந்த நாட்டின் அரசியல் சட்டத்திற்குட்பட்டு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை அர்த்தமற்றது. இப்படி கூறுகின்ற அமைப்புகளோடு நேருக்குநேர் விவாதிக்கத் தயார். இதர கட்சிகளும் இதனை உணர வேண்டும். இலங்கை ஒரு வித்தியாசமான நாடு அந்த நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தனி ஈழக் கோரிக்கை நியாயமானது என்பது தெரியவரும்.

இந்தியாவில் வேறொரு இனத்தை சேர்ந்தவர்கள் அண்டை நாட்டில் பாதிக்கப்பட்டால் இந்தியா தலையிட்டு தனி நாடு உருவாக்கித் தந்திருக்கும். உதாரணத்திற்கு வங்காளதேசம் என்ற நாடு உருவாக இந்தியதான் காரணம். எனவே அந்த நிலையை எடுக்க தமிழகத்திலுள்ள கட்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். இதற்கு தமிழர்கள் முழு ஆதரவு தரவேண்டும் - என்றார்.

# இலங்கை பிரச்சினையில் தமிழக அரசு களத்தில் இறங்கிப் போராட வேண்டும்

## ஜி.கே.மணி வலியுறுத்து

செங்கல், ஜ.27



ஈழத் தமிழர் பிரச்சினையில், தமிழக அரசு களத்தில் இறங்கிப் போராட வேண்டும். தமிழ்நாடு முழுவதும், மாணவர்களின் பெரிய போராட்டம் வெடிக்கும் முன், இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. மாநிலத் தலைவர் ஜி.கே.மணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செங்கல்பட்டில், ஈழத் தமிழர்களுக்காக கடந்த 4 நாட்களாக உண்ணாவிரதமிருந்த சட்டக்கல்லூரி மாணவரின் உடல் நலம் நேற்று முன்தினம் திடீரென்று பாதிக்கப்பட்டது.

உடனே, ஜி.கே.மணி தனது காரில் அந்த மாணவரை ஏற்றிக்கொண்டு, செங்கல்பட்டு அரசு வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று சேர்த்தார். அங்கு அந்த மாணவருக்கு ரத்த அழுத்தம் உட்பட பல பரிசோதனைகள் செய்யப்பட்டன. அவருக்கு குளுகோஸ் ஏற்றப்பட்டது. தற்போது அந்த மாணவர் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

வைத்தியசாலையில் மாணவர் கெம்புகுமாரைப் பார்த்து விட்டு வந்த ஜி.கே.மணி செய்தியாளர்களிடம் கூறியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரி, மாணவர்கள் உண்ணாவிரதம் போன்ற கடுமையான போராட்டங்களில் ஈடுபடாமல், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் போன்ற அமைதியான வழியில் போராட வேண்டும்.

மாணவர் கெம்புகுமார், தனது உயிரைப் பற்றி கவலைப்படாமல், உண்ணாவிரதம் மேற்கொண்டார். வைத்திசாலையில், தனக்கு மருந்து, மாத்திரைகள் வேண்டாம் என்று கூறி வருகிறார். இதுபோன்று கூறாமல், சிகிச்சையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கை பிரச்சினையில், தமிழக அரசு களத்தில் இறங்கிப் போராட வேண்டும். தமிழ்நாடு முழுவதும், மாணவர்களின் பெரிய போராட்டம் வெடிக்கும் முன், இந்த பிரச்சினைக்கு தமிழக முதல்வர் நல்ல முடிவை எடுப்பார் என்று நினைக்கிறோம். முதல்வரை முன்னிலைப்படுத்தி, அவர் வழியில் பா.ம.க. தொடர் போராட்டத்தில் ஈடுபடும் - என்றார்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் ஆறுமுகம் என்ற மாணவரும் மயங்கி விழுந்தார். அவரும் செங்கல்பட்டு அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# புலிகளை அழிக்கும் போரை வழிநடத்தி தமிழினத்தை வேரறுக்க இந்திய அரசு சதி

## கருந்தொனியில் சாடுகிறார் வைகோ



**இலங்கை அரசு நடத்தும் தமிழினப் படுகொலையை, இந்திய அரசுதான் இயக்கி வருகின்றது. இந்திய மத்திய அரசு தற்போது இறுதிக் கட்டமாக - தமிழினத்தை வேரறுப்பதற்காக, விடுதலைப் புலிகளை அழிக்கும் திட்டத்தை அரங்கேற்றுகின்றது.**

**- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவாளரும் ம.தி.மு.க. பொதுச் செயலாருமான வைகோ சீற்றத்துடன் கண்டித்துள்ளார்.**

**மேலும், விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல யாராலும் முடியாது. சிங்கள இராணுவத்திடம் இழந்த யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் விரைவில் மீட்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.**

ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியின்போதே அவர் இவற்றைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

ஈழத் தமிழர்களை அழிக்கும் சிங்கள அரசுக்கு இந்திய அரசு ஆயுத பயிற்சி மற்றும் நிதி உதவி உட்பட தேவையானவற்றை வழங்கி இயக்கி வருகின்றது.

மத்திய அரசு தற்போது இறுதி கட்டமாக தமிழினத்தை வேரறுக்க, புலிகளை அழித்து தனது திட்டத்தை அரங்கேற்ற முனைந்துள்ளது.

விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல யாராலும் முடியாது. மேலும் மேலும் வெல்வார்கள். 50 ஆண்டுகளாக போராடி வரும் தமிழர்களுக்கு நாம் ஆதரவு அளிக்க வேண்டும்.

தமிழினத்தை அழித்து, ஈழப் பகுதியிலேயே பிரபாகரனை பிணமாக்க அல்லது கைது செய்ய திட்டமிட்ட இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுதலைப் புலிகள் சரியான மரண அடி கொடுத்து வருகின்றனர்.

சிங்கள இராணுவத்திடம் இழந்த யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் விரைவில் மீட்பார்கள்.

முதலமைச்சர் கருணாநிதி, இலங்கைத் தமிழர்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவர் என்று கூறினார், பின்னர் பதவியைத் துறக்கத் தயார் என்று கூறினார், இப்போது ஆட்சியை இழக்கத் தயார் என்று நாடகம் நடத்தி வருகின்றார்.

தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும் மத்திய அரசுக்கு கருணாநிதி துணை நிற்பது தமிழர்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும்.

ஈழப் போரில் தமிழர் வெற்றி பெறுவர். ஈழத் தமிழர்களுக்காக மாணவர்கள் போராட்டம் நடத்திருப்பது இருட்டில் வெளிச்சமாக உள்ளது.

எந்த கட்சியின் தூண்டுதலும் இல்லாமல் மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். இந்தப் போராட்டத்தை மாணவர்கள் தீவிரப்படுத்தவேண்டும்.

ஏனெனில் 1942 ஆம் ஆண்டு சுதந்திர போராட்டத்திலும், 1965 ஆம் ஆண்டு மொழி போராட்டத்திலும் மாணவர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். ஈழத் தமிழர்களுக்கு இந்த போராட்டத்தின் மூலம் நிம்மதி கிடைத்துள்ளது. அவர்களுக்கு அனைத்து தமிழர்களும் உதவ முன்வரவேண்டும்.

எதிர்வரும் 12 ஆம் நாள் புதுடில்லியில் ம.தி.மு.க. சார்பில் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெறவுள்ளது - என்றார்.

# மூவர்ணக் கொடியேற்றினார் ஆளுநர்

தமிழக அரசின் சார்பில் நேற்று நடைபெற்ற குடியரசு தினவிழாவில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா, மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து முப்படைகளின் அணி வகுப்பு மரியாதையையும் ஏற்றுக்கொண்டார்.

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதால் முதல்வர் கருணாநிதி விழாவில் பங்கேற்க வில்லை.

இந்தியாவின் 60ஆவது குடியரசு தின விழா நாடு முழுவதும் நேற்றுக் கொண்டாடப்பட்டது. தமிழக அரசின் சார்பிலும் நேற்றுக் குடியரசு தின விழா மிக கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவில் பங்கேற்பதற்காக காலை 7.55 மணிக்கு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா வருகை தந்தார். சரியாக 8 மணிக்கு மூவர்ண தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றிவைத்தார்.

# வைத்தியசாலையில் முதல்வர்; முதுகு வலியால் கடும் அவதி

சென்னை, ஜன.27



முதலமைச்சர் கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக நேற்று அதிகாலை போரூரிலுள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஒரு வார காலம் அவர் ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் ஆலோசனை கூறியுள்ளதைத் தொடர்ந்து, அவருடைய ஒரு வார கால நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

முதலமைச்சர் கருணாநிதி முதுகுப்புறத்தில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு காரணமாக அதிக அளவிற்கு வலி ஏற்பட்டதால் குறைந்தது ஒரு வார காலத்திற்காவது ஓய்வெடுக்க வேண்டுமென்று டாக்டர்கள் வலியுறுத்தியதன் பேரில் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் கருணாநிதி வெளியூர் பயணங்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்த்து சில நாள்கள் ஓய்வெடுப்பது அவசியம் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். முதலமைச்சர் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் அதுவரை தள்ளிவைக்கப்பட்டுப் பின்னர் அந்த நிகழ்ச்சிகளுக்கான திகதிகள் அறிவிக்கப்படும்.

பார்வையாளர்களும், தி.மு.க. தொண்டர்களும் நேரில் வருவதைத் தவிர்த்து அவசியம் ஒத்துழைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது.

முதலமைச்சர் கருணாநிதி ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதை தொடர்ந்து அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# திரவ உணவு சாப்பிட ஆரம்பித்தார் பிரதமர்

புதுடில்லி, ஜன.27

இதய அறுவை சிகிச்சைக்குப் பின் பிரதமரின் உடல்நிலையில் நன்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு அளிக்கப்பட்டு வந்த செயற்கைச் சுவாசம் நீக்கப்பட்டுள்ளது. இப்போது அவராகவே சுவாசிக்கிறார். இதயமும் சீராக இயங்குகிறது. அவருக்கு நேற்றுக்காலை முதல் திரவ உணவு கொடுக்கப்பட்டு வருகிறது - என்று சிகிச்சையளித்த டாக்டர்கள் ராமகாந்த் பாண்டா, விஜய் டி சில்வா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு (வயது - 76) டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலையில்கடந்த சனியன்று இதய அறுவை சிகிச்சை நடந்தது. இதயத்துக்குச் செல்லும் குழாயில் உருவான அடைப்பினால் ஏற்பட்ட பாதிப்பை நீக்க, 'பைபாஸ்' அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இப்போது அவர் [illegible] றம் அடைந்து வருகிறது. பிரதமருக்கு நேற்றுக் காலை முதல் திரவ உணவு கொடுக்கப்பட்டு வருகிறது என்று டாக்டர்கள் மேலும் கூறினர்.

# ஜெயகாந்தன், விவேக் உட்பட தமிழகத்தில் 14 பேருக்கு பத்மபூஷண், பத்மஸ்ரீ விருதுகள்

## மாதவன் நாயர், ஐஸ்வர்யா, டோனிக்கும் விருது: மத்திய அரசு அறிவிப்பு







சென்னை, ஜன.27

தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஜெயகாந்தன் உட்பட 5 பேருக்கு பத்மபூஷண் விருதும் நடிகர் விவேக் உட்பட 9 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்படுகிறது.

விஞ்ஞானி மாதவன் நாயர், நடிகை ஐஸ்வர்யா, கிரிக்கெட் வீரர் டோனி ஆகியோருக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு பத்ம விபூஷண், பத்ம பூஷண், பத்மஸ்ரீ விருதுகளை மத்திய அரசு ஆண்டு தோறும் வழங்கி வருகிறது.

இந்த ஆண்டின் விருதுகளை பெறும் 133 பேர் பட்டியலை மத்திய உள்துறை அமைச்சகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அதன் விவரம் வருமாறு -

சுற்றுச்சூழல் ஆர்வலர் சுந்தர்லால் பகுகுணா, அணுசக்திக் கழகத்தின் தலைவர் அனில் கக்கோட்கர், இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர், அன்னை தெரசா இல்லத்தின் தலைவர் சகோதரி நிர்மலா உட்பட 10 பேருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்படுகிறது.

[illegible] சாம் பிட்ரோடா, பெய்ஜிங், ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற துப்பாக்கி சுடும் வீரர் அபிநவ் பிந்த்ரா உட்பட 30 பேருக்கு பத்மபூஷண் விருது வழங்கப்படுகிறது. நடிகை ஐஸ்வர்யா ராய், கிரிக்கெட் வீரர்கள் டோனி, ஹர்பஜன் சிங், பில்லியர்ட்ஸ் உலக சாம்பியன் பங்கஜ் அத்வானி உட்பட 93 பேருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்படுகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த 5 பேர் பத்மபூஷண் விருதும், 9 பேர் பத்மஸ்ரீ விருதும் பெறுகிறார்கள்.

வி.பி.தனஞ்செயன்- சாந்தா தனஞ்செயன் (பரத நாட்டியக் கலைஞர்கள்), வி.கணபதி ஸ்தபதி, எழுத்தாளர் ஜெயகாந்தன், காஞ்சிபுரம் ஸ்ரீரங்காச்சாரி சேஷாத்திரி (அறிவியல் - பொறியியல்), சரோஜினி வரதப்பன் (சமூக சேவகி) ஆகிய 5 பேருக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

விவேக் (நகைச்சுவை நடிகர்), அருணாசாய்ராம் (கர்நாடக இசைப் பாடகி), ஐராவதம் மகாதேவன் (தொல்பொருள் ஆய்வாளர்), டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி (கலைத்துறை), பி.ஆர். கிருஷ்ணகுமார் (மருத்துவம்), டாக்டர் ஆர்.சிவராமன் (மருத்துவம்), டாக்டர் ஷேக் காதர்நூருதின் (மருத்துவம்), டாக்டர் எஸ்.தணிகாசலம் (இதய சிகிச்சை நிபுணர்), திருப்பூர் சக்திவேல் (தொழிலதிபர்) ஆகிய 9 பேருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் 30ஆம் திகதி நடக்கும் விழாவில் விருதுகளை ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீள் புனரமைப்பு பணிக்கு இஸ்ரேலின் தடைகளை நீக்குக!

## ஐரோப்பாவிடம் எகிப்து கோரிக்கை

காஸா பகுதியில் துரிதமாக மீள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு உதவி புரியுமாறும், எல்லைக் கடவைகளை உடனடியாகத் திறந்துவிடுமாறு இஸ்ரேலுக்கு கூடிய அழுத்தங் கொடுக்குமாறும் ஐரோப்பாவை,எகிப்து வலியுறுத்தியுள்ளது.

''ஐரோப்பிய, பலஸ்தீன வெளி விவகார அமைச்சர்களை, பிரசல்ஸில், இது தொடர்பாக சந்தித்துப் பேச்சுகள் நடத்தினேன். பலஸ்தீன மீள்கட்டமைப்பு தொடர்பாக சர்வதேச நன்கொடையாளர்களின் மாநாடொன்று பெப்ரவரி 28 இல் கூட்டப்படலாமென நம்புகிறேன்'' என எகிப்திய வெளிவிவகார அமைச்சர் அஹமத் அபுல் ஹெய்ட், கூட்டுப் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

''பலஸ்தீன மீள்கட்டமைப்புக்கு பெருந்தொகையான நிதி தேவை. இது திரட்டப்பட வேண்டும்.இப்பணிக்கு ஏதுவாக, ஐக்கிய பலஸ்தீன அரசொன்று கட்டியெழுப்பப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை உண்டு. உள் பிரிவினைப் போட்டிகள், மென்மேலும் பலஸ்தீனத்தைப் பலவீனப்படுத்தி விடும்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

''காலந்தாழ்த்தாது, உடனடி மீள் கட்டமைப்பை மேற்கொள்ளபலஸ்தீனர்களுக்கு உதவுமாறு நான் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டுள்ளேன். நெருக்கடியிலிருந்து விடுபட, அவர்களுக்கு இவ்வுதவி பெரிதும் உதவுமென்றும் குறிப்பிட்டுள்ளேன்'' என்றும் அவர் கூறினார்.

''இஸ்ரேல் பேச்சுகளில் ஈடுபட வேண்டும். இதற்காக அதற்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். இது மிக மிக அவசியம். அனைத்துக் கடவைகளையும் உடனடியாக திறந்து விடுமாறும், பலஸ்தீனர்கள் அமைதியாக வாழ வழிவிடுமாறு ம் இஸ்ரேலை ஒருங்கிணைந்து நாம் வலியுறுத்த வேண்டும்'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# கார்க்குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் 15 பேர் மரணம்

பக்தாத், ஜன. 27

ஈராக்கின் மேற்கு நகரான பலூஜாவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் வாகன அணியை இலக்கு வைத்து, சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

''ரோந்து பொலிஸ் வாகன அணி அல்-கர்மா நகரிலுள்ள தனது தளத்தை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இரு வாகனங்கள் முற்றாக சேதமடைந்தன'' என பொலிஸ் பேச்சாளரொருவர் கூறினார்.

''இப்பிராந்தியம், சுனி முஸ்லிம் தீவிரவாதிகளின் கோட்டையாகத் திகழ்கிறது. அடுத்த வாரம் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இச்சமயத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது'' என உள்ளூரதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

''சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களில் பொலிஸ் அதிகாரிகளும், பொலிஸாரும் அடங்குவர். ஒன்பது பேர் படுகாயமடைந்துள்ளனர்'' என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பயணப்படகு நீரில் மூழ்கி வியட்நாமில் 40 பேர் பலி

ஹனாய், ஜன. 27

''அளவுக்கு அதிகமான பயணிகளுடன் புறப்பட்ட பயணப் படகொன்று மத்திய வியட்நாமிய நதியில் மூழ்கி விபத்துக்குள்ளானது.இதில் 40 பயணிகள் பலியானார்கள். 35 பேர் மீட்கப்பட்டனர். ஐவர் காணாமற் போய்விட்டனர்'' என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.



''மத்திய குயாங் பின் மாகாணத்தில் பாயும் ஜியான் நதியில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. இதில் உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் பெண்களும், பிள்ளைகளுமாவர். காணாமற்போனாரை தேடும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

''இந்தப் பயணப் படகில், 12 பேர் மாத்திரமே பயணிக்கலாம். எனினும், 80 பேர் வரை முண்டியடித்துக் கொண்டு பயணித்துள்ளனர். கரையிலிருந்து 20 மீற்றர் (65 அடி) தொலைவில் அதிவேகமாக பிரவாகமெடுத்து ஓடும் நதியில் படகு கவிழ்ந்து மூழ்கியுள்ளது'' என குயாங் பின் பிரதம பொலிஸ் அதிகாரி பான் தான் ஹா, ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''படகு அலை தடுப்பு மதிலொன்றை அண்மித்த சமயம், பலர் ஒரே பக்கத்தில் திரண்டு, ஏக காலத்தில் குதிக்க முயன்றார்கள். படகு கவிழ்ந்தமைக்கு இதுவே காரணமாகும்'' என விபத்திலிருந்து தப்பிப் பிழைத்த, கோதி குயாங் என்பவர், இணையமொன்றிற்குத் தெரிவித்தார்.

''இவர்கள் அனைவரும் அண்மித்துக்கொண்டிருக்கும் புது வருடத்தையொட்டி, பொருள்கள் கொள்வனவுக்காக, பயணப் படகில் நதியைக் கடக்க முற்பட்ட குயாங் ஹை கிராமவாசிகளாவர். இவ்விபத்து தொடர்பாக படகுத் தலைமை அதிகாரியும், படகின் உரிமையாளரும், விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்''என உள்ளூர்வாசிகள் தெரிவித்தார்கள்.

# சொந்த மண்ணில் தொடரைப் பறிகொடுத்தது ஆஸி. அணி

அபிலைட் ஜன. 27

அவுஸ்ரேலியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட்டுக்களால் வென்றதான் மூலம் தொடரை 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதனடிப்படையில் 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

அணியின் சார்பில் அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 63 ஓட்டங்களையும், கோப்ஸ் 42 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா அணியின் ஸ்ரைன் மற்றும் நிற்னி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

223 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி 38.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது.

அணியின் சார்பில் அம்லா மற்றும் ஏ.டீ. வில்லியர்ஸ் ஆகியோர் முறையே 80, 82 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

# மெண்டிஸின் சுழலை அடித்து நொறுக்க தயாராகிவிட்டார் வீரேந்தர் ஷேவாக்

புதுடில்லி, ஜன. 27

ஒருநாள் தொடரில் மெண்டிஸின் சுழலை அடித்து நொறுக்கத் தயாராக இருப்பதாக ஷேவாக் சவால் விடுத்துள்ளார்.

டோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி, இலங்கையில் ஐந்து ஒருநாள் மற்றும் ஒரு ருவென்ரி 20 போட்டிகளில் பங்கேற்கிறது. முதல் போட்டி வரும் 28ஆம் திகதி நடக்கிறது. இத்தொடரில் இலங்கையின் சுழல் மாயாவி மெண்டிஸை சமாளிக்கத் தேவையான வியூகம் வகுத்து இருப்பதாக இந்திய அணியின் அதிரடி ஆரம்ப ஆட்டக்காரர் ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

''கடந்த ஆசியக் கோப்பைத் தொடரின் போது ஆடுகளத்தில் இருந்தவாறு மெண்டிஸின் பந்துவீச்சை கூர்ந்து கவனித்தேன்.

'ஒவ்-ஸ்பின்', 'கூக்ளி' முறையில் பந்து வீசும் இவர் பந்தை நடுவிரலால் அழுத்தி அனுப்புகிறார். எனவே அவரது பந்தை அடித்து ஆடுவதில் எந்தப் பிரச்சினையும் இருப்பதாக கருதவில்லை. பொதுவாக மெண்டிஸ் பந்து வீசும்போது அருகில் மூன்று அல்லது நான்கு களத்தடுப்பாளர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள். மற்ற இடங்களில் களத்தடுப்பாளர்கள் அதிகம் இருக்கமாட்டார்கள். இப்படி இருப்பது அடித்து ஆடுவதற்கு தூண்டும். தவறாக அடிக்கப்படும்போது கூட பந்து பவுண்டரிக்கு சென்று விடும்.

நான் எப்போதும் கடந்துவந்தபாதையை திரும்பிப் பார்ப்பது இல்லை. முடிந்து போன ஆட்டங்கள் குறித்தும் கவலைப் படுவதில்லை. அப்போதைக்கு என்ன நடக்கிறது என்பதைத்தான் பார்ப் பேன். டெஸ்டில் இரண்டு முறை மூன்று சதம் அடித்ததில் விசேடம் எதுவும் இல்லை. அணியின் வெற்றிதான் முக்கியம்."- இவ்வாறு ஷேவாக் தெரிவித்தார்.



# 2011 உலகக் கிண்ணப் போட்டியுடன் கிரிக்கெட்டிலிருந்து முரளி ஓய்வு

2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் தாம் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப் போவதாக இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

''ஒரு நாள் அரங்கில் 500 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருக்கின்றமை முக்கியம் அல்ல. அணி வெற்றி பெறுவதுதான் முக்கியம். இடையில் இதுபோல சாதனைகள் செய் வது மகிழ்ச்சியே. நான் சாதித்து இருக்கும் அதேநேரத்தில் அணி வெற்றிபெற்று இருப்பது கொண்டாட்டத்திற்கு உரியது. இப்போதைக்கு எனது நோக்கமெல்லாம் 2011 உலக கோப்பையில் பங்கேற்பது தான். அதன் பிறகு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது பற்றி அறிவிப்பு வெளியிடுவேன்'' - என்றார்.

## மரண அறிவித்தல்

### நல்லையா ஐயக்கோன்

(முன்னாள் பிரதம லிகிதர், இலங்கை மின்சாரசபை, வட மாகாணம்)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ஐயக்கோன் நேற்று (26.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - இரத்தினகாந்தி தம்பதியினரின் அன்பு மகனும் சுசிலாதேவியின் பாசமிகு கணவரும் அனபாயசீலன் (தபாலதிபர்), விஜயசலுஜா (ஆசிரியை), கயல்விழி (அவுஸ்திரேலியா), வசந்ததாசன் (தேசிய கல்வியியல் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் துரைராசசிங்கம் மற்றும் பூவனேந்திரன், மகரராசசிங்கம் (கிளி), பாக்கியராசா (குயில்) தவமலர், சாந்தநாயகி, கமலநாயகி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராசு - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கணேசலிங்கம் யோகநாதன் (ஆசிரியர்), பரஞ்சோதி, பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனரும் சுஜானி, நந்தசீலன், வரதராஜன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2009) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திக்கக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவி வாசா,*
*சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் 23.01.2009 4 மணியளவில் திருமண வீட்டுக்கு போய் வரும் வழியில் எமது கைச்செயின் 4பவுண் அடையாளம் பிரேமதாஸ் என நீல நிறத்தில் ஆங்கில எழுத்தில் பொறிக்கப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரிக்கோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வாழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தவரத்தினம்

(நீர்வேலி ப.நோ.கூ.சங்க சாரதி)

கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தவரத்தினம் நேற்று (26.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ரத்தினம் தம்பதியரின் மருமகனும் தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும் தவதாஸ், மோகனதாஸ், அமரதாஸ், பிரமினா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்செல்வி, கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் செல்வரத்தினம், அமரர் நவரத்தினம், இராசரத்தினம், ஜெயரத்தினம், செல்வமதி, இந்துமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
தெய்வேந்திரராணி
(மனைவி)

### முருகேசு சங்கரப்பிள்ளை

(முன்னாள் வர்த்தகர், மாவத்தகம - குருநாகல், சுன்னாகம்)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், பெரியாவிடை, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது பலாலி வீதி, உரும்பிராய் தெற்கில் வசித்து வந்தவருமாகிய முருகேசு சங்கரப்பிள்ளை நேற்று (26.01.2009) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் முருகேசு-செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், செல்வமலர், ஸ்ரீகந்தராஜா (லண்டன்), தவமலர் (லண்டன்), சிவராஜா (சுவிஸ்), சுகிர்தமலர், பத்மராஜா (ஆசிரியர்), கிருஸ்ணராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன் (பொறியியலாளர், டுபாய்), இராமேஸ்வரன் (ஜேர்மனி), ராதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சகுந்தலா, இராசாத்தி, கண்ணன் ஆகியோரின் மைத்துனரும், ஆனந்தகுமாரசாமி (ஜெயா-டுபாய்), கிருபாகரன் (லண்டன்), கந்ததர்சினி (ஆசிரியை, இளவாலை மெய்கண்டான்மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகவனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மங்களம்' பலாலி வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனைக் கைதுசெய்யுமாறு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஜன.27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்யுமாறு மேல் நீதிமன்றம் நேற்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை வழக்கில், அக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிரபாகரனையும் புலிகளின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டுஅம்மான் மற்றும் இயக்க உறுப்பினர்களான சார்ள்ஸ் மாஸ்டர், கோமதி மணிமேகலை ஆகியோருக்குமே இந்தப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவரது இல்லத்தில் வைத்து கடந்த 2005 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். இக்கொலை தொடர்பான விசாரணைகளை நடத்திய பொலிஸார் இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தப்பிச்சென்றுள்ளனர். இதனால், அவர்களைக் கைதுசெய்யமுடியவில்லை என நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## விதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் வடக்கே கடுமையான மோதல்கள் நடக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நடந்த தாக்குதல்களில் பலியான 26 பொதுமக்களின் உடல்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை காலை முதல் கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக உடையார்கட்டு சுதந்திரபுரம் மற்றும் தேவிபுரம் வரையிலான பகுதிகளிலே ஆயிரக்கணக்கில் ஷெல்கள் வந்து வீழ்ந்தன.

உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் இயங்கும் வைத்தியசாலையிலும் நெட்டாங்கண்டல் மருத்துவமனையி லும் பலியான 26 பொதுமக்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் காயமடைந்த 76 பேர் அங்கு கொண்டு வந்து அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மருத்துவமனையில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த 10 பேர் காயமடைந்தனர். 4 அம்புலன்ஸ் வண்டிகள் சேதமடைந்தன -என அவர் பி.பிஸிக்குத் தெரிவித்தார். (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சட்டத்தரணி சுமதி தர்மரத்ன நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வானொலி சேவைக்கான உரிமப் பத்திரத்தை ரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி பியசேன திஸாநாயக்கா என்பவர் தாக்கல் செய்திருந்த 'ரிட்' மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே இத்தகவல் அங்கு தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி 9 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் இடம்பெற்றுள்ள ஒழுங்குப் பிரமாணங்களின் அடிப்படையிலேயே இந்த உரிமத்தை ரத்தச் செய்ய அரசு முடிவு செய்திருந்ததாக சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.(அ-சி)

## பின்நோக்கி நகர்வதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என் பது முற்று முழுவதுமான பொய்ப்பிரசாச் சாரம். எமது போராட்டம் மக்களின் பாது காப்பை உறுதிப்படுத்தி, சுதந்திரமான வாழ்வைத் தருவதற்கான போராட்டமாகும். இத்தகைய பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு அரசு கண்மூடித்தனமாக மக்கள் மீது தாக்குதல்களை நடத்திக்கொண்டு வருகின்றது.

எமதுபோராளிகள் மிக வீரவேசத்துடன் போராடி வருகின்றனர். அவர்களின் தாக்குதலில் பாரிய இழப்புக்களை சந்தித்து வருகின்ற இராணுவத் தினர் தங்களுடைய ஆத்திரத்தை பொதுமக்கள் மீது காட்டி தொடர்ச்சியாக ஷெல்வீச்சு நடத்து கின்றனர்.

எமது விடுதலைப் போராட்டம் மக்கள் பலத்துடன், மக்கள் ஆதரவுடன் நடக்கின்ற விடுதலைப் போராட்டமாகும்.

எல்லாவிடுதலைப் போராட்டங்களிலும், குறிப்பாக பலமுறை பின்வாங்கி பின்னர் அதைவிடப் பாரிய வெற்றிகளைச் சந்தித்திருக்கின்றோம். இதுதான் எமது விடுதலைப் போராட்டத்தில் வரலாறாகும்.

300 சதுரகிலோமீற்றர் பரப்பளவுக்கு அதிகமான பிரதேசம் எமது காட்டுப்பாட்டில் உள்ளது - என்றார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன், ஏனைய சிலர் வன்னியில் இருந்து தப்பி ஓடி விட்டனர் எனக் கருத்து நிலவுகிறது -

இது குறித்து பி.பி.ஸி. செய்தியாளர் நடேசனிடம் வினவியபோது -எமது விடுதலை இயக்கமும் எமது தேசியத் தலைவரும் மக்களோடு மக்களாக இருந்து மக்களின் நலனுக்காக - மக்களின் காத்திர மான - சுபீட்சமான வாழ்வுக்காக எதையும்அர்ப்பணிப்பதற்கு தயாராக இங்கிருந்தே போராடி வருகின்றோம். - என்றார்.(அ-சி)

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் 4 பெரும் மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து - நான்கு சிறிய கிராமங்களுக்கு தற்போது மிக நெரிசலாக முடக்கப்பட்டுள்ள சுமார் 4 லட்சம் மக்கள் மீது மிகச் செறிவான பீரங்கித் தாக்குதல் கடந்த பல நாள்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டு ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.45 மணி முதல் அகோர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.சுதந்திரபுரம் சந்தியில் பிற்பகல் 2 மணியளவில் ஷெல்கள், ஐ.நா. தொண்டர் நிறுவனப் பணியாளர்கள், செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் மேற்பார்வையில் இருந்த குடியிருப்புப் பகுதிகள் மீது வீழ்ந்து வெடித்துள்ளன.இதில் 60 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதுடன் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பணியாளர் ஒருவரும் 'கியூடெக்' நிறுவன பணியாளர் ஒருவர் உட்பட 200 க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

உடையார்கட்டுப் பகுதியில் இயங்கி வந்த வைத்தியசாலையும் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகி ஏற்கனவே காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 10 பேர் வரை கொல்லப்பட்டதுடன் 4 அம் புலன்ஸ் வாகனங்களும் சேதமடைந்தன. இதனால் காயமடைந்தவர்களை எடுத்து வருவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டும் படுகாயம் அடைந்தும் வீழ்ந்து கிடந்தோரில் பெருமளவிலானோர் குழந்தைகளும் சிறுவர்களுமாவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## ஊடக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவித்தும் ஐந்து ஊடக அமைப்புகள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின. இந்த ஆர்ப்பாட்டம் மதியம் 12.30 மணியளவில் கொழும்பு கொள்ளுப்பிட்டி சந்தியில் இடம்பெற்றது.

அதில் பெருந்திரளான ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் முகத்தில் கறுப்புத்துணி கட்டியவாறு ஊடக அடக்குமுறைக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். (அ-சி)

## பொதுமக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி வருகின்றனர். அதனால் மக்களின் இழப்பு அதிகரிப்பதைத் தடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது -என்றும் நீல் புஹுனே அசோசியேட்டற் பிறஸ் செய்தி நிறுவனத்துக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அறிவித்த மக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது கடந்த சில நாள்களாக ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் அதிக எண்ணிக்கையில், ஒழுங்காக நடத்தப்படுகின்றன. இதற்கு முழுப் பொறுப்பும் யார் என்பதனை நாம் நிர்ணயிக்க முடியாது. ஆனால் அந்தப் பாதுகாப்பு வலயங்களில் சண்டை நடைபெறுகிறது என்பது மட்டும் நிச்சயம் - என்றும்ஐ.நாவின்இணைப்பாளர்நீல் புஹுனே ஏ.பியிடம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

அரசாங்கம் தரைப் படையினர் நடத்தும் தாக்குதல்களில் மட்டுமே தங்கியிருக்குமாயின், பொதுமக்களின் மரணங்கள் மென்மேலும் அதிகரிக்கும். மிகக்குறுகிய அந்த நிலப்பிரதேசத்தில் - மக்கள் பாதுகாப்பு வலயத்தில் - அடர்த்தியாக மக்கள் செறிந்து தங்கியிருக்கும் போது கனதியாக ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்துவது மிகமிக ஆபத்தானதாகும் - என்று ராஜதந்திரி ஒருவர் ஏ.பி. செய்தியாளரிடம் கருத்து வெளியிட்டார். எனினும் அவர் தமது அடையாளத்தைப் பிரசித்தப்படுத்த விரும்பவில்லை. (அ)

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் படையினர் புதுக்குடியிருப்பை நோக்கிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் .எனவும் உதய நாணயக்கார தெரித்துள்ளார்.

அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தின் மீதே இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுவதை அவர் நிராகரித்துள்ளார்.

''நாங்கள் அந்தப் பகுதியை இலக்கு வைக்கவில்லை. விடுதலைப்புலிகளே அவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். கல்மடுக்குளத்தை தகர்த்தவர்கள் அவர்களே'' எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை, விசுவமடுக் குளத்திற்கு வடகிழக்கே உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது- எனவும்தெரிவிக்கப்பட்டது.(அ-சி)

## இந்தியத் தலைவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக முதல்வர் கரு ணாநிதிக்கு யுத்த நிறுத்தத்தில் உண்மையில் ஆர்வம் இருந்தால், ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுத லைப் புலிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அதன் மூலம் கருணாநிதியும் இலங்கை அரசும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் ஆயுதங்களைக் களையலாம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் மேலும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி இலங்கைக்கு நேரில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வடக்கு - கிழக்கில் உள்ள உண்மை நிலையை கண்டறிய வேண்டும். விடுதலைப் புலிகளால் மனிதக் கேடயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 லட்சம் மக்களை விடுவிக்குமாறு அவர்களிடம் கோரவேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாண மக்கள், கிழக்கு மாகாண, மலையக மக்களை நேரில் சந் தித்து அவர்கள் இந்த நாட்டில் எவ்வளவு கௌரவமாக வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்குமாறு நான் தனிப்பட்ட அழைப்பை ஏற்கனவே விடுத்துள்ளேன்.

நான் பெருமதிப்பு வைத்துள்ள மூத்த அரசியல்வாதியான கருணாநிதி தாம் விரும்பினால் தமிழ்நாடு அரசியல் தலைவர்களின் குழுவொன்றையும் இலங்கைக்கு அழைத்து வரலாம்.

உலகில் மிகவும் மதிக்கப்படும் தமிழ்த் தலைவர் என்ற வகையில், கருணாநிதி, விடுதலைப் புலிகள் தமது பிடியில் வைத்திருக்கும் இரண்டு லட்சம் மக்களை விடுவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

பொதுமக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பதற்காக விடுதலைப்புலிகள் அணைக்கட்டுக்களைக் கூட உடைக்கின்றனர்.

தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவிற்கும் நேரில் விஜயம் செய்து இலங்கை நிலைவரத்தைப் பார்வையிடுமாறு அழைப்பு விடுத்துள்ளேன் - என்றார்.

(அ-சி)


இப்போது விற்பனையாகிறது...
பொது நிர்வாகமும் சூழலும்
Public Administration and Environment
பொதுநிர்வாக உதவியாளர்சேவையின் அதிபர் வகுப்புக்கு தரமுயர்வதற்கான போட்டிப் பரீட்சை வினாக்களும் வழிகாட்டலும்.
தொகுப்பு- அ.உ.மாகேஸ்வரன் (BBA.Cons.,SLAS)
விலை:- ரூபா 275/=
கிடைக்குமிடங்கள்
1.பூபாலசிங்கம் புத்தகசாலை
2.அன்னை புத்தகசாலை
3.சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி
4.கனன் போட்டோ கொப்பி (பருத்தித்துறை)

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க.
பெற்றோர்/மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
☎ 222 7442

SHAMROCK
ஈச்சமோட்டை யாழ்.
A/L 2011
* தமிழ் - S.சிவா
* சித்ரல் - A.மல்லிகா
* புவியியல் - A.ராஜா
* நாடகம் - J.ஜோன்
* அரசியல் - T.கஜன்
* அளவை - R.ரமணன்
* இந்து நாக - S.கார்த்திக்
* Eco - NB.கஜீதரன்
* B.St - B.S.பசில்
* Acc - S.தவா
* English - ஆசிரியர்
* சிங்களம்

போட்டிப்பரீட்சை நூல்கள் விற்பனையாகின்றன
★ போட்டிப்பரீட்சை வழிகாட்டி- 2009 பொது உளச்சார்பு, பொது அறிவு (கல்விசார் விடயங்கள்)
★ சமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சை வழிகாட்டி
★ விடய ஆய்வு வழிகாட்டி
தொகுப்பு:- த.தவசேகர்

கற்சுமி வெளியீடு
தரம் 1-5 வரையான மாணவர்களுக்குரிய ஜனவரி - பெப்ரவரி மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்துவிட்டன
உங்கள் பிள்ளைகளின் ஆற்றலை மேம்படுத்தும்.
கற்சுமி, 166 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L 2011 கலை,வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:- 28.01.2009 புதன் 3 pm.
தமிழ் - N.பாலா
இந்.நாக - S.ஜெயக்குமார்
அரசியல் - இளங்கோ
நாட.அர - மங்களேஸ்
வணிகக் கல்வி - ரூபன்
வரலாறு - M.பத்மன்
புவியியல் - N.பாபு
கிறிஸ்தவம் - S.K.யூட்
அளவையியல் - R.P.சர்மா
பொருளியல் - P.சண்
கணக்கீடு - M.ராஜன்
கணித உயிரியல்
பௌதிகம் - ஜெயசீலன் பார்த்திபன்
இணை.கணிதம் - பிரதீபன்
இரசாயனம் - N.மகேஸ்வரன்
உயிரியல் - ஞானேந்திரன் தயாபரன்
A/L 2009, DAY CLASS ஆரம்பமாகி நடைபெறுகின்றன

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc..
ஆரம்பம் :- 29.01.2009
Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225

ஜடியல் அக்கடமி
A/L 2011
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:- 28.01.2009 புதன் 4.00 p.m.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

**உதயன்**

**நற்சிந்தனை**

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

**க.பொ.த.உயர்தரம் கல்விச்சுடர்**

01

**Special Guidance For A/L 2009&2010**



க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்

**கல்வி இணைப்பிதழ்**


## அன்புடன், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு!

க.பொ.த சாதாரண தரம் தாண்டி உயர்தர வகுப்புக்கு காலடி வைத்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும் திறமையானவர்கள். ஆனால், உயர்தர பரீட்சையில் எல்லோராலும் சிறந்த பெறுபேறுகளை அடைய முடிவதில்லை என்பது ஒரு பிரதான குறைபாடு ஆகும். எல்லாப் பாடத்திட்டமும் படித்து முடித்திருந்தும் பரீட்சைப் பெறுபேறு நல்லதாக அமைவதில்லை என்ற பெரும் ஏக்கம் உங்கள் மனதில் இருந்துகொண்டே இருக்கின்றது. இதற்கான காரணங்களாவன

★பல மாணவர்கள் சரியான விடைகளை அறிந்திருந்தும் உரிய நேரத்தில் ஞாபகப்படுத்தி விடைகளை எழுதத் தவறுதல்

★தெரிந்த விடைகளை தொகுத்து வடிவமைத்து கேள்விக்கு ஏற்றவாறு விடைகளை எழுதத் தவறுதல்.

★வினாக்களையும் முன்னுரிமைப்படுத்தி நேரத்துடன் பரீட்சை வினாத்தாளை செய்யத்தவறுதல்.

மேற்படி தவறுகளுக்கான பிரதான காரணம் மாணவர்களுக்கு பயிற்சியின்மையே ஆகும். அதாவது, பரீட்சை மாதிரி வினாத்தாள்களுக்கு அவர்கள் பரீட்சயமாகாது இறுதிப்பரீட்சையை எழுதுவதாகும்.

இந்தப் பிரதான குறைபாட்டைக் களையும் வகையில் இவ்வெளியீடு தனது பணியைத் திறம்பட மேற்கொள்ளவுள்ளது. தற்போது அனைத்துப்பாடங்களுக்குமான வினாத்தாள்-1 இற்கான பாடப்பரப்பு களை முடித்துள்ள உங்களுக்குப் பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள் -01 இற்கான பல்வேறுகோண மாதிரி வினாத்தாள்களை இவ்வெளியீடு அதிகமாக தாங்கிவரவுள்ளது.

பரீட்சை நெருங்கும் காலங்களில் வினாத்தாள்-02 ஐயும் உள்ளடக்கிய முழுமையான வினாத்தாள் கள் இப் பகுதியில் வெளிவரவுள்ளன. இதைவிடக் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான கற்றல் குறிப்புகளும் வெளிவரவுள்ளன. இவ் வெளியீட்டின் வினாத்தாள்களைதொடர்ச்சியாக நேரங்கணித்துப் பயிற்சி செய் தால், பரீட்சைகள் உங்களுக்கு பரீட்சயமாகிவிடுவதை நீங்கள் உணர்வீர்கள் என்பது கல்விச்சுடரின் அசையாத நம்பிக்கை ஆகும்.

– ஆசிரியர்: கல்விச்சுடர் –

"உதயன் கல்விச் சுடருக்கான விசேட தொகுப்பு

# அரச வரவு - செலவுத் திட்டம் 2009


தொகுப்பு:- V.முரளிதாஸ் B.A.Hons (Eco.Sp), M.A (Eco), Co/St.Benedict's College, Col-13.


### வரவு-செலவுத் திட்டம் அறிமுகம் (An Introduction of Budget)

குறித்த ஒரு பொருளாதாரம் எதிர்வரும் ஆண்டில் தனக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கின்ற வருமானத்தையும் அதற்கான வழிமுறைகளையும், தான் மேற்கொள்ள இருக்கின்ற செலவீனங் களையும் அதற்கான வழிமுறைகளையும் முற்கணிப்புச் செய்து நிதி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நடை முறைக்கு உட்படுத்தப்படும் ஓர் அறிக்கையையே அரச வரவு-செலவுத் திட்டம் என்பர்.

பொதுவாக வரவு-செலவுத் திட்டமானது நிறுவனங்கள், வீட்டுத் துறையினர் போன்ற அனைத்துப் பிரிவினருமே தமது எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்வதற்காக ஏற்கனவே தயாரிக்கப்படுவதாகும். அவ்வாறே ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு வருடமும் எதிர்வரும் ஆண்டுக்கெனத் தயாரிப்பது வரவு-செலவுத் திட்டம் ஆகும். இது நாட்டு மக்களது பொருளாதார த்தையும், மக்களது வாழ்க்கைத் தரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி போன்ற பல்வேறு பட்ட நலன்களைத் தீர்மானிப்பதாக அமைகின்றது.

### வரவு-செலவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் :-

1) அரசாங்கம் பொதுப்பண்டங்களை உற்பத்திசெய்து வழங்குதல் வேண்டும்.
பொதுப்பண்டம் என்பது, பொதுவாகத் தனியார் துறையினரால் உற்பத்திசெய்து வழங்கப் படாத பண்டங்களை உற்பத்திசெய்து வழங்குதல் வேண்டும்.
உதாரணம்:- பாலம் அமைத்தல், வீதி அமைத்தல், சூழல் பாதுகாப்பு.

2) மேன்மைப் பண்டங்களான (Merid Goods) கல்வி, சுகாதாரம், போஷாக்கு வசதிகளை இலவசமாக வழங்குதல் வேண்டும்.

3) பேரினப் பொருளாதார உறுதி நிலையை ஏற்படுத்துதல் வேண்டும்.
அதாவது, விலை உறுதிப்பாட்டை மேற்கொள்வதுடன் சென்மதி நிலுவைச் சமநிலையை ஏற்படுத்தி நாணய மாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல்வேண்டும்.

4) பொருளாதார சமமின்மை அல்லது வருமான ஏற்றத்தாழ்வை இயன்றவரை குறைத்து வருமானச் சமநிலையை ஏற்படுத்துதல்.

5) அரசாங்கம் தனியார் துறையினரை ஊக்குவிப்பதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்வேண்டும்.

6) பொருளாதாரத்தில் வேலையின்மையைக் குறைத்து வளங்களின் பயன்பாட்டை அதிகரித்து நிறை தொழில்மட்டத்தை ஏற்படுத்துதல்.

7) பொருளாதாரத்துக்கு இன்றியமையாத போக்குவரத்து, தொடர்பாடல், மின்சாரம், நீர்வழங்கல், துறைமுகம், விமான நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

8) பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி வருமானம் என்பவற்றை அதிகரிக்கச் செய்வதுடன், மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கச்செய்து பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியை ஏற்படுத்துதல் வேண்டும்.
மேற்கூறிய இலக்குகளைக் கொண்டமைந்த அரச வரவு - செலவுத் திட்டமானது நாட்டு மக்களுக்கும், பொருளாதாரத்துக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் விதமாக அமையும்.

இலங்கையில் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் கடந்த 6ஆம் திகதி (6.11.08) இலங்கை யின் ஜனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சருமான மகிந்த ராஜபக்சவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக பொருளாதாரத்தைக் கற்கும் மாணவர் களுக்கும் மற்றும் பொருளாதாரம் தொடர்பாக அறிந்துகொள்ளவிரும்பும் அனைவருக்கும் ஏற்ற வகையில் முக்கியமான விடயங்களை இக்கட்டுரை உள்ளடக்கியுள்ளது.

### இலங்கையின் வருமானக் கட்டமைப்பு.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம்

| | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| வரி அரசிறை | 14.6 | 14.2 | 14.7 | 14.8 |
| பெறுமதிசேர் வரி | 5.6 | 5.2 | 5.2 | 5.2 |
| கலால் தீர்வை | 3.2 | 2.7 | 2.5 | 2.4 |
| இறக்குமதித் தீர்வை | 1.8 | 2.0 | 2.3 | 2.3 |
| ஏனைய வரிகள் | 1.3 | 1.7 | 1.6 | 1.7 |
| வரி அல்லா அரசிறை | 1.7 | 1.6 | 1.5 | 1.5 |
| மொத்த அரசிறை | 16.3 | 15.8 | 16.1 | |

**விசேடமாக**

**உயர்தரப் பொருளியல் மாணவர்களுக்காக கடந்தவருட புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டு தொகுக்கப்பட்டுள்ளது.**

அரசின் இறைக் கொள்கையை அவதானிக்கின்றபொழுது வரி அரசிறையானது கடந்த ஆண்டுகளை விடச் சிறிய அளவான அதிகரிப்பினையே காட்டுகின்றது. அதாவது, மொத்த அரசிறை யானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.3% ஆக 2009 ஆம் ஆண்டு காணப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இப்பங்களிப்பு 2006 தொடக்கம் 2008 வரையும் ஏறத்தாழ 16 சதவீத மாகவே காணப்பட்டது. இவ்வாறு வரி அரசிறையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 14-15 சதவீதமாகவே உள்ளது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வரி வருமானத்தில் நேரில் வரியின் பங்களிப்பானது முதன்மை வாய்ந்ததாகவும் ஒப்பீட்டு ரீதியில் வருமான வரியின் பங்களிப்பு மிகக் குறைவாகவுமே காணப்படுகின்றது. எனவே, மறைமுக வரிகளானவை நாட்டில் பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரவு-செலவுத்திட்ட செலவுகள், மீதிகள்

| | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறைச் செலவீனம் | 18.6 | 17.4 | 16.8 | 16.0 |
| மொத்தச் செலவு | 24.3 | 23.5 | 23.0 | 22.8 |
| வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை | 8.0 | 7.7 | 7.0 | 6.7 |

2009 ஆம் ஆண்டு திரண்ட வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 6.7 சதவீதமாக அமையும் என முன்மொழியப்பட்டுள்ளது. இது 2006ஆம் ஆண்டு 8 சதவீதத்தாலும், 2007 ஆம் ஆண்டு 7.7 சதவீதத்தாலும் குறைவானதாகும். அரசிறைச் சேமிப்பினை உயர்த்துவதன் மூலமும் நடைமுறைச் செலவு, மூலதனச் செலவினை ஓரளவு கட்டுப் படுத்துவதன் மூலமும் அடையலாம். பாதீட்டின் தொடர்ச்சியான பற்றாக்குறை நாட்டின் விலை மட்டம், கடன் சுமை, முதலீடு போன்றவற்றில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

### பொருளாதார வளர்ச்சி வீதம்

| | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உ/தி % | -1.5 | 4.0 | 5.9 | 5.4 | 6.2 | 7.7 | 6.8 | 6.5 | 6.5 |

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியினை அவதானிக்கின்றபொழுது இவ் வளர்ச்சி ஆனது, ஒவ்வொரு ஆண்டுகளிலும் வேறுபட்ட சவால்களுக்கு உள்ளாக்கப்பட்டு அடையப்பட்டவையாகும். எனினும், 2001ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது என்றும் இல்லாத வாறு -1.5 என்ற எதிர்க்கணியப் பெறுமதியை வெளிப்படுத்தியது. இவ் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் படு மோசமான நிலையை அடைந்ததற்குப் பிரதான காரணம் நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் ஆகும். பின்னர் 2002 இலிருந்து 2005 வரை பொருளாதாரம் 4 சத வீதத்திலிருந்து 5.9 சதவீதமாக வளர்ச்சியடைய மீண்டும் 2004ஆம் ஆண்டு நிலவிய கடும் வரட்சி யினால் பொருளா தாரம் 5.4% என சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஆனால், 2005 காலப்பகுதியில் வெளிநாட்டு உதவிகள், கடன்கள், என இலங்கைக்கு அன்னியச் செலாவணி பெறப்பட்டதால் இலங்கை நாணய மானது மதிப்பேற்றம் பெற்றது.

2005 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகளின் சடுதியான அதிகரிப்பால் இலங்கையின் இறக்குமதிச் செலவு மற்றும் உற்பத்தியைத் தொடர்ந்து பொருளாதாரத்தின் விலைமட்டம் உயர்வடைந்துசெல்லும் வேகம் தூண்டப்பட்டது. இக்காலப் பகுதியில் பொருளாதார வளர்ச்சி வீதம் சராசரியாக 6-7.7 சதவீத வளர்ச்சியைப் புலப் படுத்தியது.

எரிபொருள் விலை அதிகரிப்பு 2008 யூலை மாதமளவில் பீப்பாய் ஒன்று 147 ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்தது. இது மீன்பிடி, போக்குவரத்து, உற்பத்தி, சேவைத்துறை என சகல துறையினரையும் அதிகளவில் பாதித்தது எனலாம்.

### அரசின் வருமான முன்மொழிவுகள் - 2009

| முன்மொழிவுகள் | மில்லியன் ரூபா |
|---|---|
| பொருளாதாரச் சேவைக் கட்டணம் | 1,000 |
| தனியார் வருமான வரி | (500) |
| பெறுமதிசேர் வரி | (45,351) |
| உற்பத்தித் தீர்வை | 7,000 |
| தேசக் கட்டுமான வரி | 15,000 |
| துறைமுக, விமான நிலைய அறவீடு | 24,000 |
| இறக்குமதித் தீர்வை மற்றும் செஸ் வரி | 25,000 |
| தொலைபேசி, அறவீடு | 2,500 |
| விசேட வியாபாரப் பொருள் அறவீடு | 1,500 |
| மொத்தம் | 30,149 |

### 2009 ஆம் ஆண்டுக்கான வருமான வரியில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றங்கள் வருமாறு:

* வருமான வரி விதிப்பதற்கான வருமான எல்லையின் ஆகக்குறைந்த வருமான மட்டம் ஆண்டுக்கு 300,000 ரூபாவிலிருந்து 400,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, வருமான வரி எல்லை கள் உயர்த்தப்பட்டமையானது பொதுவாக மக்களது செலவிடத்தக்க வருமானத்தை அதிகரித் துக்கொள்வதாக அமையும். எனவே, முன்னரைவிட அரசுக்குச் செலுத்தவேண்டிய வருமான வரியின் அளவு குறைவடையும். ஆனால், அரசு வருமானவரி செலுத்துவோரின் அளவினை அதிகரிக்கச்செய்யும் என எதிர்பார்க்கின்றது. இதனால், தனிநபர் வருமான வரிச்சுமை நூற்றுக்கு சுமார் 5 சதவீதத்தால் குறைவடையும்.

| 2009 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் புதிய வருமான வரி எல்லை | வரி வீதம் | நடைமுறையில் உள்ளது |
|---|---|---|
| 1வது 400,000 | 5% | 1வது 300,000 |
| 2வது 400,000 | 10% | 2வது 200,000 |
| 3வது 400,000 | 15% | 3வது 200,000 |
| 4வது 500,000 | 20% | 4வது 200,000 |
| 5வது 500,000 | 25% | 5வது 200,000 |
| 6வது 500,000 | 30% | 6வது 500,000 |
| மீதி | 35% | மீதி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தனி நபர்களினால் வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தில் இருந்தான வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி வீதம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

| மொத்த வருமானம் (ரூபா) | நிறுத்திவைத்தல் வரிவீதம் |
|---|---|
| 0 - 300,000 | 0 |
| 1,000,000 | 2.5 |
| 1,000,000 அதிகமானது | 10 |

* பெறுமதிசேர் வரி (VAT) 15% இலிருந்து 12% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுற்றுலாத்துறை, குத்தகைக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில், காப்புறுதி, தொலைத்தொடர்புத்துறை மற்றும் சேவைத்துறை, கைத்தொழிற்துறையினரது வருமானம் அதிகரித்துக்கொள்ள வாய்ப்பாக அமையும். ஆனால் மதுபானங்கள், சொகுசு பண்டங்கள், உந்து ஊர்திகள் மீது 20% பெறுமதிசேர் வரி விதிக்கப்படும்.

* செஸ்வரி அறிமுகம்
செஸ்வரி என்பது தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு விதிக்கப்படும் மேலதிக வரியாகும். இது உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ளது.

* கோதுமை, தானியம் இறக்குமதி வரி 6% - 10% வரை அதிகரிப்பு.

* தேயிலை, இறப்பர் இறக்குமதி மீது செஸ்வரியினை விதித்தல்.

* இறக்குமதி ஆடைகள், சேலைகள், சாரங்கள், தைத்த ஆடைகளுக்கு 50% செஸ்வரி அறவிடப்படும். இப்பண்டங்கள் மீதான உயர்ந்த வீத வரி விதிப்பை நுகர்வோர்கள் பாரிய சுமையாகவே உணர்ந்துகொள்வார்கள். ஏனெனில், இறக்குமதியாகும் சாரம் (Sarongs), சேலைகளால் (Sarees), அதிகம் கவரப்பட்ட அல்லது பழக்கப்பட்டவர்களுக்கு இது ஒரு பெரிய அழுத்தமாகவே காணப்படும். இதனால், இதனுடன் மறைமுகமாகத் தங்கியிருப்போரது வருமானமும் சற்றுக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உதாரணமாக) நடைபாதையோர வியாபாரிகள் மற்றும் புடைவை வர்த்தகர்களையும் குறிப்பிடலாம்.

* குளிரூட்டிகள், மின் விசிறிகள், பீங்கான் பொருட்கள் மீதான இறக்குமதி வரி 50% என முன்மொழியப்பட்டுள்ளது.
பொதுவாக உலகின் முக்கிய பிரச்சினையாக புவியானது வெப்பமடைந்து வருகின்றமையால் மின்விசிறிகள், குளிரூட்டிகளது பாவனை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதன் பாவனையைக் கட்டுப்படுத்துவதோ அல்லது இறக்குமதியைக் குறைப்பதோ முடியாத ஒன்றாகக் காணப்படுகிறது. உள்நாட்டு பீங்கான் உற்பத்தியாளர்களுக்கு இறக்குமதி வரியானது சாதகமாகவும், ஓர் உந்து சக்தியாகவும் காணப்படும்.

* கையடக்கத் தொலைபேசிகளுக்கான 10% வரியானது நிலையான தொலைபேசிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

* கடதாசி இறக்குமதிக்கு 5% செஸ் வரி.

* இறக்குமதியாகும் விலங்கு, உணவுப் பண்டங்கள், மரக்கறி வகைகளுக்கு செஸ் வரியினை அதிகரித்தல்.

* இறக்குமதியாகும் உப்புக்கு (Salt) 10% செஸ்வரி.

* பால்மா இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோ ஒன்றுக்கு 5 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* லீற்றர் ஒன்றுக்கு டீசலின் விலை 30 ரூபாவாலும், பெற்றோலின் விலை 15 ரூபாவாலும், மண்ணெண்ணெயின் விலை 20 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

* வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 2,000 ரூபா வரை கிடைக்கும் வகையில் 560 ரூபாவாக ஓய்வூதியம் பெறும் பிரிவினருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* 'வடக்கின் வசந்தம்' (உதுரு வசந்தய)என்னும் பெயரில் அபிவிருத்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

* ஈ கிராமங்கள் உருவாக்கம் (E-Villege) அத்துடன் 2009 ஆம் ஆண்டை நவீன தகவல் தொழில்நுட்ப விருத்தியாக்கல் ஆண்டாக முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

பொதுவாக வரவு-செலவுத் திட்டத்தை நோக்குகின்றபொழுது பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டிருப்பதுடன் பொதுமக்களுக்கு வரிச்சலுகை, வரி விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை 337 மில்லியன் ரூபாவாக அல்லது தேசிய வருமானத்தில் 6.5 சதவீதமாகப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணவீக்கமானது எதிர்வரும் காலங்களில் குறைந்த மட்டத்தில் பேணப்படுவதற்கும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொருளாதார வளர்ச்சியும் 6.5% என்ற வளர்ச்சி மட்டத்தை அடைவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

எரிபொருள், போக்குவரத்து, மின்சாரம், நீர் என்பவற்றுக்கான கட்டணங்கள் மற்றும் பெறுமதிசேர் வரி, வருமான வரிச்சலுகை, அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் என்பவற்றால் பொதுமக்கள் நன்மையடைவார்கள் எனவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

## 2009 ஆம் ஆண்டுக்கான அரச வரவு-செலவுத் திட்டத்தின் சுருக்கம் ஒரே பார்வையில்

பில்லியன் ரூபாவில்

| விடயங்கள் | 2007 | 2008 திருத்தப்பட்டது | 2009 |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 565.05 | 709.35 | 855.00 |
| வரி வருமானம் | 508.95 | 643.48 | 779.14 |
| வருமான வரி | 107.17 | 138.29 | 166.70 |
| பொருட்கள், சேவைகள் மீதான வரி | 328.60 | 396.74 | 464.78 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி | 73.17 | 108.44 | 147.66 |
| வரியல்லாத வருமானம் | 56.10 | 65.87 | 75.86 |
| மொத்தச் செலவினம் | 841.60 | 1016.70 | 1991.67 |
| மீண்டெழும் | 622.76 | 743.39 | 823.51 |
| ஆளுக்குரிய வேதநாதிகள் | 214.16 | 243.89 | 268.36 |
| வட்டி | 182.68 | 215.93 | 250.44 |
| உதவு தொகைகளும் மாற்றல்களும் | 147.45 | 170.41 | 196.02 |
| ஏனைய பொருட்களும் சேவைகளும் | 78.47 | 113.16 | 108.70 |
| அரச முதலீடுகள் | 229.27 | 278.19 | 370.77 |
| பிற | (10.43) | (4.88) | (2.61) |
| வருமான மிகை(+)/குறை(-) | (57.17) | (34.04) | 31.49 |
| வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை | 276.55 | 307.35 | 366.67 |
| மொத்த நிதியிடல் | 276.55 | 307.35 | 336.67 |
| மொத்த வெளிநாட்டு நிதியிடல் | 131.41 | 122.78 | 153.55 |
| தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 100.91 | 97.73 | 123.02 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | 165.02 | 189.04 | 222.52 |
| படுகடன் மீள்கொடுப்பனவுகள் | 64.12 | 91.32 | 99.50 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 30.51 | 25.06 | 30.53 |
| மொத்த உள்நாட்டு நிதியிடல் | 145.14 | 184.57 | 183.13 |
| தேறிய வங்கியல்லாக் கடன்பாடுகள் | 111.31 | 158.57 | 165.63 |
| தேறிய வெளிநாட்டு நாணயத்திலான உள்நாட்டுக் கடன்பாடுகள் | 3.40 | | |
| தேறிய வங்கிக் கடன்பாடுகள் | 12.37 | | |
| பிற | 18.06 | 25.70 | 17.50 |
| அரசிறை/மொத்த உ.உ % | 15.8 | 16.00 | 16.40 |
| வரி அரசிறை மொத்த உ.உ % | 14.2 | 14.60 | 14.90 |
| செலவினம்/மொ.உ.உ % | 23.5 | 23.00 | 22.80 |
| நடைமுறைச் செலவினம் மொ.உ.உ % | 17.4 | 16.80 | 15.80 |
| அரச முதலீடு மொ.உ.உ % | 6.4 | 6.30 | 7.10 |
| வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)/மொ.உ.உ % | 1.6 | (0.8) | 0.60 |
| வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை/மொ.உ.உ % | 7.7 | 7.0 | 6.50 |

தொகுப்பு:- V.முரளிதாஸ் B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
Co/St.Benedict's College, Col-13. Tel: 0785202599

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# இரசாயனவியல் - 1

ஆசிரியர் : - V.C அன்பழகன் (B.Sc)
(சுவிற்சலாந்திலிருந்து)

இவ் இரசாயனவியல் வினாத்தாளை 54 நிமிடத்திற்குள் செய்து பயிற்சி பெறவும்.

அகில வாயு மாறிலி R = 8. 314 $JK^{-1} mol^{-1}$, அவகாதரோ மாறிலி $N_A = 6.022 \times 10^{23} mol^{-1}$

01. $MgCl_2$ இன் 0.06 M கரைசலின் 300$cm^3$ உம், $FeCl_3$ இன் 0.01 M கரைசலின் 400$cm^3$ உம், NaCl இன் 0.004 M கரைசலின் 200$cm^3$ ஒன்றாகக் கலக்கப்படின் விளைவு கரைசலில் உள்ள $Mg^{2+}$ அயன் செறிவைக் கணிக்குக.
1) 0. 02 M. 2) 0. 03 M. 3) 0. 01 M. 4) 0.04 M 5) 0. 005 M.

02. $Mg(NO_3)_2$ ஐயும் $BaCl_2$ ஐயும் வேறுபடுத்தி அறியப்பயன்படுத்தக்கூடியது எது/எவை?
A) $K_2Cr_2O_7$ B) $K_2CrO_4/CH_3COOH$ C) $Pb(NO_3)_2$ D) $Na_2SO_4$
1) A மட்டும். 2) A, B, C, D 3) B, C, D மட்டும்.
4) B,C மட்டும். 5) B மட்டும்.





03. பின்வருவனவற்றுள் $H_3PO_2$ உடன் தாக்கம்புரியும் சாத்தியக்கூறு குறைந்தது எது?
1) $AgNO_3$ 2) $HgCl_2$ 3) $FeCl_3$
4) $H^+/KMnO_4$ 5) சரியான விடை இல்லை.






04. $CaCl_2$ ஆனது அஞ் மின்வாய்கள் கொண்டு மின்பகுக்கப்படுகிறது. சரியானது எது?
1) கதோட்டில் Ca இறக்கமடைகிறது.
2) அனோட்டில் Ag சேர்வை உருவாகக்கூடும்.
3) அனோட்டில் முதலில் $Cl^-$ உம் பின் $OH^-$ உம் இறக்கமடைகிறது.
4) அனோட்டில் முதலில் OH உம் பின் $Cl^-$ உம் இறக்கமடைகிறது.
5) அனோட்டில் $H_2$ வாயு வெளிவரும்.



05. பின்வருவனவற்றுள் எதனுடன் $H_2S$ தாக்கம்புரியும் சாத்தியம் மிகக் குறைவாகும்?
1) $O_2$ 2) $HBrO_3$ 3) $Na_3AsO_4$
4) HI 5) $Br_2$



06. $C_3H_7NO$ எனும் மூலக்கூற்றுச் சூத்திரத்தையுடைய ஒரு சேதனச்சேர்வை A பிராடியின் சோதனைப் பொருளுடன் மஞ்சள் விழ்படிவைத் தோற்றுவித்தது. எனில், A இற்குப் பொருத்தமான சமபகுதியங்கள் எத்தனை?
1) 2 2) 3 3) 4 4) 5 5) 6

07. பின்வருவனவற்றுள் எது $C_6H_5MgBr$ உடன் தாக்கமுறமாட்டாது?
1) $CH_3COOH$ 2) $CH_3COCH_3$ 3) $CH_3OH$
4) $CH_3$-C°C-H 5) $CH_3-CH=CH_2$

08. அமிலத்திறன் ஒப்பீடுகளில் சரியானது எது?
1) $H_2O > ROH >$ H-C°C-H $> CH_4$
2)  $> H_2CO_3 > ROH >$ HC a" CH
3) $H_2CO_3 >$  $> ROH > CH_4 > C_2H_2$
4) $CH_3COOH >$  $> H_2CO_3 >$ H-C °C-H $> ROH$
5) $CH_3COOH > HCOOH > H_2CO_3 >$  $> CH_3OH$

09. மூலத்தன்மை பற்றிய ஒப்பீடுகளில் சரியானது எது?
1) $CH_3CH_2NH_2 > CH_3CONH_2 >$  $-COHNH_2$
2) $CH_3CH_2NH_2 >$  $-COHNH_2 > CH_3CONH_2$
3) $CH_3CONH_2 >$  $-COHNH_2 > CONH_2 > CH_3CH_2NH_2$
4)  $-COHNH_2 > CH_3CONH_2 > CH_3CH_2NH_2$
5)  $-COHNH_2 > CH_3CH_2NH_2 > CH_3CONH_2$

10. HBr உடன் தாக்குத்திறன் பற்றிய ஒப்பீடுகளில் சரியானது எது?
1) 2) 3)

4)

5) சரியான விடை இல்லை.

11. எத்தொகுதி தாங்கற் கரைசல்களை மட்டும் கொண்டமைகிறது.
1) $[(CH_3)_2NH_2]_3PO_4$, $NaHC_2O_4$, $NaHSO_4$
2) $Cl_3CCOONH_4$, $NaH_2PO_4$, $NaHCO_3$
3) $[(CH_3)_2NH_2]_3PO_4$, $NaH_2PO_4$ 
4) $F_3CCOONH_4$, $NaHSO_4$, $HCOONH_4$
5)  , $Na_2HPO_4$, $NaClO_4$


12. பின்வரும் வெப்பவுள்ளுறையை மாற்றங்களில் நேரடியாகப் பெறுமானம் துணிய முடியாதது எது?
1) ஐதரோகாபன்களின் நியம ஆக்க வெப்பவுள்ளுறை.
2) அயன் சேர்வைகளின் நியம சாலகசக்தி.
3) $CuSO_4$ இன் நீரேற்றசக்தி.
4) மென்னமிலங்களின் கூட்டப்பிரிகை சக்தி.
5) மேலுள்ள யாவற்றினதும் பெறுமானங்களை நேரடியாக துணிய முடியாது.

13. $CuSO_4$ கரைசலுக்கு மிகை NaCl திண்மம் இட உண்டாகும் கரைசலின் நிறத்துக்குக் கிட்டவாக நிறத்தைத் தரக்கூடிய கரைசலைப் பின்வரும் எச்செயல் கொடுக்கும்?
1) $NiCl_2$ கரைசலுக்கு மிகை அமோனியா சேர்த்தல்.
2) $FeCl_3$ கரைசலுக்கு மிகை $NH_4SCN$ சேர்த்தல்.
3) $CuSO_4$ கரைசலுக்கு மிகை அமோனியா சேர்த்தல்.
4) $K_2Cr_2O_7$ கரைசலுக்கு மிகை NaOH சேர்த்தல்.
5) செறி $CoCl_2$ கரைசலுக்கு மிகை செறி HCl சேர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சேர்வை A ஆனது ஈரசோவாக்கத்திற்கு உட்படுவதில்லை. ஆனால், அ யினை $NaOH_{(aq)}$ உடன் வெப்பமேற்ற பெறப்படும் விளைவு B ஈரசோவாக்கல் தாக்கத்திற்குட்படும் எனினும், உறுதியான உப்புப் பெறப்படுவதில்லை. ஆயினை வன்நிபந்தனைகளின் ஒட்சியேற்ற பெறப்படும் விளை பொருள் C வெப்பமாக்க இலகுவில் நீரை இழக்கும் சேர்வை A ஆக அமையக்கூடியது?




15. Pஎனும் சேர்வை con$HNO_3$ உடன் வெப்பமேற்ற கபிலநிற வாயு (Q) ஐயும் கரைசல் R ஐயும் கொடுத்தது. R ஆனது KOH சேர் $K_2CrO_4$ உடன் மஞ்சள் நிற வீழ்படிவைக் கொடுத்தது. இவ் வீழ்படிவு அசற்றிக்கமிலத்தில் கரையவில்லை. சேர்வை P ஆனது $NaOH_{(aq)}$ Al உடன் வெப்பமேற்ற மூக்கை அரிக்கும் மணமுடைய வாயு வெளியேறியது. சேர்வை க ஆனது,

1) $Sr(NO_3)^2$
2) $Ba(NO_3)^2$
3) $PbBr_2$
4) $SrBr_2$
5) $BaBr_2$


16. நீர் சோடியமைதரொட்சைட் மாதிரியை நீண்ட நாட்களுக்கு வளியில் விடும்போது விளைவில் இருக்கக்கூடியது?

1) சோடியமைதரொட்சைட்.
2) சோடியங்காபனேற்.
3) சோடியம் ஐதரசன்காபனேற்.
4) விடை 1, 2 சரியானவை.
5) விடை 1, 2, 3 சரியானவை.


17. நீர்க்கரைசலில் எவ்விரு பதார்த்தங்கள் தாக்கம் புரியாமல் ஒருங்கே அமையக்கூடியதாக இருக்கும்?

1) $Na_2CO_3$ உம் NaOH உம்.
2) $K_2Cr_2O_7$ உம் NaOH உம்.
3) $NaHSO_4$ உம் $NaHCO_3$ உம்.
4) $NaHSO_4$ உம் NaOH உம்.
5) NaOH உம் $NaHCO_3$ உம்.

18. Aldol ஒடுக்கம் நிகழ முடியாதது எது?




1) ஈ மட்டும்.
2) இ, ஈ மட்டும்.
3) ஆ, இ, ஈமட்டும்.
4) அ, ஆ இ, ஈ.
5) அ, இ, ஈ மட்டும்.

19. 

பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

1) $HNO_2$ Ehß O°C இல் தாக்கம் புரிந்து PHENOL விளைவாகும்.
2) $C_2H_5MgBr$உடன் தாக்கம் புரிந்து ethane ஐ தரக்கூடியது.
3) Na உடன் தாக்கம் புரிந்து $H_2$ ஐ தரக்கூடியது.
4) dil $HNO_3$ உடன் இலகுவில் நைத்திரேற்றத்திற்கு உட்படும்.
5) Cl2 நீருடன் முக்குளோரா பிரதியீட்டுப் பெறுதியைக் கொடுக்கும்.


இவ்வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும், கருத்துக்களுக்கும் 0714273035/0716850005 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்


20. சரியானது எது?

1) N ஆகக்கூடியதாக 4 ஒற்றைப் பிணைப்பையே ஆக்க முடியும்.
2) O இன் ஆகக்கூடியது 6 பிணைப்பை ஆக்க முடியும்.
3) F இன் ஆகக்கூடியது 7 பிணைப்பை ஆக்க முடியும்.
4) N இன் அதியுயர் வலுவளவு 3.
5) O இன் அதியுயர் வலுவளவு 2 ஆகும்.

21. கதோட்டுக்கதிர் ஆனது கதோட்டிற்கு செங்குத்தாக வருகிறது. அதே வேளையில் நேர்கோட்டில் செல்கிறது. இதனைக்காட்ட குழாயினுள்,

1) குவிவான கதோட்டைப் பயன்படுத்தலாம்.
2) குழிவான அனோட்டைப் பயன்படுத்தலாம்.
3) குழிவான கதோட்டைப் பயன்படுத்தலாம்.
4) குவிவான அனோட்டைப் பயன்படுத்தலாம்.
5) மேலுள்ள எதனையும் பயன்படுத்த முடியாது.

22. 0.04M செறிவுடைய ஒரு மூலமென் அமிலம் ஒன்றின் pH ஆனது 3.3 ஆகும். 0.01M செறிவு உடைய ஒருமூல மென் அமிலத்தின் pH ஐ துணிக?

1) 3.6
2) 3.9
3) 4.2
4) 3.3
5) 3

23. இரவோற்றின் விதியினை பிரதிபலிப்பது எது?

1) P A PB/ $P^0$A = XB
2) P A-PA/$P^0$B =XA
3) P A-PA /$P^0$A = 1-XB
4) P A-PA/PA = 1XB
5) P A-PA/$P^0$A = XB


உயர்தர மாணவர்களுக்கான
ஒரே ஒரு விசேட வழிகாட்டி


24. ஒரு சேதன மென் அமிலக்காட்டி ஒன்றின் 0.02M $100cm^3$ இனுள், 0.2M NaOH இன் $50cm^3$ இடப்பட்டபோது pH 3.3 ஐ காட்டியது. இக்காட்டியின் pH வீச்சாக அமையக்கூடியது எது?

1) 2.3 - 4.3
2) 3.3 - 4.3
3) 3.8 - 5.8
4) 2.8 - 4.8
5) 2.7 - 4.7

25. பின்வருவனவற்றில் வெப்ப உறுதி கூடியது,

1) HOCl
2) $HClO_2$
3) $HClO_3$
4) $HClO_4$
5) $ClO_2$

26. தூயநீர் பற்றிய கூற்றுக்களில் சரியானது எது?

1) தூயநீரின் செறிவு எப்போதும் 55.56mol $-1^{-1}$ ஆகும்.
2) 25°இ இல் தூய நீருக்கு மாத்திரமே Kw = $1x10^{-14}$ $mol^2$ - $1^{-2}$
3) நீரின் கூட்டற் பிரிவின் அளவு 25°C (degree of dissociation) a=$1.8x10^{-9}$
4) மாசுக்கள் கலந்த நீரின் pH 25°C இல் ஒருபோதும் 7 ஆக இருக்க முடியாது.
5) மாசுக்கள் நீரின் சமநிலையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

27. நீர்ப்பகுப்பு திறன் அதிகரிக்கும் ஒழுங்கு,

1) $CH_3CONH_2 < CH_3COOC_2H_5 < (CH_3CO)_2O < CH_3COCl$
2) $CH_3CONH_2 < (CH_3CO)_2O < CH_3COOC_2H_5 < CH_3COCl$
3) $CH_3COOC_2H_5 < (CH_3CO)_2 < CH_3CONH_2 < CH_3COCl$
4) $(CH_3CO)_2O < CH_3COOC_2H_5 < CH_3CONH_2 < CH_3COCl$
5) $CH_3COOC_2H_5 < CH_3CONH_2 < CH_3COCl < (CH_3CO)_2O$


இரசாயனவியலின் தொடர்ச்சி அடுத்த வாரம் தொடரும்



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August


# பௌதிகவியல் - 1


ஆசிரியர் : - சி.சிந்தனைச்செல்வன்
(B.Sc) Dip in Edu கொழும்பு விவேகானந்தா கல்லூரி


## அலகுகளும் பரிமாணங்களும்.

01. நீரின் அடர்த்தி,
a) $10^{-3}$ $kgm^{-3}$ b) 10 $kgm^{-3}$ c) $10^3$ $kgm^{-3}$ d) $10^6$ $kgm^{-3}$ e) $10^3$ gm

02. ஒரு வளிமண்டல அமுக்கம்,
a) $10^8$ $Nm^{-2}$ b) $10^7$ $Nm^{-2}$ c) $10^6$ $Nm^{-2}$ d) $10^5$ $Nm^{-2}$ e) $10^4$ Nm

03. C - கொள்ளளவும், R- தடை எனின், 1 / CR இன்,
a) $M^o L^o T^2$ b) $M^o L^o T^{-1}$ c) $M^o L^1 T^{-1}$ d) $ML^2 T^{-1} A^{-1}$ e) $ML^{-1} T^{-1} A^{-1}$

04. பின்வருவனவற்றில் எத்தொகுதி அடிப்படை கணியங்களைக் கொண்டிருக்கும்?
a) நீளம், நேரம், திணிவு. b) நீளம், நேரம், வேகம். c) நீளம், நேரம், வேகம்.
d) திணிவு, நேரம், வேகம். e) நீளம், திணிவு, கதி.

05. பின்வருவனவற்றில் எது பரிமாணமுடைய மாறிலி?
a) முறிவுச்சுட்டி b) விகாரம். c) சாரடர்த்தி. d) ஈர்வை மாறிலி. e)உராய்வுக்குணகம்.

06. 100 W மின்குமிழின் வலு ச.கி .செ. அலகில்,
a) $10^6$ erg / S b) $10^7$ erg / S c) $10^9$ erg / S d)$10^{11}$ erg / S e) $10^{12}$ erg / S

07. $ML^{-1} T^{-1}$ குறிப்பது,
a) திருப்பம் b) விசை. c) அமுக்கம் d) பாகுநிலை குணகம்., e) வேலை

08. திருப்பத்தின் அலகு,
a) NS b) $NS^{-1}$ c) Nm d) $Nm^{-1}$ e) $Nm^{-2}$

09. குறிப்பிட்ட திரவமொன்றின் அடர்த்தி 15. 7g $cm^{-3}$ Cx $kgm^{-3}$ இல்,
a) 15. 7 $kgm^{-3}$ b) 157 $kgm^{-3}$ c) 1570 $kgm^{-3}$ d) 15700 $kgm^{-3}$ e) 157000 $kgm^{-3}$

10. பின்வருவனவற்றில் எதன் அலகு மீடுஞ் $^1$,
a) வேகம். b) ஆர்முடுகல். c) உந்தம். d)கோண உந்தம். e) கணத்தாக்கு

11. Wb இற்கு சமவலுவானது,
a) $Am^{-2}$ b) $Am^{-2}$ c) $Am^{-1}$ d) $Tm^2$ e) $Tm^{-1}$

12. பின்வருவனவற்றில் எதன் அலகு மீட $^1$ ?
a) விசை. b) வலு. c) சக்தி.
d) மேற்பரப்பிழுவை e) பாகுநிலைக்குணகம்.

13. ஏக பரிமாண விரிகைத்திறனின் பரிமாணம் குறிப்பது,
a) $ML^2 T^{-2} Q^{-1}$ b) $ML T^{-2} Q^{-1}$ c) $M^o L^o TQ^{-1}$
d) $M^o L^o T^o Q^{-1}$ e) $M^o L^o T^o Q^{-2}$

14. காந்த அனுமதித்திறனின் பரிமாணம்,
a) $M^o L^{-1} T$ b) $M^o L^2 T^{-1}$ c) $M^o L^2 T^{-1} I^2$
d) $MLT^{-2} I^2$ e) $ML T^{-2} I^{-2}$

15. கோள மேற்பரப்பு ஒன்றின் வளைவினாரையை அளக்கப் பயன்படுவது,
a) கோளமானி. b) வேணியர் இடுக்கிமானி.
c) நுண்மானி திருகுகணிச்சி d) திருசியமானி.
e) நகரும் நுணுக்குக்காட்டி.

16. அலகுகனவளவிற்கான சக்தி குறிப்பது,
a) அமுக்கம். b) விசை. c) உதைப்பு. d) வேலை. e) வலு.

17. ஒரே பரிமாணங்களைக் கொண்டிருப்பது,
a) கணத்தாக்கு, உந்தம்.
b) வெப்பக் கொள்ளளவு, தன்வெப்பக் கொள்ளளவு.
c) சடத்துவ திருப்பம், கோண உந்தம்.
d) மேற்பரப்பிழுவை, விசை.
e) சடத்துவத்திருப்பம், திருப்பம்.

18. $10^6$ dyn $cm^{-2}$ சமவலுவானது,
a) $10^5$ $Nm^{-2}$ b) $10^4$ $Nm^{-2}$ c) $10^6$ $Nm^{-2}$ d) $10^7$ $Nm^{-2}$ e) $10^8$ $Nm^{-2}$

19. சக்தியின் அலகு அல்லாதது,
a) Ws b) $kgms^{-1}$ c) Nm d) J e) Kwh

20. தேய்வு மாறிலியின் பரிமாணத்தைக் கொண்டிருப்பது,
a) மூல். b) அதிர்வெண். c) நேரம்.
d) திணிவு. e) சக்தி.

21. ஒரு துணிக்கையின் வேகம் 10mm/ ns எனின், அதன் வேகம் $kmh^{-1}$ இல்
a) 3.6 x $10^3$ $kmh^{-1}$ b) 3.6 x $10^5$ $kmh^{-1}$ c) 3.6 x $10^7$ $kmh^{-1}$
d) 3.6 x $kmh^{-1}$ e) 0. 36 $kmh^{-1}$

22. இரசத்தின் மேற்பரப்பிழுவை 32 dyne $cm^{-1}$ ஆகும், இது SI அலகில்
a) 0. 032 b) 0. 32 c) 3200
d) 32 000 e) 320000

23. L - மின் கடத்தாறு, R - தடை எனின், L. R குறிப்பது,
a) $M^1 L^o T^1$ b) $M^o L^o T^1$ c) $M^1 L^1 T^1$
d) $M^o L^{-1} T^o_2$ e) $M^o L^1 T^2$

24. $M^1 L^{-2} T^{-2}$ குறிப்பது,
a) சக்தி. b) அமுக்கம். c) முறுக்கம்.
d) அமுக்கப்படித்திறன். e) வலு.

25. மரத்தின் அடர்த்தி 0. 5g $cm^{-3}$ இது SI அலகில்
a) 5000 b) 500 c) 5
d) 0.5 e) 0. 05

26. L மின் கடத்தாறு, C -கொள்ளளவம் எனின், 1/2pLC இன் பரிமானம்,
a) $M^o L^1 T^{-1}$ b) $M^o L^o T^{-1}$ c) $M^o L^o T^1$
d) M, L, T என்பவற்றில் வெளிப்படுத்த முடியாது. e) $M^o L^1 T^{-2}$

27. ( சக்தி x நேரம் ) இன் பரிமாணம்,
a) $ML^2 T^{-2}$ b) $MLT^{-2}$ c) $ML^3 T^{-2}$
d) $ML^2 T^{-1}$ e) $ML^3 T^{-1}$

28. வெற்றிடத்தில் மின் அனுமதித்திறனின் (Eo) அலகு,
a) $CN^{-1} m^{-1}$ b) $Nm^2 C^{-2}$ c) $C^2 N^{-2} m^{-2}$
d) $C^2 N^{-1} m^{-2}$ e) $C^2 N^2 m$

29. வேகவர்க்க இடைமூலத்தின் பரிமாணம்,
a) $M^o LT^{-1}$ b) $M^o L^O T^{-2}$ c) $M^O L^O T^{-1}$
d) $MLT^{-3}$ e) $ML^{-1} T^{-3}$

30. அனுமதித்திறன் SI அலகில்,
a) $Hm^{-2}$ b) $TA^{-1}$ m c) Wb $A^{-1} m^{-1}$
d) Wb $A^{-1} m^{-2}$ e) மேற்கூறிய யாவும்.


இதனை 60 நிமிடத்துக்குள் செய்து பயிற்சி பெறவும் இதன் தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# கணக்கீடு - 1

ஆசிரியர் : - R.ஜனதன் (B.BA.Hons)
உதவி - எஸ்.ஜெயானந்தன் (கொழும்பு)

## பகுதி - 1

**பின்வரும் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமையக்கூடியது,
   அ) தகவல்களை பதிவு செய்தல்.
   ஆ) தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.
   இ) தரவுகளை வகைப்படுத்தி வியாக்கியானம் கூறுதல்.
   ஈ) கணக்கீட்டின் வெளியீடுகளான வியாபார இலாபநட்ட கணக்கு, ஐந்தொகை தயாரித்தல்.
   உ) கணக்கீட்டின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துதல்.

02. காசேட்டு வங்கி மீதி, வங்கிக்கூற்று மீதி வேறுபாட்டிற்கு பின்வருவனவற்றில் எது காரணமாக அமையமாட்டாது?
   அ) மாற்றப்படாத காசோலை.
   ஆ) வசூலிக்கப்படாத காசோலை.
   இ) நேரடிவைப்பு.
   ஈ) அதிகாரமளிக்கப்பட்ட மேலதிகபற்று மீதியைவிட அதிகரிக்கும்போது அது தொடர்பாக வங்கியினால் அனுப்பப்பட்ட அறிவுறுத்தல் கடிதம்.

03. சென்ற வருட இறுதி இருப்பு குறைவாக மதிப்பிடப்பட்டால் அது நடைமுறை வருட இலாபத்திலும் விற்பனைக் கிரயத்திலும் ஏற்படுத்தும் தாக்கம் யாது?
   அ) இலாபம், விற்பனைக்கிரயம் அதிகரித்துக் காட்டப்படும்.
   ஆ) இலாபம், விற்பனைக்கிரயம் குறைத்துக் காட்டப்படும்.
   இ) இலாபம் அதிகரித்தும் விற்பனைக்கிரயம் குறைத்தும் காட்டப்படும்.
   ஈ) இலாபம் குறைத்தும் விற்பனைக்கிரயம் அதிகரித்தும் காட்டப்படும்.
   உ) விற்பனைக்கிரயம் குறைத்துக் காட்டப்படும். இலாபத்தில் எதுவித தாக்கமும் இல்லை.

04. பின்வருவனவற்றுள் வருமானச் செலவீடாக அடையாளப்படுத்தக்கூடியது,
   அ) இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கேற்பட்ட கிரயம்.
   ஆ) இயந்திரத்தினை கழற்றி அகற்றி மீள நிறுவுவதற்கான செலவு.
   இ) இயந்திரம் இறக்குமதி செய்தபோது ஏற்பட்ட சேதத்தினை திருத்தும் செலவு.
   ஈ) இயந்திரத்தை பொருத்துவதற்காக தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதற்காக பழைய சுவரை உடைப் பதற்கான கிரயம்.
   உ) இயந்திரக் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்ட சட்டக் கட்டணம்.

05. வெளித்திரும்பல் நாளேட்டில் பதியப்படும் தகவல்கள் எங்கிருந்து பெறப்படும்?
   அ) வாடிக்கையாளருக்கு அனுப்பிய பட்டியலில்.
   ஆ) விநியோகத்தரிடம் பெற்ற பட்டியலில்.
   இ) வாடிக்கையாளருக்கு அனுப்பிய செலவுத்தாளில் இருந்து.
   ஈ) விநியோகத்தரிடம் இருந்து பெற்ற செலவுத் தாளில் இருந்து.
   உ) மேற்கூறிய எவையுமல்ல.

06. தொழிற்படு மூலதனம் கணிப்பிடும்போது பின்வருவனவற்றில் எது கவனத்திற் கொள்ளப்படுவதில்லை?
   அ) சென்மதி உண்டியல்.
   ஆ) வழியில் உள்ள சரக்கிருப்பு.
   இ) வழியில் உள்ள காசு.
   ஈ) ஆக்கவுரிமை.
   உ) முற்பண விளம்பரம்.

07. ஒரு கணினி 1. 1. 2006 இல் ரூபா 100. 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது. வருடாந்தம் 30% குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது. 31. 12. 2007இல் இது ரூபா 50.000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம் யாது?
   அ) இலாபம் ரூபா 1000
   ஆ) நட்டம் ரூபா 1000
   இ) நட்டம் ரூபா 20.000
   ஈ) இலாபமோ நட்டமோ இல்லை.

08. 1.1.2007 இல் கடன்பட்டோர் வரவு மீதிகளின் மொத்தம் 13000. செலவு மீதி 500. மொத்த விற்பனைகள் 87000. காசு விற்பனைகள் 19500. உட்திரும்பல்கள் 2000. கடன்படுநரிடம் பெற்ற காசு 43000. அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்தது 800. 31. 12. 2007 இல் கடன்படுநர் செலவு மீதிகளின் மொத்தம் 900. 31.12.2007 இல் கடன்படுநர் வரவு மீதிகளின் தொகை யாது?
   அ) ரூ . 7900    ஆ) ரூ. 7600
   இ) ரூ . 7100    ஈ) ரூ. 26600

09. கடன்பட்டோர் தொகை ரூ. 43720. அறவிடமுடியாத ரூ. 7350 ஆகும். ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு 5% ஆயின் சரியான கணிப்பீட்டினைக் காட்டும் பிரிவினைத் தெரிவு செய்க.
   அ) 5/100 x 43720    ஆ) 5/100 ( 43720 + 7350 )
   இ) 43720 - 5/100 x 7350    ஈ) 5/100 x 43720 - 7350

10. நாதன், சேந்தன் பங்குடமையொன்றில் நாதனும் சேந்தனும் பற்றுக்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர். அவர்களின் பங்குடமை ஒப்பந்தம் பின்வருமாறு பற்றுவட்டி தொடர்பாக வலியுறுத்துகின்றது. அவர்களது பற்றுக்களும் பற்றுவட்டி தொடர்பான விவரங்களும் வருமாறு:- நாதன் ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் 2400 ரூ. இனை சீராக பற்றி வந்துள்ளார். இவரின் பற்றுக்களின் மீது 5% வட்டி அறவிடப்பட வேண்டும். சேந்தன் 31.08.2007 இல் 5000 உம், 01.11.2007 இல் 400 உம் பற்றியுள்ளார். இவரது பற்றுக்கள் மீது 12% வட்டி அறவிடப்படும். இவர்களது நிதியாண்டு வருடம் 01.01 2007 தொடக்கம் 31.12.2007 வரையிலும் ஆகும். இலாபநட்ட பகிர்கணக்கில் வெளிப்படுத்தவேண்டிய பற்று வட்டிகள் முறையே,
   அ) நாதன் ரூ. 720.00 - சேந்தன் ரூ. 280.00
   ஆ) நாதன் ரூ. 1,440.00 - சேந்தன் ரூ. 280.00
   இ) நாதன் ரூ. 1,440.00 - சேந்தன் ரூ. 3,600.00
   ஈ) நாதன் ரூ. 720.00 - சேந்தன் ரூ. 2,800.00

**கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக**
விளம்பரங்களை அச்சிடுவதில் ஈடுபட்டுள்ள கம்பனி ஒன்று ரூ. 50000 இற்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் செயற்பாட்டினை அடுத்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. குறித்த தினத்தில் கம்பனி ஒரு முற்பணக் கொடுப் பனவாக ரூ. 20.000 ஐயும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும் போது கம்பனி முழுப் பெறுமதியான ரூ. 50000 ஐ விற்பனைக் கணக்கில் செலவிலும், காசுக்கணக்கில் ரூ. 20000ஐ வரவிலும், கடன்பட் டோர் கணக்கில் ரூ. 30000 வரவிலும் வைக்கின்றது.

11. மேற்படி தவறை பொதுநாட் குறிப்பேட்டில் திருத்துவதற்கான பதிவு,
   அ) விற்பனை க/கு வரவு ரூபா. 50000, காசு க/கு ரூபா. 50000
   ஆ) விற்பனை க/கு வரவு ரூபா. 50000, கடன்பட்டோர் க/கு ரூ. 30000, முற்பண க/கு ரூபா.20000
   இ) முற்பண க/கு வரவு ரூபா. 10000, விற்பனை க/கு ரூபா. 10000
   ஈ) காசு க/கு வரவு ரூபா. 20000, முற்பணமாகப் பெற்றுக்கொண்ட வருமான க/கு ரூபா. 20000

12. மேற்படி தவறின் திருத்தமானது எந்தக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது.
   சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமை
   அ) (30000) = 20000 + (50000)    ஆ) (20000) = 50000 + (30000)
   இ) 500000 = - + (50000)    ஈ) 20000 = 30000 + (10000)

13. ஒரு ஸ்தாபனத் தலைவரின் கம்பனி வாகனத்தின் கொள்வனவுக்கிரயம் ரூ. 4 மில்லியன் ஆகும். அது ஒரு சம தவணை (நேர்கோட்டு) முறையில் தேய்மானப்படுத்தப்படுகின்றது. 31. 12. 94 அன்று அதன் தேறிய வேட்டுப் பெறுமதி ரூ. 1.6 மில்லியனும், ஆண்டுச்தேய்மானச் செலவு ரூ 0.8 மில்லியனும் ஆகும். வாகனத்தின் கணக்கீட்டு தேய்மானத்தைக்கணிப்பதற்குப்பின் குறிப்பிட்டவற்றுள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலம் யாது? (அக்கால முடிவில் பெறுமதி ஏதும் இல்லையெனக் கருத்திற் கொள்க.)
   அ) 4 வருடங்கள்    ஆ) 8 வருடங்கள்    இ) 10 வருடங்கள்
   ஈ) 5 வருடங்கள்    உ) பற்றாக்குறையான தகவல்.

14. உற்பத்திக்கிரயத்தின் பிரதான வகுதிகள்,
   அ) மூலக்கிரயம், மூலப்பொருட்கிரயம்.
   ஆ) மூலக்கிரயம், மேந்தலைக்கிரயம்
   இ) மூலதனச்செலவு, வருமான செலவு.
   ஈ) மூலப்பொருட்கிரயம், மேந்தலைக்கிரயம்.
   உ) உற்பத்திக்கிரயம், உற்பத்தியல்லாக்கிரயம்.

15. ஜனவரி மாதம் 19 ஆம் திகதி குமார் தந்த ரூபா. 5750 காசோலை மாதம் 25ஆம் திகதி வங்கிக்கு அனுப்பி ஜனவரி 30ஆம் திகதி வங்கியால் மறுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டது. அத்திகதியில் வங்கிக் கூற்றின்படி மீதி ரூபா 37,250 இக்கால எல்லைக்குள் வேறு நடவடிக்கைகள் நிகழவில்லை. 19 ஒச்ண இல் காசேட்டு வங்கியில் இருக்கும் மீதி
   அ) ரூபா 108,000    ஆ) ரூபா 82,750    இ) ரூபா 120,000
   ஈ) ரூபா 145,350    உ) மேற்கூறிய எவையுமல்ல

16. முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டியைப் பதிந்து கொள்வதற்கு அவசியமான நாட்குறிப்பு பதிவு,
   அ) காசுக் ணக்கு வரவு, முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டிக் கணக்கு செலவு.
   ஆ) முதலீடுகள் மீதான வரவேண்டிய கணக்கு வரவு, முதலீட்டுக்கணக்கு செலவு.
   இ) முதலீடுகள் மீதான வரவேண்டிய வட்டிக்கணக்கு வரவு, முதலீட்டு க்கணக்கு செலவு.
   ஈ) முதலீடுகள் மீதான வட்டி க்கணக்கு வரவு, வரவேண்டிய முதலீட்டு வட்டிக்கணக்கு செலவு.

17. 1. Jan. 2005 இல் அட்டுறு மின் கட்டணம் 2500 ரூபா. 2005 இல் காசாக செலுத்திய கட்டணம் 17000 ரூபா. 31 Dec முற்பண மின் கட்டணம் 500 ரூபா எனின் , 2005ஆம் ஆண்டுக்கு இலாப நட்ட கணக்கிற்குரிய மின்கட்டணம் யாது?
   அ) 15,000 ரூபா.    ஆ) 1,900 ரூபா.    இ) 140,000 ரூபா.
   ஈ) 20,000 ரூபா.    உ) 18,000 ரூபா.

**கீழ்வரும் கூற்றினைப் பயன்படுத்தி வினா 18, 19 என்பவற்றிற்கு விடையளிக்குக.**
விளையாட்டுக்கழகம் ஒன்றில் 50 அங்கத்தவர்கள் உள்ளனர். வருடாந்த சந்தாக்கட்டணம் ரூபா. 200 ஆகும். பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தாப்பணம் ரூபா. 10,000 காசுக் கணக்கில் வரவு வைக்கப் பட்டது. செயலாளர் கடந்த வருடத்திற்குரிய சந்தா ரூ. 1000 ஐயும் அடுத்த வருடத்திற்குரிய சந்தா ரூ. 2000 ஐயும் தான் பெற்றுக்கொண்டதாக அறிவித்தார். இத் தொகைகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தாக் (கணக்கு)களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

18. வருமானச் செலவுக்கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய தொகை,
   அ) ரூபா 10,000    ஆ) ரூபா 8,000    இ) ரூபா 9,000
   ஈ) ரூபா 13,000    உ) ரூபா 7,500

19. சந்தாக்கணக்கில் செலவுப் பக்கத்தில் கீழ் கொண்டுவரப்பட்ட மீதி.
   அ) ரூபா 100    ஆ) ரூபா 2,000    இ) ரூபா 3,000
   ஈ) ரூபா 4,000    உ) மீதி இல்லை.

20. பிரகாஸ் வியாபார நிலையத்தில் 20.03.08 இல் தீயழிவு நிகழ்ந்தது. எனினும் 15,000 /- பொருள் காப்பாற்றப்பட்டது. பின்வரும் தகவல்கள் தரப்பட்டன.
   இருப்புக்கள் (31. 12. 2007 இல்) 20,000 ரூபா கொள்வனவு (01. 01. 2008 - 20. 03. 08) 400,000 ரூபா
   விற்பனவு (01. 01. 08. - 20. 03. 08) காசு 300,000ரூபா 01. 01. 2008 - 20. 03. 2008 - கடன் 60,000 ரூபா
   விற்பனை விலையில் மீது மொத்தலாபம் 20%
   தீயால் அழிந்த தொக்கின் பெறுமதியைக் காண்க.
   அ) ரூ. 17,000    ஆ) ரூ. 117,000    இ) ரூ. 127,000
   ஈ) ரூ. 110,000    உ) ரூ. 100,000

**30 நிமிடங்களுக்குள் செய்துமுடிக்க முயற்சிக்கவும்..**

**மாணவர் கவனத்திற்கு.....**
★இப்பகுதியில் வெளிவரும் அனைத்து வினாக்களையும் நேரகணித்து உரிய நேரத்துக்குள் பயிற்சி பெறுங்கள்.
★இப்பகுதிகளுக்குரிய விடைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும்போது ஒப்பீடுசெய்து நீங்கள் சுயமாகவே திருத்திக்கொள்ளுங்கள்.
★இப்பகுதியில் வெளிவரும் பல்தேர்வு வினாக்களில் ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் எமது கல்விச்சுடர் பகுதிக்குத் தெரியப்படுத்தின் உரிய ஆசிரியர் ஊடாக ஆலோசனை வழங்கப்படும்.

ஆசிரியர், உதயன் - கல்விச்சுடர்,
இல.36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 071-6850005, 021-2223837, 071-4273035
தொலைநகல் :- 021 2229933 , மின்னஞ்சல் :-newkalvisudar@yahoo.com


# கற்றல் குறிப்புகள், கம்பனிக் கணக்கு (கணக்கீடு - 11)

**2007 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச்சட்டம் அறிமுகம்.**

இலங்கையில் இதுவரையில் நடைமுறையிலிருந்த 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட் டத்திற்குப் பதிலாக இலங்கை அரசினது வர்த்தமானிப்பத்திரிகையின்படி 2007 ஆம் ஆண்டு மார்ச் 02ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007 மே 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

**★ கூட்டிணைக்கப்பட்ட கம்பனி - வரைவிலக்கணம்.**
சட்ட ரீதியான ஏதேனும் தொழிலை அல்லது செயற்பாட்டைக் கொண்டுநடத்துவதற்கு அல்லது பொறுப்பேற்பதற்காக அல்லது வேறு ஏதேனும் செயல்களுக்காக உருவாக்கப்படும் அமைப்பு 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படின், அது கூட்டிணைக் கப்பட்ட கம்பனி எனப்படும்.

**★ கூட்டிணைக்கப்பட்ட கம்பனி வகைகள்**




கம்பனிப் பதிவாளருக்கு பதிவு செய்வதற்காக/கூட்டிணைப்பதற்காக சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் வருமாறு:-
- விண்ணப்பப் படிவம்.
- அமைப்பு அகவிதி.
- இயக்குனரின் சம்மதக் கடிதம்.
- செயலாளரின் சம்மதக் கடிதம்.
- பெயர் தொடர்பான கூற்று.

ஆசிரியர்:- இ.ஜனதன்
கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி.

**★ அமைப்பு அகவிதி**
கூட்டிணைக்கப்படும் கம்பனிக்கும் பங்குதாரருக்கும் இடையிலான ஒப்பந்தம் போன்று அமைவது அமைப்பகவிதி ஆகும். அமைப்பக விதியானது இரு வகையாக அமையலாம்.
1) புதிய கம்பனிச்சட்டத்தின் முதலாம் அட்டவணை காட்டும் மாதிரி அமைப்பக விதி.
2) கம்பனியின் மூலப்பங்குதாரர்களின் விருப்பத்துடன் தயாரிக்கப்படும் சுய அமைப்பக விதி.

**★ மாதிரி அமைப்பக விதி**
2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க புதிய கம்பனிச சட்டத்தின் முதலாம் அட்டவணையில் மாதிரி அமைப்பக விதியொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, புதிய கம்பனியொன்றை உருவாக்கும்போது மூலப்பங்குதாரர்கள் விருப்பம் தெரிவிப்பார்கள் ஆயின், இம்மாதிரி அமைப்பக விதியைக் கம்பனி பின்பற்றிக்கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுய அமைப்பக விதி

கம்பனியின் மூலப்பங்குதாரர்கள் புதிய கம்பனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் உள்ள மாதிரி அமைப்பக விதியைப் பின்பற்றும் விருப்பத்தினைக் கொண்டிராதபோது குறித்த கம்பனிக்கு என சுயமாக அமைப்பக விதியொன்றைத் தயாரித்துக் கொள்ளவும் புதிய கம்பனியின் சட்டம் இடமளிக்கிறது..

★ அமைப்பக விதி வழங்கும் பிரதானமான தகவல்கள்:-

1) கம்பனியினது குறிக்கோள்.
2) கம்பனியிலுள்ள பங்குதாரர்களின் உரிமைகளும் கடப்பாட்டுகளும்.
3) கம்பனி முகாமையும் நிர்வாகமும்.

பங்குகள்

கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் சிறிய அலகுகளே பங்குகள் எனப்படும்.

★ பங்குகளின் வகைகள்

1) சாதாரண பங்கு / உரிமைப்பங்கு.
2) முன்னுரிமைப் பங்கு.
   - மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்கு
   - மீட்க முடியாத முன்னுரிமைப் பங்கு
   - திரள் முன்னுரிமைப்பங்கு
   - திரளா முன்னுரிமைப்பங்கு
   - பங்கு மற்றும் முன்னுரிமைப்பங்கு
3) விசேட பங்குகள்.
4) வரையறுத்த அல்லது நிபந்தனைகளுடன் கூடிய வாக்குரிமை கொண்ட பங்குகள்.
5) வாக்குரிமையற்ற பங்குகள்.

★ கூறப்பட்ட மூலதனம்

பங்குகள் வழங்கப்படுவது தொடர்பாக அல்லது பங்குகள் மீதான அழைப்புக்கள் தொடர்பாகக் கம்பனியினால் பெறப்பட்ட, அல்லது கம்பனிக்கு வருமதியான அத்துடன் செலுத்தப்படத் தக்கதான எல்லாத் தொகைகளினதும் கூட்டு மொத்தம் கூறப்பட்ட மூலதனம் ஆகும்.

உதாரணம்:-

அ கம்பனி 10,000 பங்குகளை 10 ரூபா விலையில் பின்வருமாறு அழைக்க தீர்மானித்தது.
மனு - 3, ஒதுக்கல்-4, அழைப்பின்போது-3
இங்கு 10,000 பங்குகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு பங்குகள் விநியோகிக்கப்பட்டன. ஒதுக்கல் பணமும் பெறப்பட்டது. ஆனால், அழைப்புவிடப்படவில்லை. கூறப்பட்ட முதல் யாது?

| | |
|---|---|
| மனுப்பணம் | = 3 து 10,000 = 30,000/= |
| ஒதுக்கலில் பெற்றது | = 4 து 10,000 = 40,000/= |
| கூறப்பட்ட முதல் | = 70,000/= |

அழைப்பு விடப்பட்டது ஆனால், பணம் வசூலிக்கப்படவில்லையெனின்,
கூறப்பட்ட முதல் = 10 x 100,000 = 100,000/=

(அடுத்த வாரம் தொடரும்)

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
## General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# அரசியல் - 1

ஆசிரியர் : A.கியூபேட் (B.A.யாழ்.)

01. அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்புக்கு மிகப்பொருந்தும் சேர்மானத்தைத் தெரிவு செய்க
அ - அரசுப் பாலனக் கலை.
ஆ - தேசங்களுக்கிடையிலான அரசியல்.
இ - மக்களுக்கிடையிலான சமூகத் தொடர்புகள்.
ஈ - சர்வதேச நிறுவனங்களின் பங்குகள்.
1)அஆஇ 2)அஆஈ 3)ஆஇஈ 4)அஇஈ

02. அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதன் நோக்கங்களுடன் மிகப்பொருந்தும் சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - சமூகத்தின் கலாசார விழுமியங்களைப் பற்றிய அறிவை மேம்படுத்தும்.
ஆ - அரசியல் முறைமைகள் பற்றிய விளக்கத்தைப் பரவலாக்கும்.
இ - அரசியலில் செயற்பட்டு பங்கேற்புக்கான அறிவைப் பெருக்குதல்.
ஈ - பிரஜைகளின் சமூகப் பொறுப்புக்களைப் பற்றிய அறிவை விருத்தி செய்தல்.
1)அஆஇ 2)அஆஈ 3)ஆஇஈ 4)அஇஈ

03. அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதற்கான அணுகு முறைகளை விளக்கும் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
1)நடத்தை வாத அணுகுமுறை அரசியன் நிலைமைகளில் இடம்பெறும் மனித நடத்தையில் கவனஞ்செலுத்துகிறது.
2)வரலாற்று அணுகுமுறை அரசியலில் சமூகத்தளத்தைக் கற்பதன் மூலம் அரசியலை ஆராய்கிறது.
3)ஒப்பீட்டு அணுகுமுறை தற்கால, கடந்தகால அரசியல் முறைமைகளை ஒப்பிட்டு ஆராய்கிறது.
4)மெய்யியல் அணுகுமுறை முன் வகுக்கப்பட்ட கோட்பாடுகளிலும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது.

04. தேசிய அரசின் தோற்றத்திற்கு மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
1) அது கிரேக்க நகர அரச காலத்தில் தோன்றியது.
2) அது தோன்றுவதற்கான சூழலைப் புரட்டஸ்தாந்துச் சீர்திருத்த இயக்கம் வழங்கியது.
3) அது மானிய முறையின் எழுச்சியின் விளைவினதாகும்.
4) அது தோன்றுவதற்குக் கத்தோலிக்கத் திருச்சபை உதவியது.

**எழுதி முடிக்க வேண்டிய நேரம் 30 நிமிடம்**

05. அரசுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - அரசு சமூகத்தின் பொது நன்மைக்காகச் செயற்படுகிறது.
ஆ - அரசு ஒரு சட்டம் சார்ந்த சங்கமாகும்.
இ - அரசின் உறுப்புரிமை விருப்புக்குரியதாகும்.
ஈ - அரசு மட்டுமே நிர்ப்பந்திக்கும் அதிகாரத்தைத் தனியுரிமையாகப் பெறுகிறது.
1)அஆஇ 2)ஆஇஈ 3)இஈஅ 4)ஈஅஆ

06. அரசாங்கத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - அரசாங்கம் அரசின் கருவியாகும்.
ஆ - அரசாங்கத்தின் உறுப்புரிமை வலுக்கட்டாயமானது.
இ - அரசாங்கத்துக்கு இறைமை அதிகாரம் உண்டு.
ஈ - அரசாங்கம் அரசின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துகின்றது.
1)அஆஇ 2)ஆஇ 3)அஈ 4)ஈஅஆ

07. சமூகத்திற்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) சமூகம் இயற்கையானதாகும்.
2) சமூகத்திற்கு எல்லைகள் இல்லை.
3) சமூகமானது மனிதரால் ஒழுங்கமைக்கப்பட்ட சகல சமூகத்தாபனங்களையும் உள்ளடக்கியதாகும்.
4) சமூகமானது அதன் உறுப்பினர்களின் கட்டாய ஒத்துழைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

08. சங்கங்களிற்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) சங்கங்கள் என்பது தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஒழுங்கமைந்த மனிதக்குழுக்களாகும்.
2) சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட ஆல்புலத்துக்குள்ளேயே செயற்படுகின்றன.
3) சங்கங்கள் அரசின் விருப்புக்குட்பட்டே செயற்பட வேண்டும்.
4) அரசு மனிதரை அடக்குவதற்கே சட்டங்களைப் பிறப்பிக்கிறது.

09. அரசு பற்றிய தாரண்மைக் கோட்பாட்டுக்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) அரசு மனிதரால் உருவாக்கப்பட்ட அதியுயர் சமூகத்தாபனமாகும்.
2) அரசு மனிதரின் சிறப்பான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாகும்.
3) அரசு மனித இனம் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.
4) அரசு மனிதரை அடக்குவதற்கே சட்டங்களைப் பிறப்பிக்கின்றது.

10. அரசு பற்றிய மாக்சீயக் கோட்பாடுக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) அரசு வர்க்கப் போராட்டத்தின் விளைவினதாகும்.
2) அரசு சமூகத்திலுள்ள சகல வர்க்கங்களுக்கும் சமனான வகையில் சேவையாற்றுகிறது.
3) அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு மட்டுமே சேவையாற்றவுள்ளது.
4) அரசு நிரந்தரமற்றது, அது கமியூனிசிய சமூகத்தில் உதிர்ந்து விடும்.

11. இறைமைக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - இறைமை என்பது அரசின் மீயுயர் அதிகாரமாகும்.
ஆ - இறைமை ஏனைய சமூகத்தாபனங்களை விட அரசை உயர்ந்ததாக்குகின்றது.
இ - இறைமை அரசு பிறப்பிக்கும் சட்டங்களுக்குச் சட்ட ரீதியான தன்மையை வழங்குகின்றது.
ஈ - இறைமையைப் பிரிக்கவும் ஒப்படைக்கவும் முடியும்.
1)அஆஇ 2)ஆஇ 3)அஈ 4)ஈஅஆ

12. உரிமைகள் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - உரிமைகள் என்பது சமூக ஒப்புதலைப் பெற்றதனிமனிதரின் கோரிக்கைகளாகும்.
ஆ - உரிமைகள் அரசின் ஒப்புதலைப்.பெற்றதன் பின்னரே பொருளுடையதாகின்றன.
இ - உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சட்டங்கள் அவசியமாகின்றன.
ஈ - எக்கோரிக்கையையும் சட்டத்தின் மூலம் உரிமையாக மாற்றலாம்.
1)அஆஇ 2)ஆஇஈ 3)இஈஅ 4)ஈஅஆ

13. சுதந்திரம் பற்றிய எண்ணக்கருவுக்குப் பெருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - சுதந்திரம் என்பது ஒருவர் தாம் விரும்பும் எதனையும் செய்வதற்குள்ள வாய்ப்பாகும்.
ஆ - ஒரு சாராரின் உரிமைகள் ஏனையோரின் விருப்பில் தங்கியிருப்பின் அங்கு சுதந்திரம் நிலவப்படமாட்டாது.
இ - சுதந்திரத்திற்கு உரிமைகள் அவசியமாகின்றன.
ஈ - சுதந்திரமும் ஆணையதிகாரமும் ஒன்றுக்கொண்டு நேர் எதிரானவையன்று.
1)அஆஇ 2)ஆஇஈ 3)இஈஅ 4)ஈஅஆ

14. சமத்துவம் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - சமத்துவம் சகலருக்கும் சம வாய்ப்பு உண்டு எனக்கருதுகின்றது.
ஆ - கணிதவியலாளனும் கொத்தனும் ஒரு சமமானவர்களாகக் கருதப்படாவிட்டால் அங்கு சமத்துவம் நிலவமாட்டாது.
இ - சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சமத்துவம் அவசியமாகின்றது.
ஈ - ஒரு சாராருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை ஏனையோருக்கும் உறுதிப்படுத்த வேண்டும் என அது கூறுகின்றது.
1)அஆஇ 2)ஆஇஈ 3)இஈஅ 4)ஈஅஆ

15. வலுவேறாக்கக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
அ - அது அரசாங்கத்தின் பிரதான பணிகளைப் பிரிக்க வேண்டும் எனக் கூறுகின்றது.
ஆ - இவ் எண்ணக்கரு தாராள ஜனநாயகத்துக்கு ஒரு கோட்பாட்டுதளத்தை வழங்குகின்றது.
இ - ஆனால், அது பாசிசம் மற்றும் கம்யூனிசத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
ஈ - இவ் எண்ணக்கருவின் முன்னோடியின் நோக்கம் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும்.
1)அஆஇ 2)ஆஇஈ 3)இஈஅ 4)ஈஅஆ

16. சட்டத்துக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
அ - சட்டம் மனிதரின் இருப்பையும் நடத்தையையும் கட்டுப்படுத்தும் விதிகளின் தொகுதியைக் வெளிப்படுத்துகின்றது.
ஆ - சட்டம் மனிதரின் வெளிவாரியான செயற்பாடுகள், உள்வாரியான சிந்தனைகள் ஆகிய இரண்டையும் ஒழுங்குபடுத்துகின்றன.
இ - சட்டம் அரசின் பலவந்த அதிகாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
ஈ - சட்டமும் ஒழுக்கமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும்.
1)அஆஇ 2)அஇஈ 3)அஆஈ 4)ஆஇஈ

17. சட்டத்தின் ஆட்சிக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
அ - ஏ.வீடைசி நவீன சட்டவாட்சிக் கொள்கையை விரித்துரைத்தவர் ஆவார்.
ஆ - அது சகலருக்கும் சட்டத்தின் முன் சமத்துவத்தையும் சமமான சட்டப்பாதுகாப்பையும் வலியுறுத்துகின்றது.
இ - சட்டத்தின் ஆட்சியையும் யாப்புறு வாதத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாது.
ஈ - அது ஆட்சியாளர்கள் சட்டத்திற்கு மேம்பட்டவர்கள் என்று ஏற்றுக்கொள்கின்றது.
1)அஆஇ 2)அஆஈ 3)ஆஇஈ 4)அஆஇஈ

18. பொதுசன அபிப்பிராயம் தொடர்பான பிழையான கூற்றினைத் இனம் காண்க.
1) அது அரசியல் பங்குபற்றுதலின் ஒரு மறைமுக மாதிரியாகும்.
2) அது ஒரு மனப்பாங்கின் பிரதிபலிப்பாகும்.
3) பிரச்சினைகள் மேலும் விரிவாகும்போது அதன் செல்வாக்கு அதிகரிக்கின்றது.
4) அனைத்தாண்மை அரசாங்கங்களின் கீழ் பொதுசன அபிப்பிராயம் சுருங்கிவிடுகின்றது.

❋ அரசியல் கட்சிகளின் அமுக்கக் குழுக்கள் தொடர்பான சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாக வாசித்து 19ஆம், 20ஆம் வினாக்களிற்கு விடை எழுதுக.
அ - நலன்களைத் தெரிவுசெய்து அடயமுற்படுகின்றன.
ஆ - பாதுகாத்து முன்னேறும் ஒழுங்கமைப்புகள் எனக் கொள்ளப்படுகின்றன.
இ - அவற்றின் பன்மைத் தன்மையிலிலான அரசியல் அபிவிருத்திகளின் ஒரு அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.
ஈ - அதிகாரத்தினைக் கைப்பற்றுதல் ஒரு நோக்கமல்ல.
உ - அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் ஒழுங்கமைப்புகள்.
ஊ - ஆளுபவர்களுக்கு ஆளப்படுவோருக்குமிடையில் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துகின்றது.
எ - பொதுக்கொள்கை மீது செல்வாக்குச் செலுத்த முயலும் குழுக்கள்.
ஏ. - தலைவர்களை ஆட்சேர்த்துப் பயிற்சி வழங்கும் முதல்வர்களாகச் செயலாற்றுதல்.

19. அரசியல் கட்சிகளுக்குப் பிரயோகிக்கக்கூடிய இயல்புகளைத் தரும் சேர்மானத்தைத் அடையாளம் காண்க.
1)அஆஇஊ 2)இஉஊஎ 3)ஏஅஊஆ 4)உஊஏஇ

20. அமுக்கக் குழுக்களுக்குப் பயன்படுத்தக்கூடிய இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.
1)இஈஎஏ 2)அஆஉஊ 3)அஆஈஇ 4)ஈஉஊஎ

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
## General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1

ஆசிரியர்: V.முரளி (Eco.SPL) M.A( Eco)

*01. பாடசாலை ஒன்றின் நலன்புரிச்சங்கம் ஒவ்வொன்றும் 10/= பெறுமதியான அதிஷ்டலாபச் சீட்டினை விற்பனைசெய்தது. பரிசுத்தொகை 1000/= ஆகும். மாணவன் ஒருவன் ஒரு சீட்டு ஒன்றைக் கொள்வனவுசெய்துள்ளான். ஆனால், பரிசுத்தொகையினை வெல்லவில்லை. எனின், மாணவனது அமையச்செலவு யாது?*
1) 10/=
2) 1000/=
3) 10/= ஐக்கொண்டு கொள்வனவுசெய்யக்கூடிய ஏனையபொருட்கள்.
4) 1000/= ஐக்கொண்டு கொள்வனவுசெய்யக்கூடிய ஏனைய பொருட்கள்.

*02. நான்கு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச செலவுகளின் (Public expetiture) சதவீதம் தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளது எனின், இந்நாடுகளானவை எப்பொருளாதாரத் தன்மையினைக் கொண்டுள்ளன?*

| நாடுகள் | K | L | M | N |
|---|---|---|---|---|
| GDP இல் அரசசெலவு | 36% | 50% | 40% | 33% |

1) கலப்புப் பொருளாதாரம்.
2) திட்டமிடல் பொருளாதாரம்.
3) முதலாளித்துவப் பொருளாதாரம்.
4) நிலைமாற்றுப் பொருளாதாரம்.

*03. நிலம் என்ற ஆக்கக் காரணியாகக் குறிப்பிடப்படக்கூடியது எது?*
1) பூந்தோட்டம். 2) வெளிச்ச வீடு. 3) இலவசக்குழாய் நீர். 4) கடற்கரை மணல்.

*04. குறித்த கல்வியைத் தொடர்வதற்கான நேரடிச்செலவு ஆண்டு ஒன்றுக்கு 1000,000/= ஆகும். அல்லது வேலைக்குச் சென்றால் ஆண்டு ஒன்றுக்கு 25,000/= வருமானத்தை உழைக்க முடியும். கல்வியைத் தொடர்ந்தால் கல்விக்கான அமையச்செலவு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?*
1) 100,000/= 2) 125000/= 3) 225000/= 4) 25000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பின்வருவனவற்றுள் உற்பத்திக்காரணியல்லாதது எது?
1) கம்பனியினது பங்குகள்.
2) இயந்திரங்கள்.
3) மூலப்பொருட்கள்.
4) தேர்ச்சியற்ற வேலையாட்கள்.

06. முதலாம்நிலை உற்பத்தியெனக் கொள்ளக்கூடியது எது?
1) நவீன வடிவிலான கார் உற்பத்தி.
2) புதிய படித்தோட்டத்தை உருவாக்குதல்.
3) புதிய களஞ்சியசாலையை உருவாக்குதல்.
4) நட்சத்திர விடுதியொன்று புதிய உணவுப்பட்டியலை உருவாக்குதல்.

07. நிரம்பல் கோட்டின் இடப்பக்க நகர்விற்கான காரணங்களாக அமையக்கூடியவை எவை?
1) போட்டி நிரம்பல் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற வீழ்ச்சி.
2) கூட்டு நிரம்பல் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு.
3) உற்பத்திக்காரணிகளின் விலைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு.
4) தொழில்நுட்பத்தில் ஏற்படுகின்ற முன்னேற்றம்.

08. ஙஉ= = 602ஊ என்ற கேள்விச்சார்பில் ஒருமை நிகழ்ச்சிக்குரிய விலை யாது?
1) 12. 50/= 2) 13/= 3) 4/= 4) 15/=

09. கேள்வியின் விலை நெகிழ்ச்சியற்றது எனக் கொள்க. விற்பனை வருமானத்தைஅதிகரிப்பதற்கு விலையை யாது செய்தல்வேண்டும்?
1) விலையைக் குறைத்தல்வேண்டும்.
2) விலையை அதிகரித்தல்வேண்டும்.
3) விலையை மாற்றத்தேவையில்லை.
4) விலையைக் குறைத்துப் பின்னர் அதிகரித்தல்வேண்டும்.

10. குறித்த நபரின் வருமானம் 10,000/= இலிருந்து 12,000/= ரூபாவாக அதிகரிக்கின்றபொழுது பண்டத்தினது கேள்வியானது 36 சதவீதத்தினால் அதிகரிக்கின்றது. எனில், வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி யாது?
1) 0.55 2) 1.8 3) 5.5 4) 0

11. பின்வரும் வரைபானது பேரூந்துப் பயணத்துக்கான கேள்வியினைக் காட்டு கின்றது. இதற்குச் சரியான விடையை குறிப்பிடுக.
1) இழிவுப்பண்டம். 2) அத்தியாவசியப்பண்டம்.
3) இலவசப்பண்டம். 4) சாதாரண பண்டம்.

12. எல்லை நுகர்வு நாட்டம் என்பது?
1) 1 - mps- 2) ∆/ y∆
3) நுகர்வுக்கோட்டின் சரிவுப் பெறுமதி. 4) மேற் கூறப்பட்ட அனைத்தும்.

13. மொத்தத் தேசிய உற்பத்தியினை வருமான வழிமுறையில் கணிப்பிடுகின்றபொழுது விலக்கப்பட வேண்டியது?
1) பகிரப்படாத இலாபங்கள். 2) வருமான வரி.
3) பெறுமானத் தேய்வு. 4) அரசிடமிருந்து பெற்ற வட்டி வருமானம்.

14. எளிய பொருளாதாரத்தில் சேமிப்புச்சார்பு $S = 100 + 0.25$ எனில், முதலீடானது, 100m ஆகக் காணப்படுகின்றபொழுது சமனிலைத் தேசிய வருமான மட்டம் யாது?
1) 200m. 2) 400m. 3) 800m. 4) 1750m

15. குறித்த நிறுவனம் ஒன்றின் விலையானது எவற்றிற்குச் சமனாகவிருக்கும?
1) எல்லைச் செலவிற்கு. 2) சராசரிச் செலவிற்கு.
3) எல்லை வருமானத்திற்கு. 4) சராசரி வருமானத்திற்கு.

16. குறித்த பொருளாதாரத்தில் நாணயத்தின் பெறுமதி வெளிநாட்டு நாணயத்துக்கு எதிராக தேய்வடைகின்றது. எனில், பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?
1) உல்லாசப் பயணிகளது வருகை அதிகரிக்கும்.
2) ஏற்றுமதிப் பொருளின் விலை உலகசந்தையில் குறைவடையும்.
3) இறக்குமதி மதிப்பொருளின் விலை உள்நாட்டில் குறைவடையும்.
4) இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வி குறைவடையும்.

17. எளிய பொருளாதாரத்தில் வருமானம் 400ட் ஆகக் காணப்பட்ட சாரசரி நுகர்வு நாட்டம் 0.75 ஆகவும் காணப்பட்டது. நுகர்வு 20 சதவீதத்தால் அதிகரிக்க சராசரி நுகர்வு நாட்டம் 0.6 ஆகக் காணப்பட்டது. தற்பொழுது எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி எவ்வளவு?
1) 0.75 2) 0.6 3) 0.3 4) 0.25

18. தனியார் பண்டத்தின் பண்புகள் எனக்குறிப்பிடக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
1) போட்டித் தன்மையற்றது, பயன்பாட்டிலிருந்து விலக முடியாது.
2) போட்டித்தன்மையற்றது, விலக்கக்கூடியது.
3) போட்டித்தன்மையற்றது, விலக்கமுடியும்.
4) எவையும் இல்லை.

19. தரப்பட்ட காலப்பகுதியில் ஊழியப்படையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனில், ஏனையவை மாற்றமடையாதபொழுது தேசிய வருமானத்திலும் அரசின் சமூகநலச் செலவுகளிலும் எத்தாக்கத்தை ஏற்படுத்தும்?

| | தேசிய வருமானம் | சமூகநலச் செலவு |
|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | மாறாது |
| 2) | குறையும் | அதிகரிக்கும் |
| 3) | மாற்றமில்லை | குறிப்பிட முடியாது |
| 4) | அதிகரிக்கும் | குறையும் |

20. ஒரு குறித்த காலப்பகுதியில் பொருளாதாரமானது 12 சதவிதத்தால் வளர்ச்சி அடைய விலைச் சுட்டெண்ணானது 10 சதவிதத்தாலும் சனத்தொகை 2 சத வீதத்தாலும் அதிகரித்துள்ளது. எனில், தலா மெய்த் தேசிய உற்பத்தி எவ்வளவாக அதிகரித்துள்ளது?
1) 0 2) 2% 3) 10% 4) 22%

(60 நிமிடங்களுக்குள் செய்துமுடிக்க முயற்சிக்கவும்)

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
## General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# தமிழ் - I

3 மணித்தியாலம்

ஆசிரியர் : ஜெஸ்மி.கு.மூசா
''அம்பாறை''

### பகுதி - 1

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரை நடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் உள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) உண்டாலம்ம விவ்வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினி தெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிரும் கொடுக்குவர் **பழியெனின்**
**உலகுடன் பெறினுங் கொள்ளல லயர்விலர்**
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

2) இன்மை ஒருவற்கு இழிவன்று சால் பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்
பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்
அற்றார்க் கொன்று ஆற்றாதான் செல்வம் **மிக நலம்**
**பெற்றாள் தமயள் மூத்தற்று.**
சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியை
தாழாது உஞற்றுபவர்க்கு.

மேலதிக தொடர்புகளுக்கு:-
'உதயன்' கல்விச்சுடர்,
263 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-071-4273035, 071-688005, 021-2229944

3) விண்ணிடை அடைந்தனன் என்ற வெய்ய சொல்
புண்ணிடை அயில் எனச் செவி புகாமுனம்
**கண்ணொடு மனம் சுழல் கறங்கு போல ஆய்**
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான்.
இரு நிலம் சேர்ந்தனன் இறை உயிர்த்திலன்
உரும் இனை அரவு என உணர்வு நீங்கினான்
அருமையின் உயிர் வர அயாவுயிர்த்தும் அகம்
பொருமினன் பல் முறைப் புலம்பினான் அரோ.

4) பெண்டி ரெலா மழுதரற்றப் பிள்ளைகளெல்லாங் கதறக்
கண்டு கேட்டவாரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டு துயெரெனுந் தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழி சோதாம் பதி போலப் பதைத்தேங்க
பொருவரிய பரலோகப் புத்தேளிர் புதுமையிதின்
மருவதெம் முடிவோ வென் றையுற்று மறுக்கமுறப்
சருவசிருட்டி டியுந்திகைத்துத் தமை மறந்து நிலைகுலைய.

02. ''அ'' பகுதியிலுள்ள கவிதையைப்படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அல்லது
''ஆ'' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாவலர் பெருமான்

அ) 1) திருவளர் தெய்வத் தமிழ் வளநாடு
செய்த தவப் பயனே, செந்தமிழ் மக்கள்
புத்தியினிக்குத் தெள்ளமுதே தேனே
வரமருள் சைவத் திரு நெறி யுய்ய
வந்தருள் தேசிகனே வாடிய பழைய
தமிழ் மொழி தழைய மழை பொழி கலை முகிலே
பரமத திமிரக் குரை கடல் சுவற
பருகிடு தவமுனியே பரனருள் நீறுஞ்
சிவமொழி வீறும் பரவிடவருள் குருவே
அருவளர் மதுரத் தமிழரை நடை செய்
ஐயா அடிபோற்றி ஆறுமுகப் பெரு
நாவல னாமத் தரசேயடி போற்றி.

2) அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென வகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடந் செய்யுநடை
பயின்ற தமிழ்ப்பாவை யாடகு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப் பயிற்றி வைத்த வாசான்
மன்னுமருள் நாவலன்றன் யழியானல்
லொழுக்க நடை வாழி வாழி.

3) பார்மதித்த செந்தமிழ்நூ லேடுகளை
யாராய்ந்து பதிப்பித் தோர்கள்
ஆர்ப்பதித்தாலுமங்கே பிழை நுழைத
லுண்டா, மவைக ளின்றிச்
சீர்பதித்த நற்பதிப்பு நாவலர் தம்
பதிப்பென்று செப்பு மேன்மைப்
பேர்பதித்த பெருங்கல்விச் செல்வனிரு
சேவடிகள் பெரிதும் வாழி.

4) தன்னவரும் பிறகு மென்று சாராமே
நடுவு நிலை சார்ந்து நின்றே
அன்னவர்கள் வழுவியவை அஞ்சாது
வெளிப்படுத்தி யறிவை யூட்டு
முன்னவனே தமிழ் மக்கள் முழுநிதியே
கற்பகமே முடியாக கல்வி
மன்னவனே யென வாழ்த்த வந்துதித்த
நாவலன்றாள் வாழி வாழி.

இவ் இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில்
திகழும் ஆசிரியர்களினதும், மூத்த அனுபமிக்க
ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள்
தொடர்ச்சியாக வெளிவரவுள்ளது.

1) நாவலர் ஆற்றிய அருந் தொண்டுகள் எனக் கூறப்படும் அனைத்தையும் தொகுத்துக் காட்டுக.
2) இரண்டாவது பாடலடியில் 'நடை' என்ற சொல் பல்வேறு பொருளில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றைத் தனித்தனியாகப் பொருள் விளங்குமாறு வேறுபடுத்திக் காட்டுக.
3) மூன்றாவது பாடலடியில் நாவலரின் சிறப்பு எடுத்துக் காட்டப்படுமாற்றை விளக்குக.
4) நாவலர் பெருமான் மீது சோமசுந்தரப் புலவர் கொண்ட ஈடுபாட்டை பாடலை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

அல்லது

ஆ) ''நா சண்டெக் காட்டுக்க இளச்சவளக்க'' என்று சொல்லிக் கொண்டே ராமாயி கட்டுத் தரைப்பக்கம் கழித்தட்டுக்களை ஒதுக்கப் போய்விட்டாள். முத்தம்மாக்களுக்கு இந்த நாடகம் விளங்கவில்லை. அப்போதும் சொந்தத் தாயை விட அதிகச் செல்லமாக ராமாயி வளர்த்துவருகிறாள். ஆதலால் ''சின்னம்மா நா உங்ககூட வர்ரே'' என்று யன்னலால் ஓடினாள் முத்து. ''உன்னையும் நாளக்கு அவளப்போல் ஒரு 'தட்டுவாணி' யாக்கிப் போடுவா. அங்கே போகாதே வா! அங்குபோகாதே'' என்று தன் மகளுக்கு நற்புத்தி கூறி நாகம்மாள் குழந்தையின் கன்னத்தில் ஒரு இடி கொடுத்துவிட்டு நடந்தாள். காலம் மகத்தான மாறுதலைச் செய்து வருகிறது. இந்தக் கர்வம், அதட்டல், அகங்காரம் எல்லாம் ஒரு நாளைக்கு மண்ணில் தலைசாய்ந்து விடும். ஒளியின் வேகத்திற்கும் ஓர் எல்லை உண்டு. வீணாக ஏன் மனதை அலட்டிக்கொள்ள வேண்டும். ஆனால், ராமாயி இந்த சித்தாத்தங்களை நினைத்தாகவே தெரியவில்லை. அவள் கண்களில் தழும்பிய நீரைத் துடைத்துக்கொண்டே கூடையிலிருந்த சாணியைக்குப்பைமேட்டில் கொட்டிவிட்டு கழித்தட்டுக்களை பொறுக்கிக்கொண்டிருந்த முத்தையாவைக் கூப்பிட்டாள்.
1) நாகம்மாள் என்ற பாத்திரம் பற்றிய உமது மனப்பதிவை வெளிப்படுத்துக.
2) ராமாயி என்ற பாத்திரம் மனதில் தோற்றுவிக்கும் உணர்வுகளைக் கூறுக.
3) இப்பகுதியில் காணப்படும் தத்துவக் கருத்தை எடுத்துக்காட்டி விளக்குக.
4) இப்பந்தியின் மொழி நடை பற்றி யாது கூறுகின்றீர்?

### பகுதி - 11

03. நல்குரவு எனும் அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு கீழ் வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
ஆ) நல்குரவின் கொடுமைகள்.
ஆ) நல்குரவு உடையாரின் குற்றங்கள்.
இ) ஏன் இவ் அதிகாரம் திருக்குறளில் வைக்கப்பட்டிருக்கிறது?

04. திருவடி சூட்டுப் படலத்தில் சித்திர கூடமலையை அடைந்த பரதன் இராமனது திருவடிகளைப் பெற்றுச்செல்லுவது வரையிலான பகுதியில்,
அ) இராமன் அரசாள்வதே தக்கதென இராமனுக்கு வசிட்ட முனிவர் எடுத்துரைத்த நியாயங்கள்
ஆ) வசிட்ட முனிவனை வணங்கி இராமன் உரைத்த தன்னிலை விளக்கம்
இ) திருவடியைச் சூடிய வண்ணம் பரதன் மீண்ட காட்சி *என்பவற்றை விளக்குக.*

5. இராஜநாயகத்தில்,
1) கஃபா அழுதமையும் இறைவனது ஆறுதலும்
2) சுலைமான் (அலை) கஃபாவில் இறங்கிச் செய்த பணிகள்
3) சுலைமான் அவர்களின் பெருமை என்பன எடுத்துக் காட்டப்படும் விதத்தை விளக்குக.

06. மகாகவி பாரதியார் என்ற வ. ராமசாமியின் கட்டுரையில்,
அ) பாரதியாரின் தோற்ற வர்ணனை
ஆ) பாரதியின் குணப்பண்புகள்
இ) உவமை அணிகள் கையாளப்பட்டுள்ள விதம் என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

07. கலிங்கத்துப் பரணியில் காடுபாடியது பகுதியில்,
அ) நில இயல்பும் நிழலின்மையும்
ஆ) காற்றின் இயல்பு
இ) உவமைகள் கையாளப்பட்டுள்ள விதம் என்பவற்றைத் தொகுத்துத் தருக.

08. நாகம்மாள் நாவலினை ஆதாரமாகக் கொண்டு
அ) மூட நம்பிக்கைக் கருத்துக்கள்
ஆ) தத்துவக் கருத்துக்கள்
இ) பிரதேசமொழி வழக்குகள் என்பவற்றை எடுத்துக்காட்டுக.

09. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை விளக்குக.
அ) ''யாயும் ஞாயும்'' என்ற பாடலில் அன்பின் உயர் நிலை சித்திரிக்கப்படுமாறு.
ஆ) உதிர்ந்த மலரில் ஆசிரியர் கையாண்டுள்ள பாடுபொருள்.
இ) பண்பாடு என்ற கட்டுரையின் நடை.
ஈ) வசந்த வல்லியின் அழகு திருக்குற்றாலக் குறவஞ்சியில் சித்திரிக்கப்படும் விதம்.
உ) இராம நாடகக் கீர்த்தனையில் இராவணன் கொலு வீற்றிருந்த கோலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org